# நெய்தல்



அலை 2

2004


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞ பழவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெய்தல் இதழுக்கான ஆக்கங்கள்:-


| | பக்கம் |
|---|---|
| ** உறவுகளுடன் ஒரு நிமிடம் | A |
| ** சுனாமி அனர்த்தத்தில் உயிர் நீத்த உறவுகட்காய் | 1 |
| ** சாயிரா பூமி - கவிஞர் முல்லையூரான் | 3 |
| ** நேர்காணல் - நாவாய் பாஸ் | 10 |
| ** நெய்தல் நிலத்துக்காரி... - டானியல் ஜீவா | 18 |
| ** நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக்கழகம் - நீ.அருளானந்தம் | 30 |
| ** கவிதை - இருளை அகற்று – அடைக்கலம் அல்பிரட் | 37 |
| ** எது வாழ்வு - ஆ. ஆசீர்தாசன் | 39 |
| ** இலக்கியச் சுவை - ஆ. விவேகானந்தன். | 41 |
| ** கவிதை – அ.ஜொலிமன் | 52 |
| ** நாவாந்துறை புனித பரலோக மாதா ஆலயத்தின் வரலாறு - யோ. பிரான்சிஸ் | 53 |
| ** தாய்மண்ணில் நான் கண்ட அன்னையின் தேர்த்திருவிழா - அ.கொன்சலாமேரி. | 55 |
| ** புலம்பெயர்வாழ் நாவாந்துறை இளைஞர் ஒன்றியம் | 56 |
| ** பயணித்த பாதைகளை திரும்பிப் பார்க்கின்றேன் - அருட்தந்தை மைக்கில்ராஜ் | 58 |
| ** மண்மனமும் இளைய படைப்புகளும் - சீமோன் (தமயந்தி) | 63 |
| ** முட்கம்பி வேலிக்குள் முகமிழந்து போன நிலை - அனுரா ஜசிதரன் | 66 |
| ** அலைதாங்கி - எழில்ராணி சிந்தாத்துரை | 69 |
| ** நாவாய் சென்மேரிஸ் சர்வதேச அபிவிருத்திச்சங்கம் - அறிக்கை | 72 |
| ** நூல் விமர்சனம் - உதயன் பத்திரிகை 26-09-2003 | 74 |
| ** உதைபந்தாட்ட போட்டியில் . . . நமது ஈழநாடு - 06-07-2004 | 78 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளோடு ஒரு நிமிடம்

'நெய்தல்' வாசக அன்பு நெஞ்சங்களே,

முதல் ஆண்டு நெய்தல் மலருக்கு கிடைத்த நல்வரவேற்புக்களும், பாராட்டுக்களும் குறிப்பாக நல்விமர்சனங்களும் இந்த இரண்டாம் மலரை உங்கள் கரங்களில் தவழவைத்தனவென்றால் மிகையாகாது. எமது ஊரை மாத்திரம் மையமாகக்கொண்டு, எம்மவர்களின் ஆக்கங்களிற்கு பெரிதும்

ஊக்கம் கொடுத்து வெளியிடப்பட்ட முதல் தொகுப்பானது (மலரானது) வேற்றிடத்து சகோதரர்களாலும் துல்லியமாக ஆராயப்பட்டு நல்விமர்சனங்கள் வெளியாகின. இம்மலரின் சிறப்பை வெளி உலகுக்கு கொண்டு வந்தவர்களை நன்றியுடன் நினைவு கூருகின்றோம். இன்று இலக்கியத்துறையில் பல படைப்புக்களைத் தந்து கொண்டிருக்கும் ஒரு சில எழுத்தாளர்களின் ஆக்கங்களையும் இம்மலரில் சேர்த்துள்ளோம். இது உண்மையில் எமது ஊர் மக்களின் ஆக்கங்களிற்கு பக்க பலமாக இருக்கும் என்பதும், எம்மவரின் ஆக்கங்கள் வெளி உலகிற்கும் கொண்டு செல்லப்பட்டு மேலும் ஊக்குவிக்கப்படுவர் என்பதும் எமது நம்பிக்கை. இம்மலரில் பலதரப்பட்ட ஆக்கங்கள் இடம் பெறுகின்றன. மழலைகள் தொடங்கி முதியோர்வரை குறிப்பாக உயர்தர மாணவர்களும் பயன் பெறும் வகையில்

ஆக்கங்கள் அமைந்திருக்கின்றன. அட்டைப்படம் பற்றிய உங்கள் கருத்தாழமிக்க சிந்தனைகளை கதை, கவிதை, கட்டுரை வடிவங்களில் பலர் அனுப்பி வைத்திருந்தனர். அனைவருக்கும் எமது நன்றிகள். அனைத்தும் தரமானவையாக இருந்தாலும் முதல் மலரில் குறிப்பிட்டது போல் பரிசுகள் பெறும் படைப்பாளிகளின் ஆக்கங்கள் இம்மலரில் இடம் பெறுகின்றன. அட்டைப்படம் பற்றிய சிறந்த படைப்புக்களைத் தெரிவு செய்துதந்த தெரிவுக்குழுவுக்கு எமது நன்றிகள். புலம்பெயர் வாழ்வில் பல இன்னல்களுக்கு மத்தியிலும் எமது மலர்க் குழுவுக்கு உற்சாகத்தினையும், மலருக்கான வடிவமைப்பினையும் பிரான்சிஸ் ஞானநாயகம் அவர்களும், அட்டைப்படத்தினையும் நல்லாலோசனைகளையும் தமயந்தி அவர்களும் செய்து வருகிறார்கள். இம்மலரானது உங்களது எழுத்திற்றிறன், சிந்தனைற்றிறன், வாசித்தற்றிறனை வளர்ப்பதற்காகவே மிக முக்கியமாக வெளிக்கொணரப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே எமது அன்பு உறவுகளே உங்கள் எண்ணக்கருத்துக்களை எழுதி அனுப்பிவையுங்கள். இலங்கை, இந்தியா, கனடா, பிரான்ஸ், பிரித்தானியா, ஜேர்மனி, நோர்வே போன்ற நாடுகளில் வாழும் எமதூர் மக்களுக்கு முடிந்தவரை ஆக்கங்களை எழுதி அனுப்பும்படி கேட்டிருந்தோம். எங்களுக்குக் கிடைத்த ஆக்கங்கள் அனைத்தும்

இம்மலரில் பிரசுரித்துள்ளோம். படைப்புக்கள் பற்றிய விவாதங்களில் இருந்து எம்மை விலக்கிக்கொள்கிறோம். படைப்புக்களிற்கு படைப்பாளிகளே பொறுப்பாவர். ஆண்டுக் கொருமுறை வெளியாகும் இம்மலருக்கு உங்கள் அனைவரினது ஒத்துழைப்புக்களையும் நல்லாசிகளையும் வழங்கி மேலும் வளர்ச்சியடைய உதவுமாறு அன்புடனும் தாழ்மையுடனும் கேட்டுக்கொள்கின்றோம்.

## மலர்க்குழு:

யூலியஸ் அந்தோனிப்பிள்ளை (நிமல்)
அருமைராசா ஆரோக்கியசீலன்
பாபு மைக்கல்ராஜா

## Layout :

பிரான்சிஸ் ஞானநாயகம்
யூலியஸ் அன்ரனி

**அட்டைப்படம்:** சீமோன் (தமயந்தி – நோர்வே)

**வெளியீடு:** நாவாந்துறை புனித மரியாள் அபிவிருத்திச்சபை
- நோர்வே

## தொடர்புகளுக்கு

Navanthurai dev.fond
Langarinden 144
5132 Nyborg
Norway



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுனாமியால் காவுகொள்ளப்பட்ட எமது உறவுகட்காய் . . .

இயற்கையின் சீற்றத்தால் கடலலை கொந்தழித்து நம்மக்களின் பல்லாயிரக் கணக்கான உயிர்களைத்தின்று, உயிர்தப்பியோரின் வாழ்விடங்களைப் பறித்து அகதிகளாக்கி விட்டது.
உலகம் அழகானது, இயற்கை அமைதியானது என நம்பிய எம்மக்களை இயற்கை கண்ணீரில் மூழ்கடித்து விட்டது. எம்மக்களின் துயரிலே நெய்தல் மலரும் பங்கெடுத்துக்கொள்கிறது.

## கடலலையே!

கடலலையே
அடங்கிவிட்டதா உனது கொதிப்பு
உன்னை நம்பி
இருட்டிலே படகோட்டி சின்ன மீன்களையும்,
குஞ்சு இறால்களையும், வெள்ளை நண்டுகளையும் பிடித்து
அன்றாடம் தம் வயிற்றுப்பசி போக்கி
வாழ்ந்து வந்தனரே எம் உறவுகள்
உன்னை நம்பி
உன் கரையிலே குடில்கள் அமைத்து
கோவில்கள் எழுப்பி, பாடசாலைகள் கட்டி
நீயே தஞ்சமென வாழ்ந்து வந்தனரே எம் உறவுகள்
அம்மா, கடல் தாயே, கடலன்னையே
என அன்றாடம் உன்னை வணங்கி வாழ்த்திப் போற்றி
வாழ்ந்து வந்தனரே எமது உறவுகள்
ஏன்தாயே
உனது எல்லை போதாதென்றா
எமது மண்ணுள் புகுந்தாய்
உனது மீன் குஞ்சுகளைப் பிடித்து
பசி போக்கியதற்காகவா
எமது உறவுகளின் உயிர்களைத் தின்றாய்


ஐயோ எத்தனை உயிர்கள்
பருத்த உடல்கள் போதாதென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சிளம் பாலகர்களையுமல்லவா
தின்று விட்டாய்
அடங்கி விட்டதா உனது கொதிப்பு
அடங்கி விட்டதா உனது கொதிப்பு
மரத்தால் விழுந்தவனை
மாடு ஏறி மிதித்தது போல்
இத்தனை காலமும் போரின் உக்கிரத்தால்
நொந்து ஒடிந்து
ஏக்கத்தோடும், கலக்கத்தோடும் வாழ்ந்துவரும்
எமது மக்கள் மீதா உனக்கு இத்தனை சீற்றம்
உனக்கு இத்தனை சீற்றம்
அம்மா, கடல்தாயே
உன்னை வணங்குவதற்காய் உயர்த்திய கரங்களை
இன்னும் நாம் இறக்கவில்லை தாயே
நீயும் எமக்கு எதிரியானால்
நாம் எங்கு செல்வோம் தாயே
நாம் எங்க செல்வோம் தாயே
- - - - - -

நெய்தல் குழுவின் சார்பில்
**யூலியஸ் அன்ரனி (நிமல்)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயிராப் பூமி

## கவிஞர் முல்லையூரான்

நான் ஒரு ஆப்கான் இளம்புலவன்.
ஐந்தாண்டுகளாய் முகம்வழிக்கக் காத்திருந்த பாவலன்,
இக்கரும் காலங்களிலெல்லாம்
என் பாடலுக்கும் மீசை இல்லை.
ஆனாலும் மனதுக்குள் பாடுவதில் அச்சமில்லை.
இன்றுதான் சவரம்செய்து முகம் திருத்தி
ஊரின் முற்றத்திற்கு வந்திருக்கிறேன்.
அழுக்கில் கிடந்த சர்பாணியைத் துவைத்தெடுத்து
வாசனைபூசி
தங்கமும் சிகப்பும் கலந்த தலப்பாபோட்டு
கத்திபடாத என்னரும் மீசையோடு பாடி
ஓர் தலப்பா கட்டிய இராசகிளியாட்டம்
இந்த என்காதற் காபுல் நதிக்கரையோரம்
காத்துக்கிடக்கிறேன்
என் காதல் புல்லாங்குழலின் வரவுக்காக.
எத்தனை ஆண்டுகளின் பின் என் யசுமினைக் கண்களால் கவ்வப்போகிறேன்,
என் தாகம் புரிகிறதா?
எத்தனை நாளிகை எத்தனை புற்களையும் கற்களையும்
கிள்ளி நதியினில் எறிவது?
அவள் வரும்வரைக்கும். . . .
இதோ! எனது இடுப்பிலிருந்து எடுத்து
என் புல்லாங்குழலை மீட்டியபடியே
என்னரும் காதலியைப் பாடுகின்றேன் பாருங்கள்!
ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு வயது இருபத்தி இரண்டு.
பச்சைப் பருத்தி வயல்களுக்கும் அப்பால்
அந்த மலையடிவாரத்தில் தம்பிமாரோடு பட்டம் விட்டு வானத்தை அழகாக்கிக்
கொண்டிருந்த நேரம். . . .

வந்தனள் என் இளம் பேரீந்தின் மலர்.
கையிலிருந்த பட்டம் கட்டறுக்க
என் மனதுள் புகுந்தாள் வடிவாய்ச் சிரிப்போடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றெல்லாம் அவளுக்கு வயது பதின்நான்கேதான்.
பக்குவமடைந்த பருவமலர்.
பார்த்துக்கொண்டிருக்கவே சிரிப்பை இளம் வெயிலாய் வீசி மறைந்தாள்.
அப்போது அறுந்த எனது காற்றாடி மலைமுகட்டில் தொங்கியபடி சிரித்தது.
இவள் எப்படி? எப்போது காபூலில் மலர்ந்தாள்?
எனக்கெனவே அவள் விழிகள் சிரித்தனவே
எனக்கெனவே அவள் கருங்குழல் அப்புறாமுகத்தில் ஆடியதே?
அவள் அன்று சிரித்தபோது இமைகளுக்குள்
ஓரங்கட்டிய குளிர்நீர் விழிகள்
நீரை நீரால் அள்ளுதல்போலும் அலையாய் என்னுள் விழுந்தாளே,
எங்கே என் கஞ்சா மலரே?
கனகாலம் உன் வதனபரிசம் இல்லாது தவிக்கும்
இப்புலவனை எந்தக் குகை அறைக்குள் தள்ளினாய்!
அன்றிரவு
தன்கடவுளாம் நிலாவில் யாரோ கால்வைத்த வஞ்சனைதீரா
என் பெற்றோர் புரண்டதென்ன நான் என் கம்பளத்தில் புரண்டேனே!
புரிவாயா யசுமின்.
ஓரு மரம் பூ மலர்த்திய மறுநாளே வந்த புயலென
அவர்கள் வந்தனர் ஆப்கான் கொடியை முடியொடு தூக்கினர்.
நாமே உங்கள் அரசு என்றனர்.
கைதொழுது சிம்மாசனத்தை துடைத்தெடுத்துக் கொடுத்தோம். அவர்களே
அமர்கவென்றே!
இருந்தனர் அவர்கள்.
கொஞ்சநாட்செல்ல. . . .
சிறுவர்களே பட்டங்களை கீழே இறக்குக,
மாதுக்கள் யாரும் வீட்டுக்கு வெளியே செல்லலாகா,
பெண்கள் யாரேனும் மினுக்கிச்சென்றால் தண்டனை இதுவென,
உச்சியிலிருந்து உள்ளங்கால் வரைக்கும்
மறைத்து மறைந்து ஓரு கரப்புக்குள் நுழையுங்களெனவும்,
இசைக்கும் புல்லாங்குழல்களையும் வீசித்தூரஎறிகவெனவும்,
தட்டி இசைக்கும் மேளங்களையும் நெருப்பிலிடுக என்றனர்.

ஓர் ஆங்கில வார்த்தையை கேட்பின்
ஆப்கான் தாங்காது என்றும் விதிசெய்தனர் அவர்கள்
வானலைகளுக்கு வேலிகள் நாட்டினர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைதூரங்களை மறைத்து வர்ணங்களுக்கு கருமை பூசினர்.
சாயிரா பிரமாணம் நங்கையர் யாவரும்
தம் முகம் தொட்டு உள்ளங்கால் வரை மறைத்து
பர்தாவில் ஒழிந்துகொண்டனர்.
பார்க்கமட்டும் விழிகளின் ஓரம் சாரளம் அமைத்து
வீதியெங்கணும் ஒழிந்து திரிந்தனர்.
வீட்டுக்குள் ஓரு நாலுசுவருள் சிலந்திவலை இறுக்கிய சாளரங்களுக்குள்
அவர்களுக்கு விடுதலை.
பாவம் தரும் உலகைவிலக்கி தவம் செய்கவென சாயிரா சொல்லியது.
இப்படித்தான் எந்தன் யசுமினும் ஆனாள்.
ஓரே ஒருநாள் பார்த்துச்சிரித்ததோடு
மலர்ந்த காதல் பர்தாவுக்குள் பரிதாபப்பட்டது.
நெஞ்சு கனக்க வீதியெங்கணும்
அந்த ஒருநாள் நினைவோடு கசங்கித்திரிந்தேன்.
எப்போதோ எல்லாம் அவளை அந்த சிறைப்பட்ட பர்தாவோடு நான்
அவளைக் கண்டதுண்டு.
அதுவும் அவளது வாப்பா அருகில் செல்வதை வைத்தே அவளென
உணர்வேன்.
அவள் அந்த விலக்கப்பட்ட வீதிகளில் ஊர்ந்தபோதெல்லாம்
புழுதியில் ஒட்டா மென்பாதங்களை தேடித் தோற்றுப்போகவும்,
காற்றெடுத்துப்போன உன் காலடியைத் தேடும் எனைப் பார்த்து
அப்பாதைப் புழுதிகள் என்னை பரிகசிக்கும்.
மலை முகட்டில் வற்றிய புல்லாய்
வார்த்தைவராப் புலவனாய் வாழ்ந்தேன்,
வாடி! என் காதலியே பாராயோ!
விழிகள் வற்றி முள்தரும் கனாக்களோடு
கரப்பொடு உன்னை எத்தனை நாள் குலவுவதோ?
கந்தகார் நகரத்து அப்பழம்பெரும் புத்தனின் உடைந்தசிலைக் கற்களாய்
இந்த சபிக்கப்பட்ட பூமியில் சிந்திக்கிடத்தல் தகுமோ!
சேர்த்தெடுத்து என்னை அந்தப் பழைய புலவனாக்கு
உன்னை கவிதை செய்கிறேன். நானும் நீயும் பாடிமகிழ.

அந்த உருக்கு நாட்களில்
நதியினில் எறியப்பட்ட ஓர் சுடர்
பேசியபடி அணைந்தது,
தன்னை எறிந்தவனை.
என்றொரு கவிதையை எழுதிப் புசித்தேன்.
ஈஞ்சி இலையொத்த இமையவளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றேனும் அந்தக் கரப்பை எறிந்துவிட்டு
உந்தன் கடல்காணா விழிகளோடு வரம்புகளை மேவி
உன் முல்லா எனும் நீ புதைந்த குளத்துள் வந்து நீந்தடி பெண்ணே!
யசுமின்!
இப்போதுதான் போர் போயிற்றே.
அவர்கள் போக அடுத்தவர்கள்
முடிபுனைந்து கொண்டனரே, இனிமேலும் சாயிரா எங்களை பிரிக்காது.
வா! இந்த ஊரை பார்த்து மகிழ்வோம்.
சிரிப்பைக்குலவி சிரிப்பைப் பிரசவிப்போம்.
இதோ! எங்கள் தேசம். . . .
தங்கக் கதிர்களை முகர்ந்தபடி பார். . .
இளம் பிறையோடு குலவிக்கிடந்த
எங்கள் ஆப்கான்,
தன் தரு மேலாடையை நீக்கி முனகியபடி
முகம்கழுவிக் கொண்டிருக்கிறது தனது காலைப்பொழுதில்.
தைமாதப் பனிவிலகா கணஅலம்பும் காலையில்
காபுல்நதி இன்று பதட்டமின்றிப் பாய்கிறது.
இந்த சந்தோசக் காலைக்குளிருக்குள்
மேனியை முழுதாய்ப் போர்த்தபடி தலப்பாக்களோடு
தங்கள் தாடியை உணாவியபடியே வீதியில் நிற்பர்.
பார்!
வாயிலும் நாசியிலும் ஆவிபறக்க அக்குடிகள்
அவர்களின் முடி போனதைப்பேசுவர் அன்றேல்
இரத்தம் படிந்த முடிஎடுத்து துடைத்துப்பூண்டுகொண்ட
அடுத்தவர்கள்பற்றியும் அவர்கள் பேசிக்கொண்டிருக்கலாம்.

கம்பளக் கடைக்காரன் ஒருவன்
தூசியைத்தட்டியபடி புதிதாய் தன் கடையை விரிக்கிறான்.
கழுதை ஒன்று தன் பழையசுமைகளோடு அவசரமில்லாமல் போகிறது.
அதை இறக்கிவைக்க.
சிறுவன் ஒருவன் தள்ளுவண்டியொன்றுடன் வீதியைக் கடக்கிறான்.
பழவியாபாரி ஒருவன் பூக்கடைக்காரனோடு பேசிக்கொண்டிருந்தான்.
உடைந்து தொந்துபொறியில் கிடந்தன பல கட்டடங்கள்.
தூரப்பார்த்தால் தூசிகளை துரத்தியபடி ஒரு சிறுவனின் மஞ்சள்வர்ணப்
பட்டம்
விண்ணிற் பாடியது.
வெடிமருந்துப் புகைமாறா இப்பூமியில்
நேற்றுவரை ஒரு போர்வீரன்போன அந்த ஒற்றையடிப்பாதையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் தோளில் தண்ணீர் சுமந்து செல்கிறான்.
மிதிவெடி பொறுக்கும் நேற்றைய வீரர்கள்
அவதானமாக பூமியை தடவினர்.
வெள்ளை அடிக்கப்பட்ட ஓர் உடைந்த சுவரில்
இடையிலும் ஒன்றை அரும்பி நுனியிலும் ஒன்றை மலர்த்தி
சுவரோடுசுவராக நின்றது ஒரு ரோஜாச்செடி.
தங்கமுலாம்பூசிய அரையுருண்டை முகப்பில்
இளம்பிறை பொறித்த பச்சைக்கொடியோடு பள்ளிவாசல் கம்பீரித்தது.
வானொலியை கேட்டுக்கொண்டுபோகும் ஒருவனை முந்திக்கொண்டு
அவசரமாய் இப்போதும் அந்த ஆட்கள் நிறைந்த இராணுவவண்டி
குண்டுவிழுந்த தெருவில் ஆடியபடி போனது.
காபுல் நகரைச் சூழ்ந்த மலைகளின் மேலால்
தோழில் கிடக்கும் குழந்தையைப்போல
அப்பெருமலைகளுக்குப் பின்னாலிருந்தும் மலைகள் அச்சத்துடன்
எட்டிப்பார்த்தன.
வாருங்கள் எங்கள் அரண்மலைகளே!
போர்தான் முடிந்துபோயிற்றே!
இனிமேலும் அச்சமென்ன
வெளிகளில் வாருங்கள் என்பேன்.

மோகனம் இசைத்தது.
குறுகிக்கிடந்த புல்லாங்குழல்கள் நீண்டு இசைத்தன.
எரிக்கச்சொன்ன தம்பட்டமும் தாளத்தோடு தரையில் வந்தன.
தந்தி அறுந்த வயலின் தாவணிகட்டிக்கொண்டு இசைத்து வந்தது.
பட்டங்கள் கானித்தன வானில்.
படமாளிகை தன்திரையை சலவையிட்டு வர்ணங்களுடன் ஓடியது.
மாதினர் எல்லாம் கரப்பைவிட்டு வெளியே வந்தனர் தம் அழகோடு.
இருந்தபோதும் என் ஆப்கானின் மக்களில் பலர் பசியோடு
பண்டங்களுக்காய் காத்து தட்டேந்தி நின்றனர்.
வழியில்வரும் வண்டியை ஓர் இராணுவக்காரன் துப்பாக்கியால் மறித்து
சோதனை புரிவான்.
அவர்களையும் கடந்து உடலை முழுமையாய் போர்த்தியபடி சிலபெண்கள்
கானோரம் நடப்பர்.
இந்த ஊரில் என் யசுமினும் வருவாளா?
ஆம் அவள் வருவாள்.
ஓர் கவியின் வாக்கு ஒருபோதும் பொய்ப்பதில்லையே!
அதோ என்னவள் வருகிறாள்.!
என்ன அழகு.
ஐந்து ஆண்டு முன்பாகப் பார்த்த முகமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிவீசும் இளம் பிறையா?
முழுநிலவா?
முத்தமிடப்படாத ஒரு மஞ்சள் கொடியா?
விசும்பியற்றும் பருத்திமலரா?
பாராய் பாராய்!
பாலா தேனா பேரீந்துப்பழமா?
மலைத்தேனா... மஞ்சள் மலரா நியரான் பாலைவன மண்ணா?
நிலத்துள் இருந்து வெடித்துவந்த கிரோயின் பூவே அமர் என்றேன்.
அமர்ந்தாள் என்னருகில்.
என்ன மாயம் நீ வெளியே வந்தனை!
இதை ஏற்றிப் பாடுவோம் எழுக! என்றேன்.
எழுந்தாள்.

நான் உன்னுள் வருகிறேன்,
நீ என்னுள் வா!
எங்கள் ஆடைகள் கரைக!
நிறங்கள் கலைக!
கரைகளைமேவி காற்றில் எழுக!
பாலைவன மணல்போல் சேர்ந்தே இணைவோம்!
காற்றே எமது உணவு, கடலே எமது தெய்வம்,
நிலமே எங்கள்வீடு, நெருப்பே எமது காதல்,
வெளியே எங்கள் பஞ்சணை!
சுலைமான் மலைத்தொடரை மிஞ்சி
அவளை ஆகாயத்தில் உயர்த்திக்காட்டினேன்,
யசுமின் கடலை முதல்முறை பார்த்தாள்.
வா!
இன்னமும் எழுவோம்,
கடலைத்தாண்டி, மலையைத்தாண்டி
எண்ணெய் வயல்களைத்தாண்டி
கீறப்படாத பூமியின் வரைகோடுகளைத் தாண்டி
புவியை இடமாய் வருவோம் வா!
கீழிருந்து மேலாய் அனுபவிப்போம் இவ்வுலகை வா யசுமின்!
வற்றாத நதிகளுமில்லை வாடாத மலர்களுமில்லை
வா! யசுமின்!
சகலதையும் புதிதாக புதிப்பிக்கவேண்டாமா?
வா!
எங்கள் சந்திர தெய்வத்தில் நபிகளை சந்தித்து
அவர்களின் கரங்களில் திருக்குரானை தருவோம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை திருப்பி எழுதச்சொல்லி
அன்றேல் எரித்துவிடச்சொல்லி.
இப்போதுதான் யசுமின் வாயைத்திறந்தாள். . . .
எட! கற்பனைப் புலவா!
நீ எனது விடுதலையில் சந்தோசப்படுவதில் நீ என்னைக் கண்டாய்,
அதனிலும்மேலாக உன்னையும்
இந்த வீதியையும், மலர்களையும் சனங்களையும்
திறந்தவானையும் என்னையும் கண்டேன். எனதுவிடுதலை எனக்கே
எனத் தெரிக. . . .
என்றனள் அவள்.
இப்போதுதான் காபுல் நதி பலமாக அலைசெய்தபடி ஓடியது.
அதற்காக வணக்கம் செய்தேன்
இந்த ஆப்கான் புலவன் யான்.
நதிகள் மண்ணில் தரிக்காது பாய்வது கற்பனை– – ஆனால்
அவை கடலில் சேர்வது உண்மை.
இந்த மதபூமியை வெல்கவென்று
காபுல்நதி ஓடியபடியே சொல்லிச்சென்றது.
– – – –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல் :

1978ம் ஆண்டின் தவக்கால ஆற்றுகையாக பரபாஸ் எனும் கலைச்சித்திரத்திரமும், 2004ம் ஆண்டின் தவக்கால ஆற்றுகையாக கல்வாரி கண்ட கடவுள் என்ற இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியும் யாழ்.நாவாந்துறை புனித மரியாள் ஆலய முன்றலில் மேடையேறின. இப்பிரமாண்டமான படைப்புக்களை நெறிப்படுத்திய திரு என். எம். பாலச்சந்திரன் அவர்களுடனான நேர்காணல்.

வணக்கம்.


- இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன்னர் நீங்கள் பரபாஸ் எனும் கலைச்சித்திரத்தினை எழுதி, தயாரித்து நாவாந்துறை மண்ணில் மேடையேற்றியிருந்தமை எங்கள் மனங்களில் இன்றும் பசுமையாய்ப்பூத்து நிற்கின்றது. அப்படைப்பினைப்பற்றி, அதில் பங்காற்றிய கலைஞர்களைப்பற்றி சொல்லுங்களன்.

இயற்கையாகவே கலைத்திறனைக் கொண்ட யாழ் நாவாந்துறை புனித மரியாள் பங்கு மக்கள் பாரம்பரிய நாட்டுக்கூத்திலும், மரபுநாடகங்களிலும், நவீன நாடகங்களிலும் பல சாதனைகள் புரிந்திருக்கின்றார்கள். இச்சாதனைகளுக்கெல்லாம் அடிப்படைக்காரணம் மாதா பக்தியென எம்மக்கள் நம்புகின்றார்கள். இவ்வகையான இறை நம்பிக்கையோடு 1978 பங்குனித்திங்கள் 16, 17ம் திகதிகளில் இப்பங்குமக்கள், அப்போதிருந்த பங்குத்தந்தை R.M.G.நேசநாயகம் அடிகளாரின் தயாரிப்பில் நல்லாயன் கன்னியரின் துணையோடு மேடையேற்றப்பட்டதுதான் பரபாஸ் எனும் மாபெரும்படைப்பாகும். இப்படைப்பில் நானே இயக்குனராகப் பணிபுரிந்தேன். பெரும் பொருட்செலவிலே தயாரிக்கப்பட்ட இப்படைப்பினை அரங்கேற்றுவதற்குப் பக்கபலமாக பல தொழில்நுட்பக் கலைஞர்கள் உழைத்தார்கள். பல முக்கிய கலைஞர்கள் பங்கேற்றார்கள். உடையமைப்பு ஒப்பனை குருநகர் நாடகக்கலைஞர் திரு.அன்ரன். இவர் "கண்திறந்தது" நாடகத்தின் நெறியாளர். மட்டுநகர் கல்முனை மகாவித்தியாலய அதிபராக இவர் கடமையாற்றுகின்றார். இவர்களுடன் சித்திரக்கலைஞர் திரு. தாசன் அவர்களும், மேடைபின்புலக் காட்சி அமைப்புகளில் மல்லாகம் திரு.ஏ.வி ஆனந்தன் தொழிலதிபர், சிற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியக்கலைஞர் அவர்களும், ஒலியமைப்பிலே திரு. மினி மகாலிங்கம் அவர்களும், ஒளியமைப்பிலே திரு. தவமணிநாயகம் அவர்களும் பணிசெய்ய காட்சியமைப்புகளின் மாற்றங்களை அமரர் எ. இராசகுமாரன் அவர்களுடன் திரு. எ. பாக்கியம், திரு. எ. ஆபிரகாம் அவர்களும் நிறைவுசெய்தார்கள். படைப்பின் உயிரோட்டமாக இசையினை இசைத்தென்றல் எம். யேசுதாசன். இவர் திருமறைக்கலாமன்றத்தின் இசையமைப்பாளர். இவருடன் வாத்தியக்கலைஞர்கள் செல்வி கோமலா வயலின், திரு. அருமைத்துரை கிற்றார், திரு. புலெந்திரன் தப்லா, திரு. எம். யேசுதாசன் ஓர்கன் இசைக்க பாடகர்களாக அமரர் திருச்செல்வம், திரு. துரை, திரு. ஸ்ரனி சிவானந்தன், செல்வி. யோகராணி திருமதி. அ. மலர், திருமதி. சி. செல்வி ஆகியோர் பாடியிருந்தார்கள். இப்படைப்பின் நெறியாள்கைக்கு திரு. ஜெனம் பிரான்சிஸ், திரு. பேர்மினஸ், திரு. எஸ். யெயசிங்கம், திரு. ஆனந்தன் ஆகியோர் பக்கபலமாக இருந்தார்கள். இணைப்பாளராக திரு. செ. எட்வேட்(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களுடன் திரு. பி. ஸ்ரனிஸ்லோஸ், திரு. மதியாவறணம் ஆகியோரும், விளம்பர எழுத்தோவியராக திரு. ஆரோக்கியநாதர் ஆகியோர் பெரும் பங்காற்றினார்கள். அரங்கில் தோன்றி தம்நடிப்பால் மக்களை அதிரவைத்த கலைஞர்களைக் குறிப்பிட்டேயாக வேண்டும். அமரர் செ. மைக்கல்ராஜா அவர்கள் பரபாஸ் பாத்திரமேற்று பரபாசுக்கு முத்திரைபதித்தார். ம. அருமைத்துரை அவர்கள் ஏரோது அரசராகத் தோன்றி பாத்திரத்துக்குப் புகழ்சேர்த்தார். அமரர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்செல்வம் அவர்கள் பிலாத்துவாக ரோமைச் சாம்ராச்சியத்தின் வல்லமையை, பண்பை வெளிப்படுத்தினார். அமரர் டானிசியஸ் அவர்கள் கைப்பாசாக மூர்க்கமாக நின்றார். அமரர் சிந்தாத்துரை அவர்கள் ஊதாரிப்பிள்ளையாக வந்து உணர்வுகளை வெளிப்படுத்தினார். இவர்கள் அனைவரும் பல்துறை சார்ந்த கலைஞர்கள். இவர்களுக்கு எமது அஞ்சலியினைத் தெரிவித்திருக்கிறோம். மூத்த கலைஞர்களான அமரர்கள் தொபியாஸ், சகாய் சந்தியோ ஆகியோர் சீடர்களாகப் பங்கேற்றார்கள். பண்புரைக்கவிஞரான திரு. யோ. பிரான்சிஸ் ஊதாரிப்பிள்ளையின் தந்தையாகவும், திரு. யோகராசா யூதர்தலைவனாகவும், திரு. ம. குணம் அன்னாசாகவும், திரு. ப. தீத்தூஸ், அ. ஆசீர்தாசன், அ. அமலதாஸ் ஆகியோர் பரிசேயர்களாகவும், அமரர் அ. ராசா கைக்குமானாகவும், அ. திலகமணி மரியமதலேனாவாகவும், ஆ. புனிதா ஏரோதியாளாகவும், பா.சார்மதி சலோமியாகவும், சோ. மைனா மரியாளாகவும், பா. சகாயமலர் யேவதி வெரோணிக்காவாகவும், இயேசுவாக அமிர்தநாதர், மகேந்திரன், அரியரூபன் ஆகியோரும், மரியநாயகம் யூதாசாகவும், சந்திரன் யோவான் அருளப்பராகவும், மழுவர்களாக அமரர்கள் லுக்கேஸ், டேவிட் ஆகியோர் பங்கேற்றார்கள். பரபாஸ் திருப்பாடுகளின் காட்சியின் கருவமைப்பானது பிரதான இறைபாத்திரமான யேசுவுடன் சட்டவிரோதக்குற்றவாளி கிரிமினல் பரபாஸ் ஒப்பீட்டுரீதியாக தனது மனித விடுதலையை நம்புவதும் பின்பு ஆன்மீகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுக்கொண்டு யேசுவைக் காண்பதற்கு அலைந்து சிலுவையை சின்னமாக அணிந்து கிறிஸ்தவனாக மாறியமையாகும்.

- இம்முறை 2004ம் ஆண்டிலே நீங்கள் கல்வாரி கண்ட கடவுள் எனும் மாபெரும் படைப்பை நாவாந்துறை மண்ணில் அரங்கேற்றியுள்ளீர்கள். பரபாசுக்குப் பின்னர் மீண்டும் இவ்வாறான படைப்பை மேடையேற்ற வேண்டும் என்ற எண்ணம் எவ்வாறு தோன்றிற்று?

எங்கள் மண்ணிலே எங்கள் அரங்கிலே பல பிரமாண்டமான படைப்புக்கள் அரங்கேறியிருக்கின்றன. இக்கலையுலகில் சமுக நிகழ்வுத் தாக்கங்களால் கவரப்பட்டு இன்னும் சாதிக்கவேண்டும் என்ற அவாவினால் அதற்குத்



தேவையான முறையில் என்னை வளர்க்கின்ற ஒரு நிலையினை நான் ஏற்படுத்திக் கொண்டேன். 1978இலே பரபாஸ் திருப்பாடுகளின் காட்சி எனது மண்ணிலே மேடையேற்றி பின் இடம்பெயர்ந்த மன்னார் மாவட்டத்திலே 1996இல் விடத்தல்தீவில், 1997இல் தலைமன்னாரிலும் "கல்வாரியில் கருணை மழை" என்ற திருப்பாடுகளின் காட்சியை நெறிப்படுத்தி மேடையேற்றினேன். இதன் பின்னர் கல்வாரி கண்ட கடவுள் எனும் படைப்பினை மன்னாரில் மேடையேற்றுவதற்கு பல தடவைகள் முயன்றபோது பல வழிகளிலும் தடைகள் வந்துகொண்டேயிருந்தது. அவ்வேளையிலே நாம் எப்போது நாவாய் மண்ணுக்குப் போவோம் அங்கு மேடையேற்றுவோம் என எண்ணியதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இந்த வேளையில் எம்மை பரலோகத்தாய் அம்மண்ணுக்கு அழைத்தாள். பெரும்பான்மை மக்கள் மீண்டும் ஊர் சேர்ந்தோம். எமதூரிலுள்ள மக்கள் அனைவரிடத்திலும் கலைத்திறன் இருக்கிறது. அதனாலேயே துணிவோடு இம்முயற்சியில் இறங்கினேன்.

- இப்படைப்பை மேடையேற்ற வேண்டும் என நீங்கள் எண்ணிய பொழுது உங்களுக்கு உந்துசக்தியாக யாரேனும் இருந்தார்களா?

எமது பங்குத்தந்தை அருட்திரு கருணாரெட்ணம் அவர்கள் என்னைத் தட்டிக்கொடுத்து இதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்படி ஊக்கப்படுத்தினார். எமது பங்குத்தந்தை அவர்கள் கலை ஆற்றல் மிக்கவர் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். தவிரவும் பங்கு மக்கள் பலரும் ஆதரவாக இருந்தார்கள்.

- "கல்வாரி கண்ட கடவுள்" ஆற்றுகையிலே பங்குபற்றிய கலைஞர்கள் பற்றிக் கூறுங்களன்.

கலைஞர்களைப் பொறுத்தவரை நாவாய் மண்ணுக்குப் பஞ்சமேயில்லை. எங்கள் மண்ணில் புதைக்கப்பட்டவர்களெல்லாம் விதையாகி விருட்சமாகி இன்னுமின்னும் விதைகளைச் சொரிந்து கொண்டுதான் இருக்கிறார்கள். எழுத்தாளர்கள், கவிஞர்கள், பாடகர்கள், நடிகர்கள், ஒப்பனையாளர்கள்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலி, ஒளியமைப்பாளர்கள் இப்படி அனைத்துத் துறைகளுக்கும் பஞ்சமேயில்லை எனலாம். நாவாய் மண்ணுக்கு இவையென்றும் நிரந்தரச் சொத்தாகத்தான் இருக்கும் என்பதை பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். நிகழ்ச்சியினை எமது மண்ணின் முதற்கனியான அருட்தந்தை அ. ம. ஸ்ரீபன் (செபமாலைதாசர்சபையின் இலங்கை முதல்வர்) அடிகளார் தலைமைதாங்க, பிரதமவிருந்தினராக அருட்தந்தை நீ. மரியசேவியர் (திருமறைக்கலாமன்ற இயக்குனர்) அடிகளார் கலந்துகொண்டு சிறப்பித்தார். முன்னூறுக்கும் மேற்பட்ட கலைஞர்கள் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை இருபாலாருமே "கல்வாரி கண்ட கடவுள்" அரங்கை நிறைத்தார்கள். 1987இலே பரபாஸ் திருப்பாடுகளின் காட்சியிலே பங்காற்றிய கலைஞர்கள் பலர் இன்று இல்லை. அவர்களின்



இழப்பு எமக்கு மாபெரும் தாக்கமாகும். இருந்தபோதும் அவர்களது வாரிசுக்கள் இம்மேடையில் தோன்றி சாதனை புரிந்துள்ளார்கள். அரங்கத்திலே பின்புலக்காட்சிகளாக சிறப்பாக ஓவியங்களைத் தீட்டிநின்ற பெர்னாண்டோ, இந்திரன் ஆகியோரைக் குறிப்பிட்டாக வேண்டும். பிலாத்துவினுடைய மேடையமைப்பிலே முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திய கலைஞர்கள், தொழில்நுட்பக்கலைஞர்களையும் நினைவு கூருகிறேன். 300 கலைஞர்களுக்கும் ஒப்பனை செய்து அவ்வப் பாத்திரங்களாக மாற்றியிருந்தார் பல்கலைவேந்தர் திரு. தைரியநாதன் அவர்கள். இப்பணிக்கு அவரது மைந்தனும் துணைபுரிந்தார். ஒலியமைப்பினை பிரபல ஒலியமைப்பாளர் மினி மகாலிங்கமும், ஒளியமைப்பினை கோப்பாய் மனோலைற்றர் அவர்களும் திறம்பட அமைத்தனர். படைப்பின் உயிரோட்டமாக விளங்கியது இசையமைப்பு எனலாம். இதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையமைப்பினை ஈழத்தின் பிரபல இசையமைப்பாளர் கண்ணன் அவர்களும் அவரது புதல்வரும் இணைந்து மிகச்சிறப்பாக இசையமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதிலே பாடகர்களாக நானும், சேவியர் நவநீதன், அனுரா ஜசிதரன், அருட்தந்தை ஸ்ரீபன் அடிகளார், இவர்களுடன் எமது கோவில் பாடகர் குழாமும் இணைந்து சிறப்பித்தது.

- பொதுவாக இவ்வாறான படைப்புக்களை மேற்கொள்ளும் போது பலவழிகளிலும் சோதனைகள் ஏற்படுவதுண்டு. நீங்கள் ஏதேனும் தடங்கல்களை சந்தித்தீர்களா?

மிகவும் கனத்த நிலையிலே நாம் அதனை நகர்த்த வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டோம். எமது பங்குத்தந்தை எதிர்பாராத விதமாக மிகப்பெரிய விபத்தில் சிக்குண்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இருந்தாலும் அவர் எங்களைப் படுக்கையில் இருந்தவாறே வழிநடத்திக்கொண்டிருந்தார். நான் வைத்திய சாலைக்கு அவரைப் பார்க்கச் சென்றிருந்த போது அவர் என்னை அழைத்து பாலா திருப்பாடுகளின் காட்சி மேடையேற வேண்டும். "கல்வாரி கண்ட கடவுள்" சோடிக்கப்பட்ட பெண்ணாக தொடர்பு சாதனங்கள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்ட பின்னர் நீங்கள் பின்னடைவை சந்தித்தால் நாளை செய்தியாக வெளிவரும் "கல்வாரி கண்ட கடவுள்" இடுப்பொடிந்து வைத்தியசாலையில் கட்டிலிலே முடங்கிக்கிடக்கிறதென. எனவே இப்படைப்பு மேடையேறவேண்டும்,



எனக்கூறியதோடு வைத்தியசாலையில் கட்டிலிலிருந்து கொண்டே எமக்குப் பலவழிகளிலும் உதவிபுரிந்தார்.

- கலைத்துறையில் பலகோணங்களிலும் நீங்கள் சிறந்தவரென்பது எமக்குத் தெரியும், இருப்பினும் இவ்வாறான இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியினை நெறிப்படுத்துவதற்கு பெரும் ஆற்றல் வேண்டும் இதனை எவ்வாறு கற்றுக் கொண்டீர்கள்?

பல்துறை அறிவினை இறைவன் மூலம் பெற்றுக்கொண்ட நான், இவ்வாறான பெருங்காட்சி நாடகங்களை நடாத்துகிறேனென்றால் என்னுடைய அனுபவப் பாதையிலே கலையின் அப்பெரிய சுமையையும் சுமக்கும் திடத்தைத் தந்தவர்களுள் யாழ் திருமறைக்கலாமன்றத்தின் இயக்குனரான கலைத்தூது பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகளார் குறிப்பிடத்தக்கவர். இலங்கையில் பெருங்காட்சி நாடகங்கள் அதிலும் கத்தோலிக்க நாடகங்களை மேடையேற்றிய பெருமை கலைத்தூது அவர்களையே சாரும். 30 வருடங்களுக்கு மேலாக திருமறைக்கலாமன்றத்திலே நான் இயங்கி வருகிறேன். அப்பரந்துபட்ட களம் எனக்குப் பல பாடங்களை கற்றுத் தந்திருக்கின்றது. அதுவே இப்படைப்பின் வெற்றிக்கெல்லாம் காரணமாக இருந்துவருகின்றது. தவிரவும் எனது மண்தந்த பாடங்கள் ஏராளம், எனது பாடசாலையில் வெறுமனே புத்தகப் பாடங்களோடு மட்டும் நின்றுவிடாது கலையையும் கற்றுக் கொண்டேன். இவ்விடத்தில் எனதூரின் மூத்த கலைஞர்களிடத்திலும் பல பாடங்களைக் நான் கற்றுக்கொண்டேன் எனலாம்.

- “கல்வாரி கண்ட கடவுள்” மேடையமைப்பின் சிறப்புப்பற்றிச் சொல்லுங்களேன்.

இலங்கையின் நாடக வரலாற்றில் மிக நீளமான மேடையொன்று அமைக்கப் பட்டதென்றால் அது எமது கல்வாரி கண்ட கடவுள் மேடையாகத்தான் இருக்கும். 150 அடி நீளமான, 16 அடி அகலமான, 5அடி உயரமான மேடை. இதன் அமைப்புக்கு எமது இளைஞர் ஒன்றியம் பெரும் சக்தியாக இருந்தார்கள். இளைஞர் சக்தி மாபெரும் சக்தியென்பதை இம்மேடை அமைப்பிலே அவர்கள் படைத்துக்காட்டினார்கள்.

உங்கள் கலைவாழ்வு மேன்மேலும் சிறக்க நெய்தலின் வாழ்த்துக்கள்.
நன்றி
சந்தித்தவர்: ய்லியஸ் அன்ரனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெய்தல் நிலத்துக்காரி....

( சிறுகதை)

- நாவாந்துறை டானியல்ஜீவா -

கொழும்பில் நான் தங்கியிருந்த காலத்தில் ஒரு சிங்கள வீட்டில் தான் நானும், வரதனும், ரமேசும் சாப்பாடு எடுத்து சாப்பிடுவது வழக்கம். இன ஐக்கியத்தை ஏற்படுத்துவது அல்ல எங்கள் நோக்கம். அல்லது சாப்பாடு சிங்களவர்கள் ருசியாக சமைப்பார்கள் என்பதற்காக அல்ல. 'கிராண்பஷார்' வீதியில் உள்ள அந்த வீட்டுக்குப் போய் சோத்துப் பார்சல் எடுப்பதன் நோக்கம் நிறையச் சோறும் கறியும். அடுத்து மிக விலை குறைவானதுமே. இந்த வீட்டை எனக்கும் வரதனுக்கும் அறிமுகப்படுத்திய பெருமை ரமேசையை சேரும்.அவன் நன்றாக சிங்களம் பேசக்கூடியவன் அத்தோடு ஆங்கிலமும் ஓரளவு இலக்கணமுறைப்படி பேசக்கூடியவன். புனித பெனடிக்ற் கல்லூரியில் வர்த்தகப்பிரிவில் படித்தபின் யாழ்ப்பாணப் பக்கமே வராமல் கொழும்பிலேயே தங்கிவிட்டான். வரதன் உயர்தரம் கணிதப் பிரிவில் யாழ் மத்திய கல்லூரியில் படித்தவன். நான் வைதீஸ்வரா கல்லூரியில் உயர்தரம் கலைப்பிரிவில் கல்வி கற்றவன். மூன்றுபெருமே மனதளவில் படித்து பட்டம் பெறவேண்டும் என்ற ஆசையை வளரத்தவர்கள்தான். அது நிறைவேறாமல் போனதால் வெளிநாடு செல்லும் எண்ணத்தோடே யாழ்ப்பாணத்தை விட்டு நானும் வரதனும் கொழும்பு வந்து சேர்ந்தோம். இங்கு வந்த நாட்களில் இருந்து மூவரும் சாப்பாட்டு பார்சலை எடுத்து எங்கையாவது வைத்து சாப்பிடத் தொடங்கினால் நடைமுறை வாழ்க்கையில் இருந்து நாவாந்துறை நெய்தல் நிலத்து வாழ்க்கை வரை பேச்சு நீண்டு சிதறி விரியும். அனேகமாக ரமேஸ் எங்கள் இருவரில் இருந்தும் ஒரு வகையாக சமகால வாழ்வை, வாழ்வு கொள்கின்ற நெருக்கடிகள்,சமூக ஏற்றத் தாழ்வுகள், சாதிப்பிரச்சனை, மதப்பிரச்சினை பற்றி எல்லாம் காரசாரமாக கதைக்கும் போது ரமேஸ் மௌனமாக இருந்தாலும் சில வேளைகளில் ஏதேனும் சொல்வதற்காக அவனிடம் இருந்து வார்த்தைகள் உதிர்ந்தால் அவை நானும் வரதனும் கதைப்பதற்கு எதிர்மாறாகவே இருக்கும். சமூக நெருக்கடிகளுக்கு எப்போதும் அவனுடைய சமரசப் பார்வையையே முன் வைப்பான். அறிவில் கொஞ்சம் எங்களை விட உயர்ந்தவன் என்றாலும் இந்த சமூக அமைப்பின் நெளிவு சுழிவுகளை சரியாக புரிந்து கொண்டவன். இந்த விடயத்தில் வரதன் ஓரளவு என்றாலும் ரமேசின் பாசையில் என்னைச் சொல்லப் போனால் பிழைக்கத் தெரியாதவன் போக்கு. இப்படித் தான் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை மூன்று பேரும் சோத்துப் பார்சலை எடுத்து சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் போது ரமேஷ் கேட்டான் வரதனிடம்;
"வரதன் இரவுச் சாப்பாடு என்ன மாதிரியடா...?"
"இரவுச் சாப்பாட....ரமேஸ்! சாப்பிடுவதை நினைத்தாலே இப்ப சாப்பிட்டசாப்பாடும் உடனே செமிக்குமடா....."
நாங்க மூவருமே விழுந்து விழுந்து சிரித்தோம். கொஞ்சம் நகைச்சுவை உணர்வு கலந்த போக்கிலேயே வரதன் எப்போதும் கதைப்பது வழக்கம். மீண்டும் ரமேசே ஒருகேள்வியை வேணுமென்றே போட்டான்.
"என்ன வரதன் உங்கட கொப்பர் வாத்தியாரராக இருந்து கொண்டு உங்களையும் படிக்கவைத்து ஆள்க்கியிருக்கிறார், அதோட அவரும் சட்டக் கல்லூரியில் படித்துக் கூடமுடித்து விட்டார். நீ மட்டும் ஒரு முன்னேற்றம் இல்லாமல்.... உன்னை நான் முதல்லபார்த்த மாதிரியே இப்பவும் இருக்கிறாய் எப்ப தான் உன்ர வாழ்க்கையில முன்னேற்றம்வருமடா?"
வரதன் புன்னகைத்துக் கொண்டு;
"உங்களோடு நான் திரிந்தால் எப்படியெடா உருப்படுவன்;... ஏதோ நீயோ சிவாவோ முன்னேற்றத்தின் உச்சியில் இருந்து கதைப்பது போல் அல்லவா உன்ர கேள்வி கிடக்கிறது?"
நான் மௌனித்து விட்டேன். மௌனத்தின் ஆழத்தில் இருந்து கொழும்பு நகர்ப்புற வாழ்வு மனதில் நகர்ந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள கரையோர நகரப்பகுதியான நாவாந்துறையில் இருந்து புறப்பட்டு வந்த காலத்தில் இருந்து கொழும்பில் லொட்சில்தங்கியிருக்கும் காலம் வரை வெறுப்பும் விரக்தியும் வறுமையும் கூடவே என் வாழ்வின்மீது கவிந்து கிடந்தாலும் என்னால் ஊருக்கு திரும்ப முடியாத மனவிறுக்கம். விரும்பியோ விரும்பாமலோ மனதில் வரித்துக் கட்டிக்கொண்டு விட்டேன். லொட்சில் வெறும் விறாந்தையில் தூங்குவதற்கு மட்டும் நாற்பது ரூபாய். அறை எடுத்து தங்குவதாக இருந்தால் இருநூறுக்கும் அதிகமாகும். உழைப்புப் பிழைப்பு இல்லாமல் இருத்தலில் இந்தச் செலவீனத்தை எப்படித் தாங்கமுடியும். இதற்கிடையில் வீட்டில் தங்கச்சியிடம் இருந்து வேறு காசு கேட்டு கடிதம் வரும். ஒரு தடவை கோபத்தில் கடிதம் ஒன்று தாறுமாறாய் பேசி எழுதிவிட்டேன். பின்னர்தான் யோசிச்சன் அப்படி எழுதியது தவறு என்று. இப்படித் தான் வீட்டில் இருக்கும் போது சில வேளை கோபத்தில் பேசிவிட்டு மனதால் புழுங்கிச் சாவேன். கோபம் வருவதற்கு காரணமோ அன்றில் காரணமற்றோ எழும் வேளையில் சினந்து கடிந்து கொள்வேன். பின்னர் ஓய்வில் மனம் உறங்கும் போது அதற்கான காரணத்தை ஓடவிட்டு பிடிக்கும் போது அதற்குள் அற்பத்தனமான விடயமே மலிந்து கிடக்கும். கொழும்பு நகர வாழ்க்கையை என் வாழ்நாளில் எப்போதுமே நான் கண்டது கிடையாது. இந்த வாழ்க்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்நாளில் அனுபவிச்சவனும் இல்லை. அதனால் நகர நாகரீகத்தை அடியோடு என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது தவித்தேன். அதற்கு என்னொரு காரணம் என்னுடைய இயல்பான சுபாவமும் தான். சூரியனும் நிலவும் எந்தளவு ஒளியைக் கொடுத்தாலும் அவை எட்டாதா தூரத்தே நிற்பது போல் தான் என் காலைச் சாப்பாடும் இரவுச் சாப்பாடும். வாய்க்குழிக்கு வரமறுக்கும். அந்த நினைவோடு நின்றுவிடும். இதை விட கொழும்பில் எப்பபோதுமே தமிழனுக்கு பதட்டமான சூழ்நிலை தான். அதுவும் வடக்கு கிழக்கில் இருந்து வெளிநாடு செல்வதற்காகவோ அல்லது உறவினர்களிடம் வெளிநாட்டில் இருந்து பணம் வாங்குவதற்காகவோ வந்து தங்கி நிற்பவர்கள் சொல்லொணாத் துயரம் அனுபவிப்பார்கள். அடிக்கடி இரவில் பொலிஸ் வந்து பாய்வதும், விசாரணை என்ற பெயரில் பெடியளை பிடித்துக் கொண்டு போவதுமான நிலையில் மனம் நிம்மதி அற்று ஒவ்வொரு இரவும் பீதியில் நிறைவுறும். இன்றிரவு பொலிஸ் வருவானோ நாளை இரவு வருவானோ என்றெல்லாம் மூச்சுத் திணறும். பெற்றா பொலிஸ் நிலையத்தில் இருந்து விசாரணைக்காக கைது செய்யப்பட்டு விடுதலையானவர்களின் கதை கேட்டால் கண்ணீரிலே என் இதயம் ஈரமாகிவிடும். மரணப்பீதி நான் சுமந்து வாழ்ந்த காலத்தில் வாழ்வு கரிகியும் தேய்ந்தும் உறங்கிக் கிடந்தது. எதுவுமே நிரந்தரமில்லையென்ற எண்ணம் நெஞ்சுக்கு புலப்பட்டு நெடுநாட்களாகி விட்டது. எனக்கு கொடுக்கப்பட்ட வாழ்க்கையின் எல்லையைத் தாண்டி ஒரு நிமிடம்கூட என் உடலிருந்து உயிர் இருக்க முடியாது என்பதை அம்மாவின் இழப்பினுடாக கிடைத்த அனுபவம் என்று சொல்வதிலும் பார்க்க இதுதான் நியதி என்று நிம்மதி கொண்டேன். என் வாழ்வின் நோக்கென்ன....? அதைக் கண்டடைய வேண்டுமென்று என்னையறியாமலேயே எனக்குள் எப்போதும் ஒரு உறுத்தல். அதனால் ஒவ்வொரு நிமிட இருப்பையும் இனிமையாக்க வேண்டுமென்ற முனைப்பு. ஆயினும் இப்போது மனசு வலித்தது. என் கண்களில் மேகத்திரள் கருக்கட்டியது. இருட்டைக்கிழிக்கும் ஒளியொன்று எழத்தான் வேண்டும். எழும் என்ற நம்பிக்கை உண்டு. அது காலத்தின் கட்டாய தேவை என்பதை மனம் அடிக்கடி முணுமுணுத்தாலும் தற்போதுள்ள வாழ்க்கையை எப்படி வெற்றி கொள்வது என்பதே என் முன் கேள்விக் குறியாக உள்ளது. என்று மனதுக்குள் வார்த்தைகளைப் போட்டு பிசைந்து கொண்டு இருந்த வேளைதான் ரமேசின் காட்டுச் சத்தம் என் நினைவைச் சிதறடித்தது. ரமேஸ் வரதனைப் பார்த்துக் கொண்டு "என்னடா வரதன் இவனுக்கு நான் சொன்ன வார்த்தை சுட்டுப்போட்டுது போல"என்றான்.

நான் சிரித்துக் கொண்டு....

"எனக்கு அப்படி ஒன்றும் சுடவில்லையடா... வீட்டிலேயே எவ்வளவோ திட்டை வாங்கிக் கொண்டுதான் வாழ்ந்தனான். இது பெரிய பேச்சாடா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லையென்றால் அப்படியென்னடா யோசனையில் லயத்திருந்தனி? ஒரு வேளை
காதல் தந்த கடும் தழும்புகள் நினைவில் வந்து விட்டதோ?"
"நமக்கெல்லாம் காதலா...? அப்படித்தான் காதல் வந்தாலும் 'முனியப்பதாசன' சொன்னது போல் 'ஒரு நிமிடப் பூக்கள்'தான்".
"நீ முனியப்பதாசன் என்று சொல்லத்தான் ஒரு விசயம் ஞாபகத்தில் வருகுதடா..."
"என்னடா ரமேஸ்! என்னை எக்கச் சக்கமாக யோசிக்க வைக்காமல் சட்டனச் சொல்லன்டா"
"சிவா நீ ஆனா யேசுராசாவின் அறியப்படாதவர்கள் நினைவாக கவிதைத் திரட்டை கேட்டாயல்லவா?"
"ஓம் அதுக்கென்ன?"
"அதுக்கென்னவா...? நானும் உன்னைச் சந்திக்க வரும் போது ஒவ்வொரு முறையும் மறந்து போய்விடுகிறன்....".
"இப்பயென்ன நாம மூவரும் நடந்தே உன்ர அறைக்குப் போய் எடுத்து வந்தால் போச்சு..."
"உனக்கு என்ன சொன்னனான்..... நினைவில்லையோ..."
"என்னடா..?"
"சிங்களச் சனம் அறையை வாடகைக்குத் தரும் போதே எழுதப்படாத கொண்டிசன்போட்டவங்க என்று ஒன்று சொன்னனே ஞாபகம் இருக்கா....... அதிகம் ஆட்களை கூட்டிக்கொண்டு வரக்கூடாது என்று சொன்னவையல்....?"
"...ஊம் இது பற்றி சொன்னனீதான் ஆனா மறந்து போய்ற்றன்".
"நல்ல சனம் ஆனால் பொலிஸ் கிலிஸ் எண்டு வந்தால் பயப்பிடுங்கள். அதுகள் ஒரு சோலி சுறட்டில்லா சனம்".
"அப்ப என்ன செய்யலாமடா?"
"பக்கத்திலதான்டா என்ர அறை நடந்து போய்ற்றே வாறன்.... நீங்க இங்கேயே இருங்கடா."
"நானாவது வரவாடா?"என்று வரதன் கேட்டான். ரமேஸ் சற்று யோசித்துவிட்டு "சரி வா வரதன்"; என்றான்.
"நான் இந்த இடத்திலேயே இருக்கிறன் நீங்கள் போய்ற்று வாங்க" என்று சொல்ல சரி என்று தலை அசைத்துக் கொண்டு ரோட்டை கடந்து வீட்டைத் தேடி இருவரும் நடந்தார்கள். நான் போகும் திசையை நோக்கி கண்களை மேய விட்ட படி மறையும் வரை பார்த்துக் கொண்டே இருந்தேன். அவர்களின் உருவம் மறைந்து போக மெதுவாக எனது தனிமை உணர்வு உள்ளத்தில் உறைந்து மீதியாய்த் தேங்கி நிற்கும் நினைவுகள் மெல்ல மனதில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசிந்தது. பரிமளா... ! அவள் நெய்தல் நிலத்துக்காரி. இடுப்புடைய இடர் வந்து நொந்தாலும் நோய்யென்று படுக்கையில விழுந்தது கிடையாது. நெருப்பைச் சுமந்து நிழல் தேடும் அவள் மனம். ஆயிரமாயிரம் தடவை அழுது கண்ணீர் விட்டு பரலோக மாதாவிடம் மண்டியிட்டு ஒவ்வொரு கோரிக்கைகளாய் ஒப்பிவித்த போதும் இன்று வரை மிஞ்சியிருப்பது அவள் வடித்த கண்ணீர் மட்டும் தான். நாவாந்துறையில் இருந்து கொஞ்சம் வெட்டி எறிந்த துண்டுபோல பொம்மை வெளி. இந்த குடியேற்றத்திற்கு போவதற்கு குறுக்காக நடைபாதைவழி இருக்கிறது. பொம்மைவெளியோடு ஒட்டி நிற்கும் குடியேற்றத்திட்டந்தான் சூரியவெளி.

சூரியவெளிக்கும், பொம்மைவெளிக்கும் இடைப்பட்டு ஒரு வயல்வெளி அந்த வயல் வெளியில் பலர் சொந்தமாக காணிவாங்கி வீடு கட்டினார்கள். பொம்மைவெளி, சூரியவெளி என்ற வரிசையோடு கவிதை நடையிலேயே இந்த வயல் வெளி 'அறுகுவெளி'யாய் பெயர் மாறியது. பரிமளா இந்த அறுகுவெளிக்குள்ளேயே காணிவாங்கி குடிசையொன்று போட்டு வாழ்ந்து வந்தாள். சூரியவெளியையும், பொம்மைவெளியையும் ஒட்டினால் போல் காரைநகருக்குப் போவதற்குரிய பிரதான ரோட்டுப் பாதையுண்டு. இந்த ரோட்டைக் கடப்பதற்கு முன் ஒரு வெள்ளை வீடு ஒன்று தனித்து இருக்கின்றது. நாங்கள் ரோட்டைக் கடந்து நெல்லுப் பிடுங்குவதற்காக செல்கின்றபோது இந்த வெள்ளை வீட்டுக்குப் பக்கமாக போய்வருவோம். இந்த வீட்டில் ஏதோ பேய் உலாவுவதாகவும் கதைகள் உண்டு. அந்த வெள்ளை வீட்டின் சுவரின் மேல் ஏறி ஒரு நாள் எங்கே பேய் நிற்கின்றது என்று கூடப் பார்த்தோம். அங்கு பேயில்லை. அது இருண்டு பாழ்டைந்த மண்டபம் போல் தோன்றியது. இப்போது அந்த வெள்ளை வீடு ஒரு பள்ளிவாசலாக மாறிவிட்டது.பரிமளத்தின் மூத்த மகள் பொன்னு கொஞ்சம் சுறு சுறுப்பானவள். நெல்லுப் பிடுங்கிற காலத்தில் வயலுக்குச் சொந்தக்காரன் கூப்பிடு போட்டு வருவதற்குள் பை நிறைத்துவிட்டு ஓடிவிடுவாள். சில வேளை நான் மட்டும் பிடிபடுவேன். அப்படி பிடிபடாடத நேரங்களில் பிடுங்கிய நெல்லோடு வீடு திரும்புவோம். வீட்டிற்கு வந்தால், அம்மா நெல்லை உரலில் போட்டுக் குத்திச் சீனிச்சோறு சமைத்துத் தருவா. அன்றிரவு அரை வயிற்றோடு தூங்கிவிடுவோம்.

பாய் விரித்த வள்ளம் ஓட்டும் ஓடத்திற்கு சொந்தக்காரன் தான் பரிமளாவின் கணவன் அந்தோணி. ஆனா ஆவன்னாவை எழுத்துக் கூட்டி வாசிக்கத் தெரியாத பாமரன் என்றாலும் பகுத்தறிவாளன். பண்பில் சான்றோரைவிட உயர்ந்தவன். தன் குடும்பத்திற்கென்று எந்தச் சொத்துக்களையும் சேர்த்து வைக்காதவன். கடலில் காற்றுத் திசையறிந்து நீர் நிலை கணக்கிட்டு தொழில் திறம்பட செய்வதில் அவனொரு அறிஞன். மிகக் கெட்டித்தனமாகக் களங்கண்ணி பாய்வதிலும் அவனுக்கு நிகர் அவன்தான். அவதானிப்பு உலக ஞானம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திக்கூர்மை, சமூகநேசிப்பால் ஊரில் நல்ல பெயரோடு வாழ்பவன். பழுப்புமேவிய பற்கள் எப்போதும் வெற்றிலையை அரைத்த படியே இருக்கும். சுருட்டையும் சுகமாய் இழுத்து சுவாசிப்பதில் ஒரு சுகம் காணுவான் அந்தோணி. அந்தோணிக்கு இழகிய இதயம். நெஞ்சில் நிறையக் கனவுகள். ஆசைப்பட்டதுகள் அதிகம். அதில் ஒன்று கூட வாழ்நாளில் கிடைக்காகமல் போனது அவன் விதியல்ல. பல மீனவர்கள் பாடு இப்படித்தான் நகர்ந்து முடிவுற்றிருக்கிறது. அந்தோணிக்கும் பரிமளாவிற்கும் இரண்டு பெண்கள். இரண்டும் இருவிழிகள் போல் அவர்களுக்கு கறுத்தத் தங்கங்கள். ஒருவாறு ஒன்றைக் கரைசேர்த்ததே ஒரு பெரிய விடையம் போல இன்ப நினைவில் மிதந்த வேளையில்தான் அவனுடைய இயல்புநிலை ஒடுக்கப்பட்டு படுக்கையில் விழுந்தான். முற்றத்தில் நின்ற முருங்கை மரம் செல்லடித்து சிதறியதுபோல் பரிமளாவின் வாழ்வும் பரிதாபமாகியது. திடீரென வந்த பக்கவாத நோய் தாக்கி இடது பக்கம் முழுமையாக செயல் இழந்து இயல்பு நிலையை முடமாக்கி விட்டது. படுக்கையில் கிடந்த படியே கொன்னத் தமிழில் மட்டுமே கதைப்பான். மலம் சலம் என்றாலே படுத்த படுக்கையில் கிடந்த படி கழிக்க வேண்டிய நிலை. சிலவேளை பரிமளா கொஞ்சம் நிமிர்த்தி வைத்து சாப்பாடு ஊட்டி விடுவாள். அப்படி அவனுக்கு ஊட்டுவதில் அவளுக்குள் ஒரு இன்பம். ஓடியாடித் திரிந்த மனிசன் ஒடுங்கிக் கிடக்கிறாரே என்று மனதளவில் அழுது தொலைவாள். பரிமளாவின் முகத்தில் ஏதேனும் வாட்டம் கண்டாலே அவன் அதை உணர்ந்தவன் போல் தன் கைகளால் அவளுக்கு புரியும் படி கவலைப்படாதேஎல்லாத்துக்கும் பரலோகமாதா இருக்கிறா என்று சொல்லுவான்.

கணவனின் உழைப்பும், தன் வியாபாரத்தில் கிடைக்கும் வருமானமும் குடும்பப் பொருளாதாரச் சுமையை ஓரளவு சமாளித்துக் கொண்டிருந்த பரிமளாவிற்கு அவன் படுக்கையில் விழுந்தபோது குடும்பவருமானமும் குறைந்து, குடும்பச் சுமை அதிகரித்தது. இந்த நிதி நெருக்கடிக்யை ஈடுசெய்ய எத்தனையோ வழிமுறையை அவளின் மனத் தேடலில் ஒன்று மட்டும் சட்டென ஓடிவந்து குறுக்கிட்டது. அது வேறு ஒன்றுமில்லை அவள் செய்யும் தொழிலான மீன் வியாபாரத்தில் தான். மீன் வியாபாராம் தொடங்குவதற்கு முதல் கடலில் இருந்து மீனவர்கள் பிடித்துவரும் மீன், றால், கணவாய், போன்றவற்றை அவர்களிடம் வாங்கி அவர்களுக்கு முன்னால் சுளகில் போட்டு விற்கிற வியாபாரியாகவே இதுவரை இருந்து வந்தாள். மீனோ றாலோ கணவாயோ விற்ற பிறகு மீனவர்கள் கொடுக்கின்ற பணத்தை மட்டும் வாங்குவாள். சிலர் பணம் கூடக் கொடுக்காமல் போய்விடுகின்ற சம்பவங்களும் சிலவேளைகளில் நடக்கத்தான் செய்கிறது. இதற்குமேல் ஒருபடி உயர்ந்தே அவள் சிந்தனை முளைத்தது. அதாவது மொத்தமாக கூறியான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏலத்தில் போட்டு கூறிவிக்கும்
போது அதை மொத்தத்தில் வாங்கி கொஞ்சம் கொஞ்சமாக மீன் விற்கிற கல்லில் போட்டு விற்கவேண்டும் என்கின்ற எண்ணமே. அந்த கனவை நனவாக்க ஆகக் குறைந்தது இரண்டாயிரம் ரூபாய்யாவது சொந்தமாக கையில் இருக்கவேண்டும். அந்தப் பணத்தை பெறுவதற்கும் பலவகையான உறவுக்காரரை மனத்திரையில் போட்டுப் பார்த்தாள். அங்கொன்றாய் இங்கொன்றாய் சில மனதில் வந்து தோன்றினாலும் அவர்களிடம் மண்டியிட்டுப் பணம் கேட்க அவளின் சுயகௌரவம் விட்டுக் கொடுக்கவில்லை. அத்தோடு பணம் வாங்கினால் உறவில் விரிசல் சில வேளை வந்துவிடும் என்றும் நினைத்தாள். சற்று நிதனமாக யோசித்துவிட்டு தயக்கத்தை துரத்த; துணைக்கு வந்தது வீட்டிலிருக்கும் நகைபற்றிய நினைப்பு. வீட்டிலுள்ள மொத்த நகைகளையும் சேர்த்து அடைவு வைத்தால் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ரூபாய் கிடைத்து விடும். அந்த கசிந்த நினைவோடு பரிமளா இளைய மகள் மரியாவுக்கு பக்கம் வந்தால்.

“மரியா....!”

“என்னண அம்மா...?”என்று கேட்டுக் கொண்டு மரியாதை கலந்த அன்போடு பரிமளத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

மரியாவின் முகத்தை பார்த்ததும் அவளுக்கு மனசு வலித்தது. நாட்கள் தவறாது நாற்க்கடகம் சுமந்து மின் விற்றுப் பிழைத்தலில் குடும்பத்தின் வயிற்றை மட்டும்தானே நனைக்க முடிந்தது. ஆனா மரியாவிற்கு வாழ்க்கைத் துணையொன்றைக் தேடிக் கொடுக்க வக்கற்றுப் போனேன் என்று உள்ளுக்குள் உணர்வுகள் பிசுபிசுக்க குற்ற உணர்ச்சியால் கூனிப்போனாள்.

“மரியா எப்படி மோன இருக்கிறாய்.....?”கவலை கலந்த குரலில் கேட்டாள்.

“என்னம்மா....உனக்கு என்ன ஆய்ச்சு ....? விடிஞ்ச பொழுது பட்டால் வீட்டுக்குள்ள உன்ர காலடியிலேயே கிடக்கிறன்.... பிறகு எப்படியிருக்கிறாய் என்று கேட்கிறீயண....”

“இல்ல மோன....”தயங்கித் தயங்கி குரல் தவழ்ந்து வர; மரியாவின் குரல் குறுக்கிட்டு அவள் வார்த்தையை நிறுத்தியது.

“என்ன அம்மா சொல்லண...எனக்குத் தெரியாமல் எதையோ மறைக்க நினைக்கிறயண...”

“இத்தினை வருச குடும்ப வாழ்க்கையில உனக்குத் தெரியாமல் என்னத்த மோன மறைச்சனான்...”

“அப்ப என்னன்டுதான் சொல்லன்..”

“மோன இப்பிடியே எத்தினை நாளுக்குத்தான் கஸ்டப்பட்டு வாழ்கிறது. கொஞ்சமாவது நம்முடைய குடும்பத்திற்கு வெளிச்சம் கிடைக்காத எண்டும், உன்னையும் இப்படியே வைச்சுக்கொண்டிருந்தால் ஊரில நாலு சனம் என்னன்னோவெல்லம் கதைக்குங்கள். கால காலத்தில குமர் கரைசேர்றதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கும் நல்லது உனக்கும் நல்லது. அதுக்காகத்தான் ஒரு முடிவுக்கு வந்துட்டன். இவர் படுக்கையில் விழுந்த பிறவு நாம அனுபவிச்ச கஸ்டதுன்பங்கள் கொஞ்ச நெஞ்சமில்ல அப்படியிருந்தும் ஆரிட்டயும் பல்லுக் காட்டாமல்தான் இவ்வளவு காலமும் மீன் வியாபாரத்தில கிடைக்கிற வருமானத்தைக் கொண்டுதான் வாழ்ந்து கொண்டிருக்கிறம். எல்லாம் கடவுள் சித்தம் கடவுள் பாாத்துக் கொள்வார் என்று அக்கறை இல்லாமலிருந்தால் இன்னும் வறுமையிலதான் நம்ம குடும்பம் சீரழியும். என்னதான் இருந்தாலும் நம்மட முயற்சியும் இருக்க வேண்டுமல்ல மோன......"

"அதுக்கென்னம்மா நான் செய்யவேணும்..? நானும் உன்கூட மீன் விற்க்க வரட்டுமா..."

"அதுதான் ஒன்டு குறையாய் இருந்தது...அதையும் செய்துவிடு..."

"அப்ப என்னதான் செய்ய வேண்டுமென்டு சொல்லன நான் செய்யிறன்"

"காலையில மீன் சந்தையில மீன் கூறெக்கில மொத்தமாக வாங்கி சுளகில போட்டு விக்க வேணுமென்டு யோசிச்சு இருக்கிறன்...அதுக்கு ஒரு இராண்டாயிரம் ருபாயாவது வேண்டுமெல்ல அதுதான் காலையிலயிருந்து அந்த யோசினையில இருக்கிறன்...."

"அம்மா அப்பிடியென்டா நம்ம சின்னமாக்கிட்ட சாடை மாடையாய் பேச்சு கொடுத்து கடனாய்க் கேட்டுப்பாரன்..."

"உன்ர சின்னமாக்கிட்டிய....என்ர தங்கச்சிய உன்ன விட அவள எனக்கு நன்றாகத் தெரியும்புள்ள....அவள் எச்சிக்கையாலயும் காகம் திரத்த மாட்டாளடி...என் புருஷன் படுக்கியில விழுந்தண்டு வந்தவள்தான் அதுக்குப் பிறகு ஒரு நாள் கூட என்ன ஏதேன்டு எட்டிப்பாக்காதவள் நம்மட குடிசைப்பக்கம் வந்தாள் நம்மட கஸ்டத்தில ஏதும் காசு கீசு கேட்டுவிட்டிருவோம் என்டதற்காக இங்காலப் பக்கம் வராதவள்...நம்மட பரலோக மாதா கோயிலுக்கு ஒவ்வொரு நாளும் பூசைக்கு மட்டும் ஒழுங்க போயிருவா...தூ....இவளும் மனுசியென்டு உலகத்தில வாழ்றலே.... அவளட்டியா போயும் போயும் காசு கேட்க... நீ கோவிக்க மாட்டியன்ட எனக்க ஒரு யோசினை தோன்றுது அதைச் சொல்லட்ட மோன....?"

"ம்...சொல்லன அம்மா..."என்று சொன்னதும் பரிமளாவின் முகம் சுருங்கியது. கண்கள் கலங்கியது. மரியா குழம்பிப் போனாள். பரிமாள சொல்வதற்கு தயங்கினாள். ஏதோ நினைப்பு அவளுக்குள் தோன்ற யோசிக்க ஆரம்பிச்சாள்.

"அம்மா நீ யோசிக்கிறதுக்குள்ள விடிஞ்சு போயிருமண....."

"இவளுக்கு அதுக்குள்ள பகிடி...." என்று சொல்லிக் கொண்டு;

"மோன வீட்டில இருக்கிற நகைகளை கூட்டிப் பார்த்தால் ஒரு மாதிரி இரண்டாயிரம் ரூபாய்க்கு அடைவு வைக்கலாம்...அதுதான் உன்னட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவார்த்தை கேட்டுப்போட்டு செய்யலாமென்டு யோசிச்சனான்...''
“அதுக்கு என்னம்மா.... நீ முடிவெடுத்தால் அதுசரியாய்த்தானே இருக்கும்.....''
“சரி புள்ள நான் அறைக்குள்ள இருக்கிற நகையை எடுத்துக் கொண்டு வாறன;....'' என்று சொல்லிக் கொண்டு பரிமளா குடிசைக்குள்ளிருந்த அறைக்குள் சென்றாள். மரியா தாயின் வரவிற்காக வெளிமுற்றத்தில் காத்துக்கொண்டிருந்தாள். காற்று மெல்ல வீசிக்கொண்டிருந்தது.மரியாவின் தேங்காயெண்ணெய் வைத்து நேர்த்தியாக வாரிவிடப்பட்ட கருங்கூந்தலுக்குள் காற்று நுழைந்து சிதிலமாகி சிறகசைத்து பறந்தது. உருண்ட தசைத்திரட்சி கொண்ட முகத்தில் மேகக்கிளைகள் படர்ந்து அசைந்தாட தென்றலின் சுகம் தேனாக அவளுக்கு சுவைத்தது. முற்றத்தில் படர்ந்திருந்த பூசனி குறோட்டன்கன்டு முருங்கை மரத்தின் மரக்கிளைக்கிடையில் மசுக்குட்டிகளின் வீடிருக்கும் வீதியென்று அவள் அடிக்கடி கண்களால் அளந்து விட்டு பின் அவள் நித்தம் நேசிப்போடு தண்ணீர் ஊற்றி அக்கறையாய் வளர்க்கும் செம்பரத்தமரத்தை பார்த்த போது அவளுக்கு அவளின் அக்காவின் நினைவு நெஞ்சில் முட்ட கண்களில் நீர் கோர்த்தது.
“கண்ணைக் கட்டிக்கிட்டு பாழுங்கிணத்தில தள்ளி விடுகிற மாதிரி இருக்குதடி எனக்கு அம்மா பேசின கல்யாணம்... நீயாவது அம்மாக்கிட்ட சொல்லி நிப்பாட்டமாட்டியாடி...'' என்று அக்கா கண்ணீர் விட்டு கல்யாணத்திற்கு முதல் நாள் சொன்ன போது இவள் அம்மா சொன்னாள் என்று “வலிய வந்த சீதேவியை காலால் எட்டி உதைஞ்ச மாதிரியெல்ல உன்ர அக்காவின்ர கதை கிடக்கு....'' என்று அம்மா சொன்னதென்று அக்காவிடம் சொன்ன வார்த்தை திரும்பத் திரும்ப நினைவில் வந்து சொல்லொண்ணாச் சித்திரவதை பண்ணியது. அந்த நினைவை அடியோடு மறக்கலாமென்றுதான் பல முறை முனைந்தாள். ஆனால் அது அடிமனதில் அடைகாத்திருந்து தலைகாட்ட அவள் மனசு விசும்பியது. கண்களில் நீர் கோர்த்து நின்ற கண்ணீர் மெல்லக் கன்னத்தில் வடிந்தது. உடல் முழுக்க நடுங்கி வியர்த்தது. அக்கா எட்டாம் வகுப்பு வரை படித்ததே அம்மாவிற்கு பெரிய படிப்பு போல நினைத்தாள். அக்கா அடுப்படியைத் தவிர அயல்வீடேயே அறியாதவள். நிலபுலமற்ற நம்ம குடும்பத்திற்கு நம்மைப் போல் நம்மை புரிந்து கொண்ட ஒருவனையே திருமணம் செய்து கொண்டால் தான் நம்ம குடும்பம் சீரும் சிறப்புமாக இருக்கும் எண்டு அவள் அக்கா சொன்னாலும், எவனோ ஒரு குடிகாரன் தங்கள் குடும்பத்துக்குள் வந்து வீழ்ந்து, குடும்பம் இரண்டாக உடையும் எண்டு மரியா கனவில் கூட நினைககவில்லை. பொன்னுவின் வாழ்விற்குள் திருமணத்தின் பின் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்து விட்டது. திருமணம் செய்து பொன்னுவும், கணவனும் பரிமளாவின் வீட்டில் ஆரம்பத்தில் வாழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ந்தது. அந்த குடிசைக்குள் வாழ்கின்ற காலத்தில் இரவெல்லாம் போதையிலேயே பொன்னுவின் கணவன் வருவான். எந்தக் காரணம் இன்றியும் பொன்னுவின் மாமியாரால் ஏவப்பட்ட வார்த்தைகள் அவள் கணவனூடாக பொன்னுவின் மீது பாய தேவையற்ற தர்க்கத்தில் தொடங்கி குடும்பம் பல நெருக்குதலுக்குள் கொண்டுபோய் விடும். பெரும்பாலும் சீதனம் தரவில்லை, தன்னை சரியாகக் கவனிக்கவில்லை என்று தான் பொதுவாக பிரச்சினைகள் ஆரம்பமாகும். அந்த பிரச்சினையின் பின்புலமாக இருந்து பொன்னுவின் கணவனை ஆட்டி வைப்பது பொன்னுவின் மாமிதான் என்பதை பரிமளா குடும்பத்திற்கு தெளிவாக தெரிந்தபோதும் அவற்றை வெளிக்காட்டாமலேயே அவர்கள் நாகரிகமாக நடந்து கொண்டார்கள். அவற்றையும் மீறி ஒரு இரவு பொன்னுவின் கணவனின் அடக்குமுறையை ஒரு நாள் இரண்டு நாள் என்று பொறுத்துக்கொண்டிருந்த பரிமளாவின் குடும்பத்திற்கு அன்றைய சம்பவம் பொறுமையை இழக்க வைத்தது. பொன்னுவின் தாலியை விற்பதற்காக அவள் கணவன் அடம்பிடித்து சண்டை போட்டுக்கொண்டிருந்த போதே பரிமளாவும், மரியாவும் ஏவம்கேட்டுப் போனதே பிரச்சினையை உச்சத்திற்கு கொண்டுபோய் விட்டது. அந்த இரவோடு இரவாய் பொன்னுவைக் கூட்டிக்கொண்டு தன் தாயின் வீட்டுக்குக் போனவன் தான். இன்றுவரை பரிமளாவின் வீட்டுப் பக்கமே வருவதில்லை. அவன் தான் வருவதில்லையென்றாலும், அவள் பொன்னுவைக் கூட அவள் தாய்வீட்டுக்கு சென்று வர அவன் அனுமதி கொடுக்கவில்லை. முற்றத்தில் நின்ற செம்பரத்தைச் செடியை பார்த்த போது அவள் அக்காவின் நினைவில் நிலைத்திருந்த எண்ணத்தை விலக்கி அம்மா சென்ற இடம் நோக்கி பார்வையை விரித்தாள். தாய் கையில் சில நகைகளோடு மரியாவை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.
“புள்ள இவ்வளவு நகைக்கும் அவள் ராசாத்தி ஆயிரம் தரமாட்டாள். அவள் நகையை உரசிப்பார்த்து பித்தளையா தங்கமா என்டு பார்த்துத்தான் அடைவை புடிக்கிறவள். அவளட்ட போய் இதுக்கு ஆயிரம் ரூபா கேட்டால் நல்லாத்தான் தருவாள்.”
“வேறயென்ன செய்யிறது..... அப்ப இந்தக் காதில கிடக்கிற தோட்டை கழட்டித் தரட்டாண ....”என்று காதின் பின் பக்கமாக தோட்டின் சுரை மீது கையை அழுத்தியபடி அவள் கேட்டாள்.
“நானும் அதைப் பற்றித்தான் நினைத்தனான் அதுக்குள்ள நீயா கேட்டிட்ட.....”என்று சொன்னதுதான் தாமதம் ஒன்னும் பேசமால் பறையாமல் அவள் தோட்டைக் கலட்டி அம்மாவின் கையில் வைத்தாள். தாய் வாங்கிய கையோடு ஏதோ யோசனை திடீரென தோன்ற; மரியா முந்திக் கொண்டு..
“ணேய் அம்மா...இந்தப் போராட்டம் ஆனானப்பட்ட சம்மாட்டிமாரையே ஆட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண வைச்சிருக்கு நாங்க எம்மாத்திரமா....."
"மோன காதில இருந்து தோட்டக் கழற்றிய பிறகு முகமே ஒரு மாதிரி இருக்கு..."
"அதுக்குத் தானே அம்மா நம்மப்போல பெண்களுக்காகவே கெலிட்டுத் தோடு செய்கிறாங்களே"
"அது வாங்கிறது எண்டாலும் ஐம்பது ரூபாய் காசு வேணுமே? அதுக்கு யாரிட்ட போறது....".
"அதைப்பற்றி ஏன் அம்மா கவலைப்படுறிய தலைமுடியால் காதை மறைத்தால் போச்சு.." என்று சொல்லிக் கொண்டு மழிச்சு வாரிவிடப்பட்ட காதிற்குப் பக்கமாக இருக்கும் தலைமுடியை கீழ்நோக்கி இழுத்து காதை மறைத்தாள். அதுவும் மரியாவிற்கு ஓர் அழகாய்த்தான் இருந்தது.
"மோன ஏதும் பழஞ்சோறு கறியிருந்தால் போட்டுக்கொண்டு வாவன் சாப்பிட்டுப்போட்டு ராசாத்தியிட வீட்டுக்குப் போய் நகையை அடைவு வைச்சுப்போட்டு வாறன்."
எல்லாவற்றையும் மண்தரையில், பாயில் கிடந்த படி பார்த்துக்கொண்டிருந்தான் அந்தோணி. அவனால் எதுவுமே பேசமுடியாமல் ஊமைநிலவாய் இருந்தாலும், அவர்கள் பேசிக்கொண்டவற்றையெல்லாம் உள்ளுக்குள் விளங்கிக் கொண்டான். குசுனிப்பக்கம் போன மரியா பழைய சோறையும் கறியையும் போட்டுக்கொண்டு வெளியே வர பரிமளம் நெஞ்சைப் பொத்திய படி சோகமே உருவாகி வாடி வதங்கி மரத்தூணோடு சாய்ந்திருந்தாள். நெஞ்சு வலி தாங்க உள்ளுக்குள் துடித்தாள். மரியா பரிமளத்தைக் கண்டதும் விக்கித்துப்போனாள். பாய்ந்து விழுந்து ஓடிவந்தாள். ஓடிவந்த கையோடு, பரிமளத்திற்குப் பக்கமாக உக்காந்து விட்டாள். நெஞ்சில் பரிமளம் அழுத்தி வைத்திருந்த கையைப் பிடித்த படி,
"என்ன அம்மா செய்து..?" என்று அழுது கொண்டு கெஞ்சும் குரலில் கேட்டாள்.
"ஒண்டும் இல்ல மோன இப்ப கொஞ்ச நாளா இப்படித்தான் இருக்கு. இதற்கு முதல் இரண்டு தடவை கடுமையாக வலிச்சது. இது மூன்றாவது தடவையாய் நெஞ்சு வலிக்குது. பெரிய பாறாங் கல்லை. நெஞ்சில் வைத்து அழுத்துற மாதிரி இருக்குதுமோன. ஒருக்கால் மூத்தவள் பொன்னுவை பார்க்க வேணும் போல இருக்கு." பரிமளம் சோகத்தோடு சொல்ல மரியா கூச்சல் இட்டு அழத்தொடங்கினாள்.
"அம்மா ஏனென இரண்டு தடவையும் நெஞ்சு வலி வந்தபோதும் எனக்குச் சொல்லலல்ல?"
"நான் சொன்னா அதையே நீ நினைச்சு நினைச்சு கவலைப் பட்டுக்கொண்டிருப்ப எண்டுதான் அதை மறைச்சனான்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இப்ப ஆஸ்சுப்பத்திரிக்கு போவமாண?”
“வேணாம் மோன...தண்ணீ விடாய்க்குது கொஞ்சம் தண்ணி கொண்டு வா...”. மேரி பதகளித்து குசினிப் பக்கமாக ஓடிப்போய் தண்ணி எடுத்துக்கொண்டு திரும்பி வருவதற்குள் பரிமளாவின் உடலில் இருந்து உயிர் பிரிந்து மரணித்துப் போனாள்.

மரியாவின் அழுகுரல் ஊரை நிரப்பியது. சாவுமணி பரலோக மாதா கோவிலில் இருந்து அடிக்கப்பட்டது. கோவில் மணிச்சத்தம் கேட்டு ஊரே பரிமளத்தின் வீட்டின் முற்றத்தை நிரப்பியது. உயிரோடு இருக்கும் போது பார்க்க வராதவர்கள் உயிரற்ற உடலைப் பார்ப்பதற்காக வந்திருந்தார்கள். இவர்களோடு பொன்னுவும் கணவனும் வந்திருந்தார்கள். பரிமளாவின் மரணம் நினைவில் இருந்து விலகிச் செல்ல வீதியைக் கடப்பதற்காக ரமேசும் வரதனும் நிற்பதைக்கண்டு விட்டேன். இருவரும் இனம்புரியா சந்தோசத்துடன் கதைத்துக் கொண்டு நிண்டார்கள். சென்ற இரு வாரத்திற்கு முன்னர் தான் நாங்கள் ஜேர்மனிக்குப் போவதற்காக பம்பாய், கென்யா, தான்சானியா வழியாக ஜெர்மன் போவதற்கு முயற்சி எடுத்த போது மூவரும் பிடிபட்டு திருப்பி அனுப்பி விட்டதன் பின் ஏஜென்சிக்காரன் இப்ப கென்யா றூட் அடிபட்டுப் போய்டு இன்னும் ஒரு வாரத்தில் புது றூட் கண்டு பிடிச்சிடுவோம். அதற்குப் பிறகு மூன்று பேரையும் ஜேர்மனிக்கு அனுப்புவதாக எங்களை திருப்பி அனுப்பி விடப்பட்டு கொழும்பு விமான நிலையத்தில் வந்திறங்கிய போது ஏஜென்சிக்காரன் சொன்னது ஒரு கணம் நினைவிற்கு வந்தது. அவன் சொன்னபடி, புது றூட்டை ஏஜென்சிக்காரன் கண்டுபிடித்து வீட்டிற்குப் போனபோது, வீட்டில் ஏதாவது தகவல் கொடுத்துவிட்டுப் போயிருப்பான். அந்த தகவலைக் கேட்டுவிட்டுத்தான் இப்படி ஏகப்பட்ட சந்தோசத்துடன் வந்துகொண்டிருக்கிறான்களோ தெரியல...? ஏன் மண்டை காய யோசிக்க வேண்டும். இன்னும் கொஞ்ச நேரத்தில் நான் இருக்கும் இடத்திற்கு வந்து விடுவார்கள் என்று மனசு ஒரு கணம் முணுமுணுத்தது. “சிவா நீ வெளிநாட்டிற்குப் போனாலும் ஊர் நினைப்போடுதாண்டா இருப்ப அது உன்ர உடலோட ஊறிய சுபாவம் என்ன..? என்று ரமேஸ் கேட்க... “என்னைத் தூக்கி வளர்த்த ஊரை எப்படியெடா மறப்பேன்?” என்று ரமேசிற்குச் சொன்னது ஒரு கணம் நெஞ்சிற்குள் முட்டியது.

(முற்றும்)

***daniel.jeeva@rogers.com***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக்கழகம்

இலங்கைத் தீவின் வட புலத்தே அமைந்துள்ள யாழ்ப்பாண மாவட்டம் கல்வி, கலை, விளையாட்டுத் துறைகளில் வளர்ச்சி பெற்று முன்னிலை வகித்த பிரதேசமாகும்.

இங்கு யாழ்ப்பாண மாநகர சபையின் மேற்குப்புறம் அமைந்துள்ள நாவாந்துறை

கிராமமும் இத்துறைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்தது. இருப்பினும் இக்கிராமம் விளையாட்டுத்துறையில் ஓர் உன்னத நிலையை அடைந்ததற்கு பெரும் பங்காற்றிய பெருமை சென் மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை சார்ந்தது வரலாற்று உண்மையாகும். சென் மேரிஸ் விளையாட்டுக் கழக வரலாற்றை சற்று பின் நோக்கிப் பார்த்தால் அதன் ஆரம்ப கால வளர்ச்சியையும், எழுச்சியையும் நாம் கண்டுகொள்ள முடியும்.

1936 ம் ஆண்டில் நாவாந்துறையில் அமைக்கப்பட்ட சென் மேரிஸ் ஐக்கிய வாலிபர் சங்கமும் அதன் பின்னர் பெயர் மாற்றம் செய்யப்பட்ட சென் மேரிஸ் சனசமூக நிலையத்தில் பல்துறை அமைப்புகளும் உருவாக்கம் பெற்றது. அவற்றில் முதன்மை பெற்று விளங்கியது உதைபந்தாட்ட விளையாட்டுக் கழகமாகும். இக்கழக ஆரம்ப கால கட்டத்தில் இளைஞர்களிடையே இருந்த ஆர்வம், உற்சாகத்தினைக் கருத்திற் கொண்ட பெரியார்கள் சிலர் ஒரு விளையாட்டுக் கழகத்தை அமைக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்தனர். இவர்களில் முன்னோடியாக விளங்கியவர் அமரர் கலைக்கவி நீ. எஸ்தாக்கி ஆவார். இவரது அயராத முயற்சியில் சனசமூகத்தின் ஓர் இணை அங்கமாக விளையாட்டுக்கழகம் உதயம் பெற்றது. இதற்கு பக்க பலமாக அமரர் திரு ம. அகஸ்தீன், அமரர் திரு ம. செபமாலை ஆகியோர் இருந்தனர். அதன் பின்னர் சனசமூக நிலைய நிர்வாகிகளாக இருந்த அமரர்கள் திரு கி. சூசைப்பிள்ளை (தலைவர்), கலைக்கவி திரு நீ.எஸ்தாக்கி (செயலாளர்), ம.ஆசீர்வாதம்(விளையாட்டுப்பொறுப்பாளர்) ஆகிய பெரியார்களின் செயற்பாடுகளும், ஒத்துழைப்பும் கழகத்தினை வளர்ச்சிப் பாதையில் முன்னெடுத்துச் செல்ல உதவியது. ஆரம்ப காலத்தில் உள் ஊரில் உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளை நடாத்திப் பயிற்சியைப் பெற்று யாழ்ப்பாண மாவட்ட ரீதியிலான போட்டிகளிலும் களம் இறங்கியது. 1950ம் ஆண்டளவில் யாழ்ப்பாண உதைப்பந்தாட்டச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க (லீக்) போட்டியில் பங்குபற்றிய உதைபந்தாட்ட அணி சிறப்பாக விளையாடிப் பாராட்டைப் பெற்றது. மட்டுமன்றி, 1952ம் ஆண்டு சுற்றுப் போட்டியில் மகத்தான வெற்றி பெற்று சம்பியன் வெற்றிக் கேடயத்தை பெற்றுக் கொண்டதினால் புகழையும் பெற்றது. கழக முதல் வளர்ச்சி கட்டத்தில் அணியில் பங்குபற்றிய வீரர்களான ச.அருளானந்தம்(ராசா), செ.துரைசிங்கம், செ.பெலிக்கான், கி. நீக்கிலாப்பிள்ளை, நீ. ஆசிர்வாதம், சீ.அருள்ராசா, கி.மருசிலீன், செ.அறுக்காஞ்சி, சூ.அந்தோனிப்பிள்ளை, செ.பிரான்சீஸ், செ.வீரசிங்கம், செ.பாலசிங்கம் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர். தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் கழகம் து கு யு லீக் நொக்கவுட் சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றியது. பல தடவைகளில் வெற்றிக் கிண்ணங்களை சுவீகரித்துக் கொண்டது.

1958-1959 ஆண்டுப் போட்டிகளில் முக்கிய பங்காற்றி சிறப்பாட்டக்காரர்களாக விளங்கியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் அமரர்களான செ. மைக்கல்ராஜா, அ.டேவிட் ஆகியோராகும். அமரர் செ.மைக்கல்ராஜா அவர்கள் தாம் கல்வி பயின்ற சில கல்லூரிகளில் சிறப்பாக ஆடியதினால் யாழ்ப்பாண மாவட்ட கல்லூரி அணிக்கும் தெரிவு செய்யப்பட்டு சிறப்பாக ஆடி பாராட்டைப் பெற்றார். அவர் அணியில் இடம் பெற்ற காலம் முதல் சிறந்த நட்சத்திர பின்னணி வீரராகவும், அணித்தலைவராகவும் இருந்து கழகம் பல வெற்றிகளைப் பெற்றுக் கொள்ள பெரும் பங்காற்றினார். இதனால் யாழ்ப்பாண மாவட்ட அணி பின்னணி வீரனாகவும், கப்டனாகவும் தெரிவு செய்யப்பட்டார். இதனால் கழகம் சிறப்பினைப் பெற்றது.

1963ம் ஆண்டு நாவாந்துறை கிராமத்தில் விளையாட்டுத்துறையின் மறுமலர்ச்சிக்காலமாகும். இக்கால கட்டத்தில் விளையாட்டுத் துறை புத்துணர்ச்சி பெறத்தொடங்கியது. இதற்கு கால்கோல் நாட்டியவர்கள் சென் மேரிஸ் விளையாட்டுக்கழக இளைஞர் அணியினராகும். யாழ்ப்பாண மாவட்டத்தில் சகல பாகங்களிலும் நடைபெற்ற நட்புறவுப் போட்டிகளிலும், யாழ் லீக் போட்டிகளிலும் கழக வீரர்கள் அபாரமாக விளையாடி பல வெற்றிகளைக் குவித்து வெற்றிக் கிண்ணங்களை சுவீகரித்துக் கொண்டனர். புதிய வீரர்களாக களம் புகுந்த திரு தோ. மரியதாஸ் (மணி), திரு ச. அன்ரனி, திரு டா. அன்ரனி, ஆகியோரின் சிறப்பாட்டம் பாராட்டுக்குரியது. இக்காலத்தில் கழக பயிற்சியாளராக இருந்த திரு ம. சிங்கராயரின் சேவை குறிப்பிடத்தக்கது.

1966 இல் நடைபெற்ற லீக் சுற்றுப் போட்டி இறுதி ஆட்டத்தில் குருநகர் பாடுமீன்அணியை எதிர்த்து விளையாடியது. இப்போட்டியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு தோ.மணிஅவர்கள் ஆடிய அபார ஆட்டமும் அத்துடன் அவர் இறுதியில் போட்ட ஒரு கோலும் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரிக்க அடி கோலியது. இதனால் தனக்கென ஓர் இரசிகர் கூட்டத்தை மாவட்டத்தில் ஏற்படுத்தி இருந்தமையை அன்றைய புதினப் பத்திரிகைகள் பாராட்டத் தவறவில்லை.

எமது கழகத்திற்கு பயிற்சியாளராக கடமையாற்றிய திரு டேவிட் தம்பிராஜாவின்

பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. திரு.ம.செ. மைக்கல்தாஸ், திரு தோ.மணி, திரு.ச.அன்ரனி தொடர்ந்து பல ஆண்டுகளாக யாழ் தெரிவு அணியில் இடம் பெற்று வந்தனர். இக்கால கட்டத்தில் யாழ் மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் தலைவராக அமரர் கலைக்கவி திரு.நீ.எஸ்தாக்கி அவர்கள் பதவி வகித்தார் இவர் எமது கழகத்தின் தலைவராகவும் இருந்தமை எமது கழகத்திற்க்கு பெருமையை சேர்த்தது. அவரது தலைமையின் கீழ் 1968 இல் இந்தியாவின் சென்னை உதைபந்தாட்ட அணி இலங்கைக்கு வருகை தந்தது. அவ்வணியை எதிர்த்து யாழ் மாவட்ட அணி விளையாடியது. இப்போட்டி மிகச் சிறந்த முறையில் நடைபெற்றதுமன்றி போட்டியின் வெற்றி அணியாகவும் யாழ் அணி

விளங்கியது. இப் போட்டிக்கு முன்னணி வீரராக திரு தோ.மணி அவர்களும், பின்னணி வீரராக திரு.ம.செ. மைக்கலதாஸ் அவர்களும் விளையாடி எம் கழகத்திற்கு பெருமை தேடித் தந்தனர்.

1970 இல் நடைபெற்ற யாழ் உதைபந்தாட்ட போட்டிகளில் எமது கழகம் பல வெற்றிகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இக் காலகட்டங்களில் யாழ் செயலகத்தினால் நடாத்தப்பட்ட உதவி செயலாளர் பிரிவுகளுக்கான உதைபந்தாட்ட போட்டியில் பங்கு பற்றி வெற்றி கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது.

1974 இல் இலங்கை மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற இறுதிச் சுற்றுப் போட்டியில் கொழும்பு மாவட்ட அணியை எதிர்த்து யாழ் மாவட்ட அணி மோதியது. இப்போட்டியில் யாழ் மாவட்ட அணி வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. இப்போட்டியில் விளையாடிய எமது கழக வீரர் திரு.தோ.மணியும், குருநகர் பாடுமீன் கழக வீரர் திரு அ.இம்மனுவலும் சிறப்பாட்டக்காரர்களாக தெரிவு செய்யப்பட்டு பாராட்டுக்களைப் பெற்றனர். கொழும்பிலிருந்து வெளியாகிய ஆங்கில, தமிழ்ப் புதினப்பத்திரிகைகள் இவர்களைப் ப்ாராட்டி எழுதியிருந்தது குறிப்பிடத்தக்கது.

1978-79 இல் யாழ் மாவட்ட தெரிவு அணியினர் தமிழ் நாட்டிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் உதைபந்தாட்ட சுற்றுப் பயணத்தை அப்போதைய யாழ் மாவட்ட உதைபந்தாட்டக் கழகத் தலைவர் அமரர் டாக்டர் பிலிப் அவர்கள் தலைமையில் மேற் கொண்டது. இவ்வணியில் 20 உதைபந்தாட்ட வீரர்கள் இருந்தனர். இதில் ஒன்பது உதைபந்தாட்ட வீரர்கள் எமது சென் மேரிஸ் கழக வீரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1979ம் ஆண்டு யாழ் உதைபந்தாட்ட லீக் சுற்றுப் போட்டியிலும், நொக்கவுட்சுற்றுப் போட்டியிலும் எமது கழகம் வெற்றிக் கேடயங்களை சுவீகரித்து அகில இலங்கையில்ஒரு சிறந்த அணியாக விளங்கிப் பாராட்டைப் பெற்று புகழ் பெற்றது.

1980 இல் சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் புதிய உத்வேகம் அடைந்ததென்றால் மிகையாகாது. இக்கால கட்டத்தில் இதற்கு உறுதுணையாக இருந்தவர் பங்குத்தந்தை நேசநாயகம் அடிகளார் ஆவார். 1980-81ம் ஆண்டு காலப் பகுதியில் சென் மேரிஸ் கழக அணி பங்குபற்றிய 13 போட்டிகளில் 10 போட்டிகளில் வெற்றிக் கிண்ணங்களை சுவீகரித்து சாதனை படைத்தது. இப்போதைய முன்னணி வீரராக திகழ்ந்த திரு பா.பிரான்சிஸ் (இரத்தினசிங்கம்) அணியின் சார்பில் பல கோல்களைப் போட்டு வெற்றிகளைத் தேடித்தந்தார். அது மட்டுமன்றி இலங்கை போக்குவரத்துச் சபைமத்திய உதைபந்தாட்ட அணியிலும், யாழ் உதைபந்தாட்ட தெரிவுக்கழகத்திலும் முன்னணி வீரராக மிகச் சிறப்பாக விளையாடியமை எமது கழகத்திற்கு புகழைச் சேர்த்தது. எ ம து கழகம் பல வருடங்களாக எமது கிராமத்தில் பல வருடங்களாக மெய்வல்லுநர் போட்டிகளை மிகவும் சிறப்பாக நடத்தி வந்துள்ளது. யாழ் சனசமூகநிலையங்களின் சமரசமும், யாழ் அரச செயலகமும் நடாத்திய மெய் வல்லுநர் போட்டிகளிலும் வீரர்கள் வெற்றி பெற்று கழகம் பாராட்டைப் பெற்றது.

1982 இல் யாழ்ப்பாணத்தில் பல போட்டிகள் ஒழுங்கு நிரல்களின்படி நடைபெறத் தவறவில்லை. ஆனால் 1983ம் ஆண்டில் ஏற்பட்ட அரசியல் நிலை, யுத்த கலவரங்கள் காரணங்களால் விளையாட்டுத்துறையில் மந்தகதி ஏற்ப்பட்டது. இக்கால கட்டத்திலும் கழகம் நடைபெற்ற போட்டிகளில் பங்குபெறத் தவறவில்லை.

1986ம் ஆண்டு கழகத்தின் பொன்விழாவாகும். இதனையிட்டு புனித மரியாள் அன்னையின் திருவிழாவின் போது கழகம் 7 வீரர்களை கொண்ட ஓர் நொக்கவுட் சுற்றுப் போட்டியை ஒரே நாளில் நடாத்தியது. இதில் பலம் வாய்ந்த 8 அணிகள் பங்கு பற்றின. இப்போட்டிக்கு சிறப்பு விருந்தினராக வந்த யாழ் அரசாங்க அதிபரினதும், யாழ் உதைபந்தாட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீக் தலைவரினதும் பாராட்டைக் கழகம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

1995 இல் நடைபெற்ற அரசியல் நிகழ்வுகளால் மக்கள் இடப்பெயர்வுக்கு உள்ளானார்கள். இக்கால கட்டத்தில் கழக விளையாட்டு வீரர்கள் பலர் நாச்சிக்குடா, மன்னார், கொழும்பு ஆகிய பிரதேசங்களுக்குச் சென்று அங்கும் கழகத்தை ஸ்தாபித்து உள் ஊர் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றினர். இவற்றிற்கு சிகரம் வைத்தாற்போல் புலம் பெயர்ந்த வீரர்கள் வெளிநாடுகளிலும் கழகத்தை ஆரம்பித்து உதைபந்தாட்ட போட்டிகளில் பங்கு பற்ற தவறவில்லை.

இன்றைய காலகட்டத்தில் வடகிழக்குப் பகுதிகளில் யுத்த நிறுத்தம் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட பின் யாழ்ப்பாணம் விளையாட்டு துறையில் புத்துயிர் பெற ஆரம்பித்துள்ளது. இதனால் இடம்பெயர்ந்த வீரர்கள் எமது கிராமமான நாவாந்துறைக்கு மீண்டும் திரும்பித் தமது கழகத்தை இயக்கிப் போட்டிகளில் பங்குபற்றினர். குறிப்பாக உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றனர்.

2003-2004ம் ஆண்டு காலப்பகுதியில் விளையாட்டுக் கழகம் மீள் எழுச்சி பெற்றதெனலாம். கழக நிர்வாகிகளின் செயற்பாடும், வீரர்களின் விளையாட்டு உணர்வும், மக்களின் ஆதரவும் சேர்ந்திட கழகம் மறுமலர்ச்சி பெற்றது. இக்கால கட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெற்ற பின்வரும் உதைபந்தாட்ட போட்டிகளில் சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி வாகை சூடியது பெருமிதப் படக் கூடியதாகும்.

* யாழ் உதைபந்தாட்ட சங்க லீக் சுற்றுப்போட்டி - RUNNER
* யாழ் உதைபந்தாட்ட சங்க நொக்கவுட் போட்டி - WINNER
* வலிகாமம் உதைபந்தாட்டச் சங்க நொக்கவுட் போட்டி - WINNER
* தினக்குரல் யாழ் மாவட்ட நொக்கவுட் போட்டி - RUNNER
* டயானா விளையாட்டுக் கழக லீக் போட்டி - WINNER
* குருநகர் விளையாட்டுக் கழக நொக்கவுட் போட்டி - WINNER
* கரும்புலிகள் தின நொக்கவுட் போட்டி - WINNER
* உதய சூரியன் விளையாட்டுக் கழக லீக் போட்டி - WINNER
* பருத்தித்துறை லீக் சுற்றுப்போட்டி - WINNER
* யாழ் லீக் சுப்பர் சிக்ஸ் சுற்றுப்போட்டி - WINNER

இச்சுற்றுப் போட்டிகளில் எமது கழக வீரர்கள் அபாரத் திறமையை வெளிப்படுத்தியமை பலராலும் வியந்து பாராட்டப்பட்டது. இச்சுற்றுப் போட்டிகளில் சிறந்த வீரர்களுக்கான பரிசில்களை திரு.ச.றூபின்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த கோல்காப்பாளராகவும், திரு.அ.வீன்சிங் சிறந்த சகல துறை ஆட்டக்காரராகவும் தெரிவு செய்யப்பட்டு பரிசில்களைப் பெற்று எமது கழகத்திற்கு பெரும் புகழைத் தேடிக் கொடுத்தனர். திரு . அ. வீன்சிங் அவர்கள் கடந்த காலங்களில் பல தடவைகள் சிறந்த விளையாட்டு வீரராக தெரிவுசெய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இன்றும் இவ்வீரர்கள் யாழ் தெரிவு அணியில் விளையாடி வருவது எமது கழகத்திற்கு பெருமையை சேர்க்கின்றது. கழக வளர்ச்சிக்கு உள் ஊர் மக்கள் மாத்திரமன்றி வெளிநாடுகளில் வாழும் உடன்பிறப்புகளும் பழைய வீரர்களும் உதவி வருவது கண்கூடாகும். மேலும் கழக நிர்வாகிகளின் செயற்பாடுகளும் கழக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருபவை பாராட்டத்தக்கது..

**ஒற்றுமையே பலம்**

**திறமையே உரம்**

**வெற்றியே இலக்கு**

என்ற தாரக மந்திரத்தை கடைப்பிடித்து உலகளாவிய ரீதியில் விளையாட்டுக் கழகம் மறுமலர்ச்சி பெற்று வருவது எமக்கு பெருமைக்குரியதாகும்.

எழுதியவர்
நீ.அருளானந்தம்
முன்னாள் சனசமூக நிலைய விளையாட்டுக்கழக பொதுச்செயலாளர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளை அகற்று

கூட்டிலிருந்து கிளி
பறந்துவிட்ட செய்தி கேட்டேன்
தமிழன் கூட்டுக்குள் அடைக்கப் பட்டதாய் - புதுச்
செய்தியும் கேட்டேன்
யார் இந்தத் தமிழன்?
சங்கத் தமிழ் தோன்றுமுன்பே
சரித்திரம் படைத்தவனல்லவா?
இவன்
இன்று
உரிமை மறுப்பை எதிர்த்து
போராடப் புறப்பட்டவன்
வாழ்வதற்காய் சாகத்துணிந்தவன்
இவன் ஒளியைக் கண்டதுமில்லை
போதும் போதும் என்று பொறுத்திருந்து
பொங்கியெழுந்தவன் - இனி
எதிரி போதும் போதும் என்று கூறும் வரை
போராடப் புறப்பட்டவன்
வீட்டில் பூச்சி பறக்கும்
உரிமை மறுப்பு
இளைஞன் நடமாடும்
உரிமைப் பறிப்பு
வெளிச்சம் எங்கள் வாழ்வில்
வந்ததேயில்லை
பிணத்தை எரித்து மட்டுமே
வெளிச்சம் கண்டவர்கள் நாங்கள்
இருள் ஏன் இன்னும்
விலகவில்லை – எங்கள் வாழ்வில்
வெளிச்சம் ஏன் இன்னும்
வரவில்லை
ஆராய்ந்து பார்த்தேன்
சூரியன் எங்கள் விலாசத்தைத்
தொலைத்து விட்டான்
சந்திரன் வரும்வழியில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலியிடம் சென்றுவிட்டான்
நட்சத்திரங்களுக்கும் நேரமில்லை
மின்னி மின்னிப் பூச்சிகள்
கம்பளிப் பூச்சியாக மாறிவிட்டன
எம்மிடம் ஒளி வீச - இவை
எதிர் அலை வீசுகின்றன
எங்கள் வாழ்வில் - நாங்கள்
வழுக்கி வீழ்ந்ததில்லை - ஏன்
நாங்கள் பிறந்ததே - எங்கள்
பெற்றோர் வழுக்கி வீழ்ந்த
பள்ளத்தில் தானே ......
இனியொரு தலைமுறை
வேண்டாம் இங்கு
புதியதொரு தலைமுறை காண
பிறிதொரு நாடும்
வேண்டாம் எமக்கு
மதியதன் ஒளிபோல
எங்கள் தேசம் ஒளிபெற்று
எங்கள் வாழ்வும்
ஒளிபெற வேண்டும் அதற்காக
இருளை அகற்றிவிடு
இருளை அகற்றிவிடு

**அடைக்கலம் அல்பிரட் (சுரேன்)**

**கனடா**

கனடாவில் உதயன் பத்திரிகையால் கடந்த ஆண்டு நடாத்தப்பட்டு கவிதைப் போட்டியில் "இருளை அகற்று" கவிதைக்கு இரண்டாம் பரிசைப் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது வாழ்வு

உலகில் பிறப்போர் ஒரு நாள் இறப்பது நிச்சயம். வாழ்க்கை வசந்த மலர்கள் பூத்துக்குலுங்கும் பூந்தோட்டமல்ல, மாறாக கல்லும் முள்ளும் நிறைந்த கரடு முரடான வழிகளை கொண்டதாகும். வாழ்க்கை வாழ்வதற்கானது, இந்த வாழ்க்கையை யாரும் வெறுத்துவிடவில்லை. நமக்காக கிடைத்த வாழ்க்கையை நாம் தான் வாழ்ந்து பார்க்க வேண்டும். வாழ்க்கை நீண்டகாலம் உயிரோடு இருப்பதற்கானதல்ல. மாறாக நமது வாழ்க்கை பயனுள்ளதாக இருக்கவேண்டும். மனித மனம் உணர்ச்சிகளால் நிரம்பப்பெற்றது. வேலைக்குப் போவதும், உண்ணுவதும், உறங்குவதும் மட்டும் வாழ்கையாகிவிடாது. இப்படி வாழ்வோமானால் வாழ்க்கை மகிழ்ச்சியற்றதாகிவிடும். மனங்களில் சலிப்புணர்வினை ஏற்படுத்திவிடும். இதனால் மனதில் நிம்மதியின்மை ஏற்பட்டு வருத்தத்திற்கு உள்ளாகும் நிலைமை தான் மிஞ்சும். அப்படி வாழாமல் வாழ்க்கையில் சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் உள்ளவர்களாக வாழவேண்டும். வாழ்கையில் ஏதேனும் செய்ய முற்படும் போது பிரச்சினைகள் வரும் என்று எண்ணிக்கொண்டு ஒதுங்கி நிற்பது வாழ்க்கையல்ல. பிரச்சினைகள் இன்றி யாரும் வாழ முடியாது. வாழ்க்கையானது பிரச்சினையென்ற சங்கிலியால் பிணைக்கப்பட்டது தான். உலகில் கவலை அற்றவர்கள் இருவர் மட்டும் தான் ஒருவர் இறந்தவர், மற்றவர் பிறக்காதவர். எல்லா மனிதர்கட்கும் பிரச்சனைகள் உண்டு. அதற்காக பயந்து கொண்டு ஒதுங்கிக் கொள்ளக்கூடாது. பிரச்சினைகளை எதிர்கொள்ளும் சவாலுடன் வாழ்க்கையை வாழ்வதற்கு தயாராக வேண்டும். அப்போது தான் வாழ்வில் வெற்றி கொள்ள முடியும். புலம் பெயர்ந்த இந்த நாட்டில் வாழ்வதற்காய் நாம் நம்மை தயார் செய்து கொண்டு வந்தவர்கள் இல்லை. மாறாக சூழலுக்காக நம்மை மாற்றிக்கொண்டு வாழ்ந்து கொண்டு, வெற்றியும் பெற்றுக்கொண்டிருக்கின்றோம். இதே போன்று நமக்கான கடமைகளிலும் நாம் நமது நேரத்தினை ஒதுக்கி வாழ்தல் வேண்டும். எதற்கெடுத்தாலும் நேரமின்மை என்ற வார்த்தை நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதற்காக என்பதனை மறந்துவிடவேண்டாம். ஒரு மனிதனுக்கு வாழ்வின் அங்கமாக அவனது சமூக சிந்தனை இருக்கின்றது. அதனால் தான் “சமூகம் உனக்கு என்ன செய்ததென்று கேட்காதே நீ சமூகத்துக்கு என்ன செய்தாய் என்று கேள்” என்று கூறுகின்றார்கள். முரண்பாடுகள், பிரச்சினைகள் என்பதற்காக சமூக சிந்தனையின்றி வாழ்ந்து உன் சமூகத்துக்கு செய்ய வேண்டிய கடமைகளில் இருந்து விலகிக்கொள்வது வாழ்க்கையாகாது. இன்றைய எமது சமூக வாழ்க்கையில் மனிதன் சாத்திரம், சம்பிரதாயம் என்ற சங்கிலியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணைக்கப்பட்டு, அதிலிருந்து தன்னை விடுவிக்க முடியாமல் தத்தளிக்கின்றான். பலர் அதிலிருந்து விடுபட முனைவதும் இல்லை. பலருக்கு மீள்தல் பற்றிய சிந்தனை கூட எழுவதுமில்லை. போலிகளும், பித்தலாட்டங்களும், ஏமாற்று பேர்வழிகளும் அதிகமாகிக்கொண்டிருக்கும் மனித வாழ்வில், மனித வாழ்வு பற்றிய சிந்தனைத் தேடல் அவசியமாகிறது. சிந்தனை தேடல் கொள்ளும். தேடல் அனுபவம் தரும். அனுபவம் வாழ்தலின் முறையை வகுத்துக்கொள்ளும். முறையான வாழ்க்கை மனிதனை மனிதனாக்கும். அவனே காலமாகும் போது மற்றவர்க்கு மகானாவான். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மனிதம் வாழ்கின்றது. ஆனால் ஆசை என்னும் கறையான்களால் அது அரிக்கப்பட்டு மனிதம் நோய்வாய்ப்பட்டு கிடக்கின்றது. பணம், பொருள், கார், பங்களா என்று பறந்து பறந்து தேவைகளை அதிகமாக்கிக்கொள்ளும் மனிதனே! நீ வாழ்ந்ததன் அடையாளம் தான் என்ன? நாளைய உனது இறப்பில் எதை வாழ விடப்போகின்றாய்? உன் சேமிப்பெல்லாம் எதற்காக? யாருக்காக? நீ நினைத்ததை உன்னால் அனுபவிக்க முடிந்ததா? நேற்று இருந்தவன் இன்றில்லை, இன்று இருப்பவன் நாளை இல்லை. வாழ்க்கை இப்படி இருக்கும் போது உன் சேமிப்பு யாருக்காக? இதற்காக நீ இழந்தது, இழந்துகொண்டிருப்பது எத்தனை என்று உனக்கு தெரியுமா? போட்டி, பொறாமை, பகமை இவைகள் மிச்சமாகும் போது நீ காணமல் போய்விடுவாய். அன்பு, பண்பு, அடக்கம், தானம் என்ற நற்பண்புகள் உனக்குள் வாழும் போது மட்டும் தான் நாளைய உன் இறப்பிலும் நீ வாழ்ந்து கொண்டிருப்பாய். வாழ்க்கை என்பது இயற்கை. வாழ்தல் என்பது செயற்கை. நம்மை நாமே பதிவு செய்து கொள்வது தான் வாழ்தல்.

உன் பதிவுகளை காலத்தால் அழியாததாக இருப்பதனை நிச்சயித்துக்கொள்வது நீ வாழ்தலின் முறைகளில் தான் தங்கி நிற்கின்றது என்பதனை மறந்து விடாமல் ஒவ்வொரு மனிதனும் எது எனது வாழ்க்கை என்பதனை நிர்ணயித்து பதிவு செய்து கொள்வது அவரவர் கடமையாகும் என்பதனை மறந்து விடாதீகள்.

# ஓ மனிதா எது உனது வாழ்வு?

அசீர் அன்ரனி
கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியச் சுவை

இலக்கியச் சுவையின் அதிசிறந்த வெளிப்பாடாகத் திருக்குறள் திகழ்கிறது.திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார், அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என முப்பாலாக உள்ளது, பால் என்றால் தொகுதி என்று பொருளாகும். அறம், பொருள், இன்பம் ஆகிய தொகுதிகளை பெற்றிட்ட இலக்கியமாகும். வாழ்க்கைக்கு வேண்டிய நீதி நியாயங்களை ஒழுங்கான முறையில் எடுத்துரைக்கும் தமிழ் வேதமாக திருக்குறள் விளங்குகிறது. "வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஏத்திப்போற்றுகிறார். "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்" என்று தமிழ்ப்பெண் புலவர் ஔவையார் வாழ்த்துகிறார். "உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உருக்குமே வள்ளுவர் வாய்மொழி மாண்பு" என்று மாங்குடி மருதனார் என்னும் பெரும் புலவர் வியந்து பாராட்டுகிறார். அந்த வகையில் பெருமையான கருத்துகளையும், நுட்பங்களையும் பெற்றிட்ட பெருநூலாகவுள்ளது.

திருக்குறளில் நூற்றுமுப்பத்துமூன்று அதிகாரங்களுள்ளன. ஒவ்வொரு அதிகாரங்களிலும் பத்துப்பத்து திருக்குறட்பாக்களாக உள்ளன. ஆயிரத்து முன்னூற்று முப்பது திருக்குறட்பாக்கள் எல்லாமாக உள்ளன. திருக்குறளில் நாற்பத்திரண்டாயிரத்து நூற்றுத் தெண்ணூற்று நான்கு எழுத்துக்கள் உண்டென்று எண்ணியுள்ளனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகத் திருக்குறள் எழுதப்பட்டது. திருக்குறள் என்றால் மேன்மைக்குரிய குறுகலான வெண்பாப் பாட்டு என்று பொருளாகும். ஒவ்வொரு திருக்குறளும் இரண்டு வசனங்கள் அல்லது இரண்டு அடிகளாலானவை. ஏழு சொற்கள் அல்லது ஏழு சீர்கள் ஒவ்வொரு குறட்பாக்களிலும் உள்ளன. முப்பால் நூல், தமிழ் மறை, பொய்யாமொழி, தேவர் குறள், குறள் நெறி, திருமறை முதலிய மறுபெயர்கள் திருக்குறளின் பெருமைகளை இனிமையாக்குகின்றன. செந்நாப்போதர், பொய்யாமொழியார், தமிழ்ச்சித்தர், திருக்குறட்தேவர், தமிழ்க்காவலர், நாயனார் முதலிய மறுபெயர்கள் திருவள்ளுவப் பெருந்தகையாருக்குச் சிறப்பாயமைந்துள்ளன. திருக்குறள் தமிழ் மொழிக்கு புகழ் சேர்த்த ஒரு நூல். தமிழர்க்கு வாழ்வியல் உண்மைகளை உணர்த்தும் ஒரு நூல். கிறித்தவ வேதாகம நூலுக்கு இணையாகத் திருக்குறள் சிறப்புப் பெற்றுள்ளது. உலகிலுள்ள எல்லா மதங்களுக்கும் பொது நூலாகத் திருக்குறளுள்ளது. உலக மக்கள், மெய்யான உயர்ந்த வாழ்க்கை வாழ்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய ஒழுங்கு முறைகளைத் தெட்டத்தெளிவாக எடுத்துரைக்கிறது. உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்த்தெழுதப்பட்டுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இருந்த தமிழ்ச்சங்கம் நீண்ட விவாதங்கள், சோதிப்புகளுக்குப் பின்பே திருக்குறளை உயர்ந்த நூலாக ஏற்றுப் பெருமை பெற்றது. திருவள்ளுவரின் சமகாலத்துப் புலவராக ஔவையார் விளங்கினார்.

திருக்குறளின் அறத்துப்பால்-தொகுதி முன்னூற்று எண்பது திருக்குறட்பாக்களைப் பெற்றுள்ளது. முகவுரையாகப் பாயிரமும், இல்லற இயல், துறவற இயல், ஊழ் இயல் என நான்கு வகைகளாக உள்ளன. பொருட்பால் என்னும் தொகுதியில் எழுநூறு திருக்குறட்பாக்கள் உள்ளன. அரசியல், அரசுக்குரிய அங்கங்களான அங்கவியல், மக்களின் இயலான ஒழியியல் ஆகிய மூன்று பகுதிகளாக உள்ளன. இன்பத்துப்பால் என்னும் தொகுதியில் இருநூற்றைம்பது திருக்குறட்பாக்கள் உள்ளன. காதலித்தல் அல்லது விரும்புதல் என்னும் கருத்தை தெரிவிக்கின்ற களவியல், உறுதியாக ஏற்றுக்கொள்ளல் என்னும் கருத்தை தெரிவிக்கின்ற கற்பியல் ஆகிய இரு பகுதிகளைப் பெற்றுள்ளன. ஒவ்வொரு திருக்குறளும் நுண்மையான கருத்துக்ளையும், மாண்பான நிலைகளையும், நடுநிலைத்தன்மைகளையும், நீதிகளையும் பெற்றுள்ளன. முப்பாலில் உள்ள – பாயிரம், இல்லற இயல், துறவற இயல், ஊழ் இயல், அரசியல், அங்கவியல், ஒழியியல், களவியல், கற்பியல் ஆகிய ஒன்பது பகுதிகளிலுமுள்ள அதிசிறந்த திருக்குறள்களையும் கருத்துகளையும் கவனிப்போம்.

திருக்குறளின் முதலாவது தொகுதியாக விளங்குகின்ற அறத்துப்பாலைக் கவனிப்போம். பாயிரம் என்றால் முகவுரை என்று பொருளாகும். கடவுள் வாழ்த்து, மழையின் சிறப்பு அல்லது வான்சிறப்பு, துறந்தார் பெருமை அல்லது நீத்தார் பெருமை, அறத்தைக் கட்டாயமாக பின்பற்ற வேண்டும் என்னும் பொருளில் அறன் வலியுறுத்தல் என்னும் நான்கு அதிகாரப்பகுதிகளை உடையதாக பாயிரம் உள்ளது. நான்கு அதிகாரங்களிலும் எனது சிந்தைக்கு விருந்தான ஒரு திருக்குறளையும் கருத்தையும் கவனிப்போம்.

அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் - பொறாமை, பேராசை, பெருங்கோபம், புண்படுத்தும் துன்பமான சொல் ஆகிய இந்த நான்கும் அறவழிக்கு அல்லது நியாயமான நீதிக்குப் பொருந்தாதவைகளாகும். அவை நீதிக்கு அல்லது தருமத்துக்கு குற்றமானவைகளாகும்.

அறத்துப்பாலின் இரண்டாவது இயலான இல்லற இயலில் இருபது அதிகாரங்கள்உள்ளன. இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணை நலம், மக்கட்பேறு, அன்பு உடைமை, விருந்து ஓம்பல், செயந்நன்றி அறிதல், நடுவுநிலைமை, அடக்கம் உடைமை, ஒழுக்கம் உடைமை, பிறனில் விழையாமை, பொறை உடைமை, அழுக்காறாமை, பிறர் பொருளைக் கவர நினையாமை என்னும் கருத்துப் பெற்ற வெ∴காமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினை அச்சம், ஒப்புரவு அறிதல், ஈகை, புகழ் ஆகிய இருபது அதிகாரங்களாகும். இல்வாழ்க்கையில் ஒரு குறளையும் கருத்துரையையும் கவனிப்போம்.

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.**

பொருள் - இல்வாழ்க்கை பண்புடையதாகவும் பயனுடையதாகவும் விளங்குவதற்கு அன்பான உள்ளமும் அதையொட்டிய நல்ல செயல்களும் தேவை. அன்பு பண்பைத் தரும், அறம் பயனைத் தரும், தருமம் தலை காக்கும், தருணத்தில் உயிர் காக்கும்.

அறத்துப்பால் தொகுதியில் செய்ந்நன்றி அறிதல் அதிகாரத்தில் ஒரு குறளையும் கருத்துரையையும் கவனிப்போம்.

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு.**

பொருள் - எந்த அறத்தை மறந்தார்க்கும் வாழ்வு உண்டு, ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தார்க்கு வாழ்வு இல்லை. ஒருவர் செய்த உதவியை என்றும் மறக்கக் கூடாது.

ஒழுக்கம் உடைமை அதிகாரத்தில் ஒரு குறளையும் பொருளையும் கவனிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

பொருள் - ஒருவர்க்கு உயர்வு தரக்கூடியது ஒழுக்கம் என்பதால் அந்த ஒழுக்கமே உயிரைவிட மேலானதாகப் போற்றப்படுகிறது.

புகழ் அதிகாரத்தில் ஒரு குறளையும் பொருளையும் கவனிப்போம்.

ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை உயிர்க்கு.

பொருள் - உள்ளதைப் பலருக்கும் பகுத்துக் கொடுத்துப் புகழோடு வாழ வேண்டும். அப்படிப்பட்ட வாழ்வு பயன் உள்ளதாகும். உயிருக்கு நன்மை தருவதாகும்.

அருள் உடைமையில் ஒரு குறளையும் பொருளையும் கவனிப்போம்.

வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து.

பொருள் - தன்னைவிட மெலிந்தவர்களைத் துன்புறுத்த நினைக்கும்போது, தன்னைவிட வலியவர் முன்னால் அஞ்சி நிற்கும் நிலைமை தனக்கு இருப்பதை மறந்து விடக்கூடாது.

துறவற இயலில் - தவம் அதிகாரத்தில் ஒரு குறளும் பொருளும்.

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு.

பொருள் - தம் உயிருக்கு நன்மை செய்பவர் தவம் செய்வார்கள். மற்றவர்கள் ஆசைக்குட்பட்டுத் தம் உயிருக்குத் தீமை செய்வார்கள்.

அறத்துப்பால் - தொகுதியில் மூன்றாவது பகுதியாகிய துறவற இயலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் உடைமை, புலால் மறுத்தல், தவம், கூடாஒழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை, நிலையாமை, துறவு, மெய் உணர்தல், அவா அறுத்தல் ஆகிய பதின்மூன்று அதிகாரங்கள் உள்ளன. ஏற்கனவே அருள் உடைமையிலும், நோன்பாகிய தவத்திலும் இரு குறள்களையும் பொருள்களையும் கவனித்தோம். கள்ளாமையில் ஒரு குறளையும் பொருளையும் கவனிப்போம்.

**உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைக்**
**கள்ளத்தால் கள்வே மெனல்.**

பொருள் - பிறன் பொருளைக் கள்ளமாகக் களவாடிக் கொள்வோம் என்று ஒருவன், தன் உள்ளத்தால் நினைத்தாலும் அந்த நினைவுகூடத் தீமையானதே.

வாய்மையில் ஒரு குறளையும் பொருளையும் கவனிப்போம்.

**வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றந்**
**தீமை யிலாத சொலல்.**

பொருள் - பிறருக்கு தீமை ஏற்படாத ஒரு சொல்லைச்( துன்பம் இல்லாத சொல்) சொல்லுவதுதான் வாய்மை அல்லது சத்திய வழியாகும்.

இன்னா செய்யாமை என்றால் துன்பம் செய்யாமை. இவ்வதிகாரத்தில் ஒரு குறளையும் பொருளையும் நோக்குவோம்.

**இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயஞ் செய்து விடல்.**

பொருள் - நமக்கு தீங்கு செய்தவரைத் தண்டிப்பதற்குச் சரியான வழி, அவர்வெட்கித் தலை குனியும்படியாக அவருக்கு நன்மை செய்வதுதான்.

நிலையாமை அதிகாரத்தில் ஒரு குறளையும் பொருளையும் நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

பொருள் - நிலையில்லாத வாழ்க்கையில், உறக்கத்திற்குப் பிறகு விழிப்பதைப் போன்றது பிறப்பு, திரும்ப விழிக்க முடியாதபடி மீளா உறக்கம் கொள்வதே இறப்பு.

மெய்யுணர்தல் என்றால் உண்மை அறிதல் என்று பொருளாகும். இவ்வதிகாரத்தில் ஒரு குறளையும் பொருளையும் நோக்குவோம்.

எப்பொரு ளெத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

பொருள் - வெளித் தோற்றத்தைப் பார்த்து ஏமாந்துவிடாமல் அது பற்றிய உண்மையை உணர்வதுதான் அறிவுடமையாகும்.

அறத்துப்பாலில் நான்காவது பகுதியாகிய ஊழியலில் ஒரு குறளையும் பொருளையும் நோக்குவோம்.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

பொருள் - இயற்கை நிலையை மாற்றி மற்றொரு செயற்கை நிலையை அமைத்திட முனைந்தாலும் இயற்கை நிலையே முதன்மையாக வந்து நிற்பதால் அதைவிட வலிமையானவையாக வேறு எவை இருக்கின்றன.

திருக்குறளின் இரண்டாவது பாலாகிய (தொகுதி) பொருட் தொகுதியில் அரசியல், அங்கவியல், ஒழிப்பியல் ஆகிய பகுதிகள் உள்ளன. அரசியலில் - இறைமாட்சி, கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவு உடைமை, குற்றம் கடிதல், பெரியாரைத் துணைக்கோடல், சிற்றினம் சேராமை, தெரிந்து செயல்வகை, வலியறிதல், காலமறிதல், இடன் அறிதல், தெரிந்து தெளிதல், தெரிந்து விளையாடல், சுற்றந்தழால் (சுற்றத்தவரைச் சேர்த்துக்கொள்ளல்), பொச்சாவாமை, செங்கோன்மை, கொடுங்கோன்மை, வெருவந்த செய்யாமை, கண்ணோட்டம், ஒற்றாடல், ஊக்கம் உடைமை, மடி இன்மை (சோம்பலின்மை),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள்வினை உடைமை (முயற்சி செய்தல்), இடுக்கண் அழியாமை ஆகிய இருபத்தைந்து அதிகாரங்கள் உள்ளன.

கல்வி அதிகாரத்தில் ஒரு குறளையும் பொருளையும் நோக்குவோம்.

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

பொருள் - கற்பதற்குத் தகுதியான நூல்களைப் பழுதில்லாமல் கற்க வேண்டும். கற்றதன் பின்னர் கற்ற அக்கல்வியின் தகுதிக்குத் தகுந்தபடி நடக்க வேண்டும்.

பொருட்பால் - தொகுதியில் அரசியல் அறிவுடைமை அதிகாரத்தில் ஒரு குறளையும் பொருளையும் நோக்குவோம்.

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு.**

பொருள் - எந்தவொரு பொருள் குறித்து எவர் எதைச்சொன்னாலும் அதை அப்படியே நம்பி ஏற்றுக்கொள்ளாமல் உண்மை எது என்பதை ஆராய்ந்து தெளிவதுதான் அறிவுடைமையாகும்.

பெரியாரைத் துணைக்கோடல் அதிகாரத்தில் ஒரு குறளையும் பொருளையும் நோக்குவோம்.

**அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்**
**பேணித் தமராக் கொளல்.**

பொருள் - பெரியவர்களைப் போற்றிப் பாராட்டி அவர்களுடன் உறவாடுதல் எல்லாப் பேறுகளையும்விடப் பெரும் பேறாகும். நற்குணமுள்ள அறிவாளிகளைப் பாராட்டுவதுடன் உறவினராகக்கொள்வது சிறப்பானது.

நல்லது தீது ஆராய்ந்து விளங்குதல் என்னும் பொருளில் தெரிந்து தெளிதலில் ஒரு குறளையும் பொருளையும் நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணநாடிக் குற்றமு நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

பொருள் - ஒருவரது குணங்களையும், அவரது குறைகளையும் ஆராய்ந்து பார்த்து அவற்றில் மிகுதியாக இருப்பவை எவை என்பதைத் தெரிந்து அதன் பிறகு அவரைப்பற்றிய ஒரு தெளிவான முடிவுக்கு வர வேண்டும். நல்ல குணங்கள் அதிகமிருந்தால் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஊக்கம் உடைமையில் ஒரு குறளையும் பொருளையும் நோக்குவோம்.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.

பொருள் - தண்ணீரின் அளவுதான் அதில் மலர்ந்துள்ள தாமரைத் தண்டின் அளவும் இருக்கும். அதுபோல மனிதரின் வாழ்க்கையில் உயர்வு அவர் மனதில் கொண்டுள்ள ஊக்கத்தின் (முயற்சி) அளவேயிருக்கும்.

பொருட்பாலில் அங்கவியல் பகுதியில் முன்னூற்றுப்பத்து திருக்குறட்பாக்கள் முப்பத்தியொரு அதிகாரங்களில் உள்ளன. அங்கவியல் பகுதி அரசியலுக்குரிய அங்கமாகத் திகழ்கிறது. செயலில் உறுதி என்னும் வினைத்திட்பம் அதிகாரத்தில் ஒரு குறளையும் பொருளையும் நோக்குவோம்.

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

பொருள் - எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதி உடையவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணியவாறே வெற்றி பெறுவார்கள்.

பொருட்பாலில் ஒழிபியல் பகுதியில் பதின்மூன்று அதிகாரங்கள் உள்ளன. ஒழிபியல் என்றபல் குடியியல் அல்லது மக்கள் இயல் என்று பொருளாகும். நட்பு அதிகாரத்தில் ஒரு குறளையும் பொருளையும் நோக்குவோம்.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் - இன்முகம் காட்டுவது மட்டும் நட்புக்கு அடையாளமல்ல, மனமார நேசிப்பதே உண்மையான நட்பாகும்.

மானம் அதிகாரத்தில் ஒரு குறளையும் பொருளையும் நோக்குவோம்.

**தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்**
**நிலையின் இழிந்தக் கடை.**

பொருள் - மக்களின் நெஞ்சத்தில் உயர்ந்த இடம் பெற்றிருந்த ஒருவர் மானமிழந்து தாழ்ந்திடும்போது தலையிலிருந்து உதிர்ந்த மயிருக்குச் சமமாகக் கருதப்படுவார்.

பெருமை அதிகாரத்தில் ஒரு குறளையும் பொருளையும் கவனிப்போம்.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்.**

பொருள் - பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும்.

பொருட்பாலில் - ஒழிபியலில், பண்புடைமை பகுதியில் ஒரு குறளையும் பொருளையும் நோக்குவோம்.

**அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண் பில்லா தவர்.**

பொருள் . அரம் போன்ற கூர்மையான அறிவுடைய மேதையாக இருந்தாலும்மக்களுக்குரிய பண்பு இல்லாதவர் மரத்துக்கு ஒப்பானவரேயாவார்.

நாணுடைமை அதிகாரத்தில் ஒரு குறளையும் பொருளையும் நோக்குவோம்.

**ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல**
**நாணுடைமை மாந்தர் சிறப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் - உணவு, உடை போன்ற அனைத்தும் எல்லோர்க்கும் பொதுவான தேவைகளாக அமைகின்றன. சிறப்புக்குரிய தேவையாக இருப்பது பிறரால் பழிக்கப்படும் செயல்களைத் தவிர்த்து வாழும் நாணுடைமைதான், பழிபாவத்துக்குப் பயந்து வாழ வேண்டும்.

திருக்குறளின் மூன்றாவது தொகுதியாக இன்பத்துப்பால் உள்ளது. இன்பத்துப்பால் களவியல், கற்பியல் என இருவகைப்யாகும். களவியல் என்றால் விரும்புதல் என்று பொருளாகும். களவியலில் ஏழு அதிகாரங்கள் உள்ளன. கற்பியல் என்றால் இறுதிவரை ஏற்றுக்கொள்ளல் என்று பொருளாகும். "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்று தொல்காப்பியத்தில் எடுத்துரைக்கப்படுகிறது. கற்பியலில் பதினெட்டு அதிகாரங்கள் உள்ளன.

புணர்ச்சி மகிழ்தல் அதிகாரத்தில் ஒரு குறளையும் பொருளையும் நோக்குவோம்.

**கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்**
**ஒண்தொடி கண்ணே உள.**

பொருள் - வளையல் அணிந்த இந்த வடிவழகியிடம், கண்டு மகிழவும், கேட்டு மகிழவும், தொட்டு மகிழவும், முகர்ந்துண்டு மகிழவுமான ஐம்புல இன்பங்களும் நிறைந்துள்ளன.

கோபம் அல்லது பிணக்குக் கொள்வதால் இன்பமாகும் என்னும் பொருளில் ஊடலுவகை அதிகாரம் இறுதி அதிகாரமாகக் கற்பியலில் உள்ளது. திருக்குறளின் இறுதிக்குறளாக – ஆயிரத்து முன்னூற்று முப்பதாவது குறளாக வருவதைப் பொருளுடன் நோக்குவோம்.

**ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்**
**கூடி முயங்கப் பெறின்.**

பொருள் - ஒருவருக்கொருவர் செல்லமாகக் கோபம்கொண்டு பிரிந்திருப்பது எனப்படும் ஊடல், இருவரும் சேர்ந்த பிறகு காதல் இன்பத்தை அதிகமாகப் பருகிட உதவும். தம்பதியர்களுக்கிடையில் சிறு கோபங்களும், பிணக்குகளும் ஏற்படுவதால் இன்பம் அதிகமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களுடன் திருக்குறள் நிறைவு பெறுகிறது.

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு**

பொருள் - அகரம் எழுத்துகளுக்கு முதன்மை, ஆதிபகவன் உலகில் வாழும்உயிர்களுக்கு முதன்மை.

தமிழ் எழுத்துகளில் அகரத்தில் ஆரம்பித்து தமிழின் இறுதி எழுத்தாகிய "னகரத்தின் மெய்யெழுத்தில்" திருக்குறள் நிறைவு பெற்றது சிறப்பாக உள்ளது. "பெறின்" என்னுஞ் (இறுதித் திருக்குறட்பாவின்) சொல் இறுதியாய் உள்ளது. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி" என்னும் பழமொழியைக் கவனிப்போம். ஆலமரத்துக் குச்சியும், வேப்ப மரத்துக் குச்சியும் பற்களுக்கு உறுதி தருபவையாகும். அவை போல நாலு என்று கூறப்படுகின்ற நாலடியாரும், இரண்டு அடிகளைப் பெற்றுள்ள திருக்குறளும் பேசுகின்ற பேச்சுக்கு, சொல்லுகின்ற பயனுள்ள வார்த்தைகளுக்கு உறுதியாக உள்ளன என்று கருத்துத் தெரிவிக்கின்ற பழமொழி சிந்தைக்கு விருந்தாகிறது. " திருக்குறள் இமாலய மலையாகும். திருக்குறளின் பொருள் உரைகள் இமாலயப் பொன்னாடைகள். "
- கலைஞர்.

குறிப்பு – வள்ளுவப் பெருந்தகையாரின் திருக்குறட்பாக்களுக்குப் பொருத்தமான கருத்துரைகளை கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் கருத்துக்களோடு சேர்த்துஎழுதியுள்ளேன்.

பண்ணகத்துப்பாலபண்டிதர்
ஆ. விவேகானந்தன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடர்தாகம்

இயற்கை எழில்மிகு மலைதனில்
மென்மையின் அழகுகொண்டு
உறங்கிய பனித்துளிகள்
ஒன்றாய் உருகி
நதியாகி
மானிடர் தாகம் போக்க தரைநோக்கி......
இனிய இசையெழுப்பி
வற்றாக் கடலின்
மடியில் மையம் கொண்டு
கரைகண்ட பனித்துளிகள் போல்
எந்தாய் நாட்டு மக்கள்தம்
தியாகம் நிறை வாழ்விலும்
ஒளிகண்டு கரைகாண வேண்டும்



அ.ஜொலிமன்
பிரான்ஸ்

இம்மலரிலுள்ள அட்டைப்படம் பற்றி
உங்கள் சிந்தனையில் உதிக்கும் கருத்துக்களை
கவிதையாகவோ, கட்டுரையாகவோ, சிறுகதையாகவோ
31.10.2005க்கு முன்னர் எழுதி அனுப்புங்கள்.
தரமான முதல் இரு ஆக்கங்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்
பரிசு 1 : ரூபா 10000.- பரிசு 2 : ரூபா 5000.-

அனுப்பவேண்டிய முகவரி Navanthurai dev.fond
Langarinden 144
5132 Nyborg
Norway



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவாந்துறை புனித பரலோக மாதா ஆலயத்தின் வரலாறு (கடந்த நெய்தல் அலை1 இன் தொடர்ச்சி)

அன்னையின் திருச்சுருபம் அகற்றப்பட்டதைக் கண்ட மக்கள் கூட்டம் கண்ணீர் விட்டுக் கதறியழுத காட்சி இன்னமும் தங்கள் மனக்கண்முன் நிற்பதாக, அன்று நடந்த சம்பவங்களைப்பற்றி வயதில் முதிர்ந்த பெரியார்கள் சொல்லும் போது எமது மேனியெல்லாம் சிலிர்ப்பதை நாம் உணர்ந்தோம். இந்தச் சம்பவங்களைக் கண்டு மனங்குழம்பிய பெரியோர்கள் தமது ஆலோசனைச்சபையைக் கூட்டினர். இந்தச்சபைக்கு முதலாளிமார் சபையெனும் பெயர் வழங்கியது. இச்சபை கிராமத்தின் பெரியோர்கள் மட்டில் இந்த மக்களின் ஆன்ம, சமுக மேம்பாடுகளுக்காக ஆறுபேர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டு இங்குள்ள மாதாகோவிலைச்சேர்ந்த மக்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப் படுத்துவதாக அமைந்திருந்தது.

இந்தச்சபை கூடித் தீர்மானிக்கும் விடயங்களை ஏற்று அவற்றை செயல் வடிவில் காட்ட இவர்களது ஒற்றுமையும் கட்டுப் பாடான தன்மையும் காரணங்களாகும். மேலும் கிராமத்தில் வளரும் பலவிதமான பிரச்சினையை நேர்மையோடு அணுகித் தீர்ப்பதும், மக்களின் எதிர்கால வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு, இவர்களின் உழைப்பிலிருந்து ஒருபகுதி பத்தில் ஒன்று குத்தகை முறையில் சேமித்து வைப்பதும், பொதுச் செலவினங்களைக் கணிப்பதோடு பங்குத்தந்தையின் தாபரிப்பு பெருநாள் காலச் செலவுகள், வேறு பொதுவான செலவுகளை ஈடுசெய்வதும் வழக்கம். இந்த வகையில் சேர்ந்த பணத்திலிருந்து எதிர்கால மக்களுக்கு பயன்படக் கூடிய வகையில் குடிசைக் கோவில் அமைந்திருந்த காணியை வாங்கிவிட்டிருந்தனர். இந்த நாட்களில் முதலாளிமார் சபையென்று சொல்லுகின்ற நிர்வாக சபையிலிருந்து நேர்மையோடும், நீதியோடும் நிர்வாகத்தைத் திறம்பட நடத்திக் கருமமாற்றிய பெரியார்களை நாம் மறந்துவிட முடியாது. இவர்களது பொதுநல நோக்கையும் சேமிக்கும் திறமையையும் எண்ணி நாம் பெருமிதமடைகின்றோம். எனவே இவர்களது பெயர்களை மனமகிழ்ச்சியோடும் பெருமையோடும் குறிப்பிடுகின்றோம். பெரியோர்கள் யோ.நீக்கிலாப்பிள்ளை (ஞானமுத்து), கி.செல்லத்துரை, ம.கஸ்பாறு, பி.மரியாம்பிள்ளை, அ.பத்தினாதர், வ.இராசமுத்து முதலியோராவர்.

இவர்களது நிர்வாகசபை கூடி ஆலோசனை செய்து கலந்துரையாடியதன் பயனாக வாலிப சங்கத்தாரின் முடிவை ஏற்றுக்கொள்வதென்றும், கோவிலை அமைக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதென்றும் முடிவுசெய்து யாழ். ஆயரை சந்தித்து அவரது அனுமதியைப்பெற்று கொட்டில் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ள மேற்படி காணியில் மேற்குப் பக்கம் காரைநகர் வீதியை அண்டி ஆறுகற்றூண்களைக் கட்டிக் கோப்பிசமிட்டுச் சிறிய கோவில் உருவாக்கப்பட்டது. மேற்படி சம்பவங்கள் உருவாகுவதற்கு அப்போது புனித நீக்கிலார் ஆலயத்திற் பங்குத் தந்தையாக இருந்த நல்லையாச் சுவாமியென அழைக்கப்பட்ட வணக்கத்திற்குரிய சூசைதாசன் அடிகளாரின் ஆலோசனையும் ஒன்றாகும் என்பதை நன்றியுடன் குறிப்பிடுகின்றோம்.

யோ.பிரான்சிஸ்
நன்றி : பொன்விழா மலர்,நாவாந்துறை



அடுத்து வரவிருக்கும் நெய்தல் மலரில் உங்கள்
ஆக்கங்களும் இடம்பெறவிரும்பின்,
எமக்கு எழுதியனுப்புங்கள்.
சமுகமுன்னேற்றம் தொடர்பாய் உங்கள் எண்ணக்கருவில்
மலரும் அனைத்து விடயங்களையும் கவிதையாகவோ ,
கதையாகவோ , கட்டுரையாகவோ நீங்கள் விரும்பும்
வடிவத்தில் எழுதியனுப்புங்கள்.
நெய்தல் மலர் பிரசுரிக்கக் காத்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மண்ணில் நான் கண்ட அன்னையின் தேர்த்திருவிழா

கதிரவனை ஆடையாய் அணிந்து பன்னிரு விண்மீன்கள் சென்னியில் மகுடமாய்ச் சூடிநிற்க சர்ப்பத்தின் தலையை மிதித்த பாதத்தை வெண்ணிலா தாங்கியபடி ஞாயிறுபோல் பேரொளி வீசி விண்ணக மண்ணக பேரரசியாக புனித கன்னிமரியாள் விண்ணகம் சென்ற நாளை விண்ணேற்பு விழாவாக அகிலமனைத்தும் ஆண்டுதோறும் கொண்டாடி மகிழ்வது ஆவணிமாதம் பதினைந்தாம் நாள். வங்கக் கடலலை தாலாட்டும் சங்கத் தமிழ் முழங்கும் தங்கத்தமிழ் ஈழத்தில் யாழ்நகர் மேற்குப் படுதிசைகளும் போர்த்துக்கீசரின் துறைமுகத்தில் சிந்துகவிபாடி செந்தமிழ் தவழும் நாவாந்துறையில் கடல்முகம் நோக்கி வானவில் வடிவமைந்த அழகுமிகு ஆலயத்தில் கோவில் கொண்டெழுந்தருளி அழகோவியமாய் மாட்சியோடு காட்சிதரும் புனித பரலோக அன்னையின் வருடாந்த தேர்த்திருவிழா ஆவணிமாதம் பதினைந்தாம் நாள். நறுமணம் கமழும் மல்லிகை, முல்லை, ரோசா, வெண்ணிறலீலி மலர்களாலும், மின்னொளிகளாலும், அலங்கரிக்கப்பட்ட அழகுமிகு தேரில் மாலைநேரம் இளந்தென்றல் காற்றில் வேதம்முளங்க பண்ணிசைப்பாக்களோடு புனித பரலோக அன்னைவீதி உலாபுறப்பட்டு பக்திவிமரிசையுடன் தேர் ஆலயத்தை வந்தடையும். அன்னையின் திருச்சுரூப ஆசீர் அருளுமுன் "அடைக்கலமே அடைக்கலமே தாயே" என்ற வெண்கல நாதம் தேனருவியாக செவிகளில் பாயும். ஆலயவளாகம் அமைதிப்பூங்காவாகிவிடும் விண்ணையும் மண்ணையும் பக்திப்பரவசத்து வாழ்த்தி கண்களைக் குழமாக்கி மெய்சிலிர்க்க தானறியாத்தசையாட நாத்தழும்பி தாயேயென்று கரங்கூப்பி கருணைமழைபொழியும் அன்னையின் வதனத்தை ஏறெடுத்துப் பார்க்கவைத்த வெண்கல நாதம்தான் காலஞ்சென்ற மரிசால் அருமைராசாவின் இனியநாதம். இவ்விசையின் எழுச்சிகண்டு மகிழ்ச்சி பொங்கிட பரலோக அன்னைக்குச் செபம் வாசிக்கப்படும். அருட்திரு பங்குத்தந்தையால் திருச்சுருப ஆசீர் வழங்கப்பட்டதும், கரவொலி எழுப்பப்படும். விழிகளில் ஆனந்தக்கண்ணீர் மல்கியபடி புன்முறுவல் பூத்து ஒருவரைஒருவர் கைகொடுத்து அரவணைத்து நன்றிகாட்ட திருவிழா இனிது நிறைவுபெறும்.

- - - அ.கொன்சலாமேரி - - --



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவாய் சர்வதேச இளைஞர் ஒன்றியம்

புலம்பெயர்ந்து வாழும் எமது இளைஞர்கள் மத்தியில் நமது தாயூர் பற்றிய சிந்தனை இல்லாமல் போய்விடுமோ என்ற ஏக்கம் எம்மக்கள் மத்தியில் ஆழமாகவேயுள்ளது. இவ்வேக்கத்தினைப் போக்கும் வகையில் பல இன்னல்கள் நிறைந்த புலம்பெயர்வாழ்வில் அதுவும் மேலைத்தேய கலாசாரத்திற்குள் இளைஞர்கள் மூழ்கி தங்கள் வாழ்க்கையைத் தாங்களே அழித்துக்கொள்ளும் அபாயம் நிறைந்த இக்காலகட்டதில் புலம்பெயர்வாழ் நாவாந்துறை இளைஞர்கள் வெவ்வேறு நாடுகளில் பரந்து வாழ்ந்தாலும் தமக்குள் இணைப்பை ஏற்படுத்தி இளைஞர் ஒன்றியத்தினை உருவாக்கியுள்ளனர். இவ் ஒன்றியம் உருவாகியமை எம் ஊருக்கும் எம் இனத்திற்கும் பெருமையைத் தேடித்தருவதோடு இவர்களின் ஆக்கபூர்வமான பயன்தரும் செயற்பாடுகள் எல்லோரையும் மெய்சிலிர்க்க வைக்கின்றது.

2003ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பானது பிரான்ஸ், கனடா, இலண்டன், நோர்வே, ஜேர்மன் எனப்பல நாடுகளில் வாழும் இளைஞர்களை உள்ளடக்கிய சர்வதேச அமைப்பாக இருப்பதோடு பல அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்களின் ஆசீரோடும், பல பெரியோர்களின் ஒத்துழைப்போடும் பரந்துபட்டு சேவைமனப்பான்மையுடன் செயற்பட்டுவருகின்றது.

இதன் முக்கிய நோக்கம் எமது ஊர்மக்களை கல்வி, தொழில்சார்ரீதியாக மென்மேலும் வளர்ச்சியடையச்செய்து சிறந்த எதிர்காலத்தை அவர்களுக்கு உருவாக்கிக்கொடுக்க முனைவதாகும். இதற்காக பல கணணிகளை (computers), பல தையல் இயந்திரங்களை கொள்வனவு செய்து பல தரம்வாய்ந்த ஆசிரியர்களைக்கொண்டு பயிற்சிவகுப்புக்கள் நடாத்தப்பட்டுவருகின்றன. அத்துடன் வேலைவாய்ப்புக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கப்பட்டுவருகின்றன. இவர்கள் உங்களுக்குத் தேவையானவற்றை நீங்கள் முன்கட்டளையிடும் (order) பட்சத்தில் மிகவிரைவில் எந்த நாட்டிற்கும் அனுப்பிவைக்கத்தயாராக இருக்கின்றார்கள்.

* தோழிப்பிள்ளைகளுக்கான சட்டைகள்
* பூக்கள்
* மேசைச்சீலைகள்
* தலையணை உறைகள்
* பின்னல்கள்
* சுவர் தூக்கணங்கள்

போன்றவை தற்போது தயார் நிலையில் உள்ளன. இதன்மூலம் கிடைக்கும் நன்மைகள் அனைத்தும் எமது ஊர்மக்களையே சேரும் என்பதை நாம் எல்லோரும் மனதிற்கொண்டு உதவிக்கரம் கொடுப்போம். மேலும் க.பொ.த.சாதாரண (G.C.E.O/L) வகுப்பினருக்கும் முக்கிய பாடங்களைக் கற்பதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

இத்தனை செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்தி சிறப்பாக செய்துவரும் இவ்விளைஞர்கள் மேலை நாடுகளில் வாழ்பவர்கள். அத்துடன் இவர்களுள் பலர் அந்நாடுகளில் வதிவிடவுரிமை அற்ற நிலையில் தமது எதிர்கால வாழ்வில் பயம் கொண்டு வாழ்ந்து வருபவர்கள். இதற்கும் மேலாக நாகரிக உலகத்தில் தமது சிந்தனைகளை சிதறவிடாது தமது ஊர்ப்பற்றுடன் வாழும் இளைஞர்களை நெய்தல் மலர்க்குழு வாழ்த்துவதில் மகிழ்கின்றது.

தொடர்பாளர்கள் :-

இலண்டன் : எ. நிசான்

பிரான்ஸ் : அ. ஜோண் ஜெக்சன் , அ.லக்ஸ்மன்

கனடா : அ. ஸ்ரீபன், மா. காந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணித்த பாதைகளை திரும்பிப் பார்க்கின்றேன்

என் அன்பார்ந்த தமிழ் நண்பர்களே,

பிரான்ஸ் நாட்டின் துலூஸ் நகரிலிருந்து "நெய்தல்" வழியாக உங்களைச் சந்திப்பதிலே மகிழ்ச்சி. அண்மையில் ஈழத்தில் நான் மேற்கொண்ட பயணத்தின்போது எழும்பிய என் எண்ண அலைகளை, என்னைத் தொட்ட, உலுக்கிய, கேள்விக்குட்படுத்திய என் பயண அனுபவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதிலே மகிழ்ச்சியடைகின்றேன். இந்த அனுபவப் பகிர்வு, தமிழ் ஈழத்தில் நான் மேற்கொண்ட பயணத்தில் என்னைப் பாதித்த காட்சிகளில், நிகழ்வுகளில், சந்திப்புகளில், உரையாடல்களில் மிகக் குறிப்பிடத்தகுந்தவை மட்டுமே.

உங்களைப் போலவே நானும் பிறப்பால் தமிழன். ஆனால் நான் பிறந்தது ஈழத் தமிழ்நாடு அல்ல, இந்தியத் தமிழ்நாடு. எனவே நான் இந்தப் பயணத்திற்கு முன் இலங்கையைக் கண்டதுமில்லை, காணக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும் என நினைத்ததுமில்லை. ஆனால் அதை மாற்றி, என் பயணத்திற்கும், நான் இன்று உங்களோடு பகிர்ந்து கொள்ளும் இந்த உண்மைகளுக்கும் காரணமாக இருந்தவர்கள் என் நண்பர்கள் சிலர். பெயர் குறிப்பிடாத அவர்கள் அனைவருக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும், இலங்கையில் வாழும் அவர்களின் உறவுகளுக்கும் என் தாழ்மையான நன்றிகள். தொடரட்டும் இந்த நல்ல உறவுகள்.

இந்த வருடம் யூலைத் திங்கள் 3ம் திகதி முதல் 13ம் திகதி வரை 10 நாட்கள் இலங்கை நாட்டிலே நான் வாழ்ந்தேன், பார்த்தேன், பயணித்தேன், பல்வேறுபட்ட யதார்த்தங்களை, உண்மைகளை உணர்ந்தேன். நான் இங்கே குறிப்பிட விரும்புவது என் பயணங்களைப் பற்றி அல்ல, ஆனால் நான் அடைந்த பாதிப்புகளைப்பற்றி. இந்தப் பயணத்திற்கு முன்னால், இந்த நாட்டைப் பற்றி, அங்கு நடைபெறும் போராட்டங்கள், பிரச்சினைகள், குழப்பங்கள், அமைதி முயற்சிகள் பற்றி, வானொலி, தொலைக்காட்சி, செய்தித் தாள்கள் இவற்றின் மூலமாக நான் அதிகமாக அறிந்து வைத்திருந்தேன். இரண்டாவது நிலையிலே, இன்று பல நாடுகளில் பரந்து வாழும் என் ஈழத் தமிழ் நண்பர்கள் மூலமாக, அவர்களின் உண்மையான அனுபவப் பகிர்வுகள், கலந்துரையாடல்கள் மூலமாக, அந்த நாட்டின் அரசியல், சமூக பொருளாதார நிலை குறித்தும், ஈழத் தமிழ் தாயகத்திற்கான மிகக் கடினமான போராட்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்தும் "அறிவு நிலையிலே" தெரிந்து வைத்திருந்தேன். ஆனால் இந்தப் பயணந்தான் ஒரு நேரடி அனுபவத்தை எனக்குத் தந்தது என்றால் அது மிகையாகாது. என் அனுபவம் 10 நாட்களில் முழுமை பெற இயலாது என்ற உண்மையை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நான் அந்த மண்ணில் பயணித்த 10 நாட்களும் என்னை உசுப்பியது, உலுக்கியது என்றால் அது உண்மை.

கொழும்பு நகரிலிருந்து யாழ் நகர் வரை நான் பயணித்தேன். கொழும்பு நகரத்திற்குள்ளே, போராட்டத்திற்கான தடயங்களோ, யுத்த அடையாளங்களோ அதிகமாக காணக்கூடியதாக இல்லை. ஆனால் எங்கு பார்த்தாலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையை, அங்கே பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ மற்றும் காவல் துறையின் மூலமாகத் தெரிந்து கொண்டேன். கண்டி நகருக்கும் பயணம் செய்தேன். கண்ணுக்குக் குளிர்ச்சியான, மனதுக்கு இதமான, பசுமையான ஓர் சூழலைக் கண்டேன், அதை ரசித்தேன். ஆனால் இந்த நகரங்கள் என்னையோ என் மனதையோ தொடவில்லை. ஆனால் கொழும்பு நகர் கடந்து யாழ் மாநகர் சென்று சேரும் வரை நான் பார்த்த, சந்தித்த மன்னார், மடு, வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் போன்ற ஊர்கள், அங்கு நிலவும் சூழல்கள், போரினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அரண்கள், பரிசோதனைகள், பலத்தைக் காட்டி நிற்கும் இராணுவ வீரர்கள் என் கண்களை விட்டு இன்னும் மறையவில்லை. தமிழ் ஈழப் பகுதிகளில் நான் கண்ட அவலங்கள், அலங்கோலங்கள், பரிதாபநிலைகள் என் மனதைவிட்டு இன்னும் அகலவில்லை. இவைதான் அந்த நாட்டின் எதார்த்த நிலையை எனக்கு வெளிச்சமிட்டுக் காட்டின என்று சொல்வேன்.

அமைதி முயற்சிகளின் பயனாக, யுத்த நிறுத்தம் என்ற நிலையால் இன்று ஓரளவுக்கு குழப்பங்களும் பிரச்சினைகளும் அங்கு குறைந்து தோன்றினும், முழுமையான அமைதி இல்லை, அதற்கான சூழ்நிலையும் அங்கு நிலவவில்லை என்பது என் தனிப்பட்ட கருத்து. பீதியும் பயமும், எதிர் காலத்தைக் குறித்து ஓர் கேள்வியும் மக்களின் முகங்களிலிருந்து மறையவில்லை என்பது உறுதியான உண்மை. போராட்டங்கள், உயிர்த்தியாகங்கள், ஆயிரக் கணக்கான மக்கள் போர்களால் சந்தித்து வரும் அவலங்கள் மற்றும் இழப்புகள், இன்னும் உண்மையாகவே தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன என்பது எதார்த்தம். "ஈழத் தமிழகம்" ஏங்கிக் காத்திருக்கும் விடுதலை வாழ்வு, உரிமை வாழ்வு என்று விடியும் என்பது பயத்தோடு கூடிய ஒரு கேள்வியாக மக்களின் மனங்களில் ஓடிக்கொண்டிருப்பதை உணர முடிந்தது.

போராட்டங்கள் நின்று போய்விடவில்லை, இன்றும் தொடர்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இந்தப் போராட்டங்களும் இதன் பாதிப்புகளும், தமிழ் ஈழத்தில் வாழும் எம் மக்களுக்கும், புலம் பெயர்ந்து பல இடங்களில் இன்று வாழும் தமிழ் மக்களுக்கும், குறிப்பாக இளையோர் சமூகத்திற்கும் விடுக்கும் கேள்வி என்ன என்பது தான் இன்று சிந்திக்க வேண்டிய ஒன்று.

**"என் பயணத்தில் என்னை அதிகமாகப் பாதித்தது ஈழத்தில் இன்று வாழும் இளைய சமுதாயம் தான்",**

என்று சொல்வேன்.

என் பயண அனுபவத்திலே, தமிழ் மக்கள் வாழும் பகுதிகளிலே நான் சந்தித்த இளையோரிலே, வேகமும் வீரமும், அறிவும் அதிகாரத் தொனியும் நிறைந்திருந்ததைக் கண்டு நான் நம்பிக்கை பெற்றேன். இந்த எழுச்சி மிக்க இளையோரால் "தமிழ் தாயகம்" என்ற கனவு நனவாகும் என்ற நம்பிக்கை என் இதயத்தில் உதித்தது. தமிழ் இளையோரின் உறுதியான உள்ளத்தையும், துணிவுமிகுந்த மனவுறுதியையும் கண்டு பெருமையடைந்தேன். ஆனால் இன்றும் கூட, கடினமான கசப்பான போராட்டங்களுக்குப் பின்பும், இலட்சியங்களை மறந்து, போதைப் பொருட்கள், இழிவான சினிமா, அரசியல், கீழ்த்தரமான கலாசார மனநிலைகள், போட்டி பொறாமைகள், குறிப்பாக தமிழனே தமிழனின் வாழ்வை சீரழிப்பதைப் போன்ற கேவலமான வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலைகளுக்கு எம் தமிழ் இளையோர் சிலர் அடிமையாகும் நிலையை நான் நேரில் கண்ட போது, மற்றவர்கள் என்னிடம் சொல்லக் கேட்ட போது, அது எம் தாயக மண்ணில் ஒவ்வொரு நாளும் ஒரு தொடர் நிகழ்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறிகின்றபோது,

**எம் மண்ணில் நடந்த, நடக்கின்ற உரிமைக்கான போராட்டங்கள் அனைத்தும், வேரோட்டமில்லாத போராட்டங்களாக பயனற்றுப்போய் விடுமோ என்ற அச்சம் என் மனதில் எழுகிறது.**

அந்த ஆதங்கத்தை இந்தக் கட்டுரையின் வழியாக உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இன்று ஈழத்திலும், உலகில் மற்ற இடங்களிலும் வாழ்கின்ற என் தமிழ் நண்பர்களே, இளையோர் சமூகமே, எம் தாயகத்தில் நடந்தேறியுள்ள அந்த வீர முழக்கங்கள், வேள்விப் பலிகள், வீணாகிப் போய்விடக் கூடாதென்பதிலே உனக்கும் எனக்கும் இன்று கவனம் தேவை. இது உரிமைக்கான, மற்றும் விடுதலைக்கான போராட்டம். ஆனால் நம்மை எதிர்க்கிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொருவனிடமிருந்து, அடிமைப்படுத்துகிற மற்றொரு சக்தியிடமிருந்து விடுதலை பெறுவதற்கு முன், இளைய சமுதாயமே நீ உன்னையே விடுவித்துக் கொள்ள வேண்டியது, இன்றைய காலத்தின் கட்டாயம்.

**சிந்தப்பட்ட இரத்தங்களும், சிதறிய உடல்களும்,**
**சின்னாபின்னமாகிச் சிதைந்து போன வாழ்விடங்களும்,**
**நீ போதைகளுக்கு அடிமையாகவா?**
**தமிழனாகிய நீ, தமிழனையே அழித்து நாசமாக்கவா?**

**தமிழ் இளைய சமுதாயமே நீ விழித்தெழு!**
**உன்னையே நீ கேள்வி கேட்டுப் பார்.**
**எங்கே உன் இலட்சியம்?**
**உன்னைச் சுற்றியுள்ள அடிமையின் சங்கிலிகளை**
**அறுத்தெறி.**
**ஆபாசத்திற்கோ அரசியல் தலைவர்களுக்கோ**
**அடிமையாகி விடாதே.**

நாளைய தமிழ்த் தாயகத்தின் எழுச்சியும், வளர்ச்சியும் இன்றைய தமிழ் இளையோரில்தான் உள்ளது என்பதில் எள்ளளவும் மாற்றமில்லை. ஆனால் இன்று தாயகத்திலும், தமிழ் மக்கள் வாழும் பல இடங்களிலும், நாடுகளிலும் தமிழ் மக்கள் தங்களுக்குள்ளேயே கட்சிகள், பிரிவினைகள், குழப்பங்கள், ஏன் கொள்ளை, கொலை என ஈடுபடுவதை பார்க்கிற போது, அதைக் கேள்வியுறும் போது, இன்று வரை நடந்துள்ள உரிமைக்கான எம் போராட்டங்கள் அனைத்தும் வேரோட்டமில்லாமல், அது உலர்ந்து, உதிர்ந்து போய்விடுமோ என்ற அச்சம் எம் மனதை நெருடுகிறது. தமிழ் இளைய சமுதாயமே, நீ உனக்குள்ளே ஒன்றுபடு. நாம் இணைந்து எழுந்தால் தான் எம்பலம் உயரும், எதிரியின் படை வீழும். எனவே நான் ஆணித்தரமாக, அழுத்தமாக இங்கே குறிப்பிடுவதெல்லாம், தமிழ் இளையோர் இன்று நிச்சயமாக விழிப்புணர்வு பெற வேண்டும். எம் தமிழ் மண் விடுதலை பெறுமுன் எம் தமிழ் இளையோரின் மனநிலைகள் விடுதலை பெறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை அடிமைப்படுத்துகின்ற போதைப் பொருட்களை விலக்க, அதை தூக்கியெறிய, நீ எழுந்து வா! போலியான அரசியல், சினிமா, விளையாட்டுத் துறையிலுள்ள மனிதர்களை, ஏமாற்றுப் பேர்வழிகளை பின்பற்றுவதை விட்டு விட்டு, உண்மையான தலைவர்களை அடையாளம் கண்டு கொள்.

**போராட்டங்கள் தொடர்கின்றன.**
**ஆம் விடுதலைக்கான போராட்டங்கள் தொடர்கின்றன.**
**உன் பங்களிப்பு என்ன?**
**எம் இளையோரே நீங்கள் விடுதலை பெறுங்கள்!**
**உங்களால் ஈழத் தமிழ் தாயகத்திற்கு விடுதலை நிச்சயம்!**

நன்றியும் வாழ்த்தும்
அருட்திரு. மைக்கில் ராஜ்
12-12-2004
துலூஸ், பிரான்ஸ்.



சீமோன் விமலராஜன் (தமயந்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்மனமும், இளைய படைப்புகளும்.

- தமயந்தி

தேசங்களின் எல்லைகள் எத்தனையைத் தாண்டி நாம் மூட்டை முடிச்சுகளோடு வந்து புலம்பெயர்வாழ்வுக்குள் எம்மைத் தக்க வைத்தாலும் எமது வேரும் விழுதுகளும் என்னவோ இன்னமும் எமது தாயக மண்ணில்தான். இந்த உந்துதலோடும், அக்கறையோடும் தாய்த் தேசத்தை நோக்கிய எமது ஏக்கமும் , ஆதங்கமும் அத்தோடு அக்கறையும் இருக்கின்றன. இருந்தாலும்கூட எமது தாய்மண் மீதான வாசனையோடு ஒரு படைப்பை உருவாக்க முனைப்பெடுக்கும்போது கற்பனை அதிகம் கலந்ததாய்த்தான் உருவாகி விடுகின்றது. காரணம் மண்ணுடனான அந்த நேரடி அனுபவங்களை விட்டு நாம் வெகு தூரம் வந்துதான் விட்டோம். பத்து பதினைந்து வருடங்களுக்கு முன்னால் எமது தேசத்தில் எமக்குத் தெரிந்ததையும், நாம் அனுபவித்தவற்றையும் நினைவில் நிறுத்தித்தான் ஒரு படைப்பை உருவாக்க முடிகின்றது. நேரடி அனுபவிப்புகள் இல்லாத இப்படியான படைப்புருவாக்கம் ஒரு பார்வையாளன் மனநிலைக்கொப்பதான வெளிப்படுத்தலாக அமைந்து போவதென்பது தவிர்க்க முடியாமல் நேர்ந்து விடுகின்றது. தாயக மண்ணை விட்டுப் புலம் பெயர்ந்த பல படைப்பாளிகளது கடந்த கால, நிகழ்கால படைப்புக்களை நன்கு அவதானித்தால் இந்நிலை துல்லியமாய்ப் புலப்படும்.

தாயகத்தில் வாழும் புதிய படைப்பாளிகளை வெளிக்கொணர வேண்டும் என்ற அவா. இந்த அவாவிற்கு ஒரு களம் நெய்தலில். நெய்தல் முதலாவது இதழின் அட்டைப் படத்துக்கான, மனதில் எழும் உணர்வுப் பதிவுகளை தரும்படி இளைய படைப்பாளிகளை நோக்கிக் கோரிக்கை விட்டிருந்தோம். இதனடிப்படையில் எமக்குக் கிடைக்கப் பெற்ற படைப்புகளை நோக்குமிடத்து உண்மையிலேயே பிரமிப்பாகத்தான் இருந்தது, இருக்கிறது. மண்ணுடனான, மண்வாசத்துடனான நேரடி அனுபவங்களை விட்டு நாம் மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட தூரத்தில் தூக்கி வீசப்பட்டு விட்டோமென்பதையும் இந்தப் படைப்புக்கள் எமக்கு சுட்டுகின்றன. எண்ணக்கூட்டுக்குள் ஒரு நெருடலை ஏற்படுத்துகின்றன. படைப்பாளி சுதந்திரமானவன். ஆயினும் எமது கோரிக்கையானது "அட்டைப் படத்துக்கான படைப்பு" எனும் ஒரு எல்லையைப் போட்டது என்பதுதான் உண்மை. அப்படியிருந்தும் எமக்குக் கிடைத்த ஆக்கங்கள் சிந்தனைச் சுதந்திரமானவையாக அமைந்ததை அவதானிக்க முடிகிறது.

படைப்பனுபவத்தில் ஆரம்பசுவடுகளைப்பதித்திருந்தபோதும், தங்கள் உள்ளார்ந்த உணர்வுகளையும்., நெஞ்சைச் சுடும் வேதனைகளையும், அனுபவ வாயிலாகப் படைத்திருந்தனர். இந்தப் படைப்புகளினூடாக படைப்பிலக்கிய சம்பிரதாயக் கட்டுக் கோப்புகள், வரையறைகள் என்பதெல்லாம் புதிய பரிமாணத்தை வேண்டி நிற்கின்றன. இவை "அனுபவிக்கும் மக்களால் அனுபவிக்கும் மக்களுக்காக படைக்கப்பட்ட படைப்புகள் காண்" என்று, எந்தவித தகமை யாசகத்தையும் யாரிடமும் கையேந்திக் கேட்காமல் ஆணவத்தோடு நிமிர்ந்து நிற்கின்றன. இந்த இளம் படைப்பாளிகளிடமிருந்து எதிர்காலத்தில் நிறையவே தரமான படைப்புக்களை எமது சமூகம் பெற்றுக் கொள்ளலாம். இந்த நம்பிக்கையில் எள்ளளவும் சந்தேகமேயில்லை. இவர்களின் இலக்கியத் தரம் மேலும் வலுப்பெற சொந்த அனுபவங்கள் மட்டும் போதாது. தேடலும், வாசிப்பும், அறிதலும் அவசியம் என்பதை இந்த இடத்தில் கட்டாயம் சொல்லித்தான் ஆகவேண்டும். தொடர்ந்து இவர்கள் எழுத வேண்டும். நிறைய எழுத வேண்டும் என நேசத்தோடு கேட்டுக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நெய்தல் முதலாவது இதழின் அட்டைப் படத்துக்கான தமது எண்ணப் பதிவுகளை கவிதை, கட்டுரை , சிறுகதையென எழுதியனுப்பியவற்றுள் மிகவும் கடினப்பட்டு முதல் மூன்று இடங்களையும் தெரிவுசெய்துள்ளோம்.

1ம் இடம்:
அனுரா ஜசிதரன்
6/5, 3ம் குறுக்குத்தெரு
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

2ம் இடம்:
எழில்ராணி சிந்தாத்துரை
33, 3ம்குறுக்குத்தெரு
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

3ம் இடம்:
யே.யேசுதா
27, 1ம்குறுக்குத்தெரு
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

எமக்கு படைப்புக்களை அனுப்பிவைத்த அனைவர்க்கும் மீண்டும் மீண்டும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தெரிவுக்குழு :
தமயந்தி
பானுபாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முட்கம்பி வேலிக்குள்**

**முகமிழந்து போன நிலை**

நெட்டுயிர்த்து நின்று
நிழல் தந்து எமைக்காத்த
நெய்தல் நிலமே நீயின்று
நெருக்கடிகள் மத்தியிலே
முட்கம்பி வேலிகளால்
முகமிழந்து நிற்பது ஏன் ?
எத்தனையோ நூறாண்டு



எம்மக்கள் ஆண்டு வந்த
ஏற்றமிகு கடற்பரப்பு
முட்கம்பி வேலிக்குள்ளா ?
பண்பாடிப் பா இசைத்து
பாய் தொடுத்துப் படகுவிட்டு
முத்துக்குளித்து முறுவலித்த நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கு முறைக்குள்ளாகி
அல்லல்படும் காட்சியிது
யாழ்பாடிப் பரிசுபெற்ற
யாழ் நகரின் கரைகளின்று
பாழ் நிலமாய்ப் புதர் மண்டி
பகைப்புலமாய் காண்கின்றோம்
காலைமுதல் மாலைவரை
கங்குலிலும் சுதந்திரமாய்
கடல் வழங்கள் சேர்த்தெடுத்து
கரை குவித்த காலம் போய்
கட்டுண்டு தடம் மாறி
தாய் மண்ணில் அனாதைகளாய்
தவிக்கின்ற நிலையின்று
சொந்த மண்ணை நாமிழந்தோம்
சுதந்திரமும் எமக்கில்லை
வளம் நிறைந்த நெய்தல்
சுட்டெரித்த சுடுகாடாக
தீய்ந்தாலும் நாமோர் நாள்
மீண்டும் உயிர் பெற்று
உயர்வடைவோம் இது உறுதி
நாம் கொண்ட இலட்சியத்தில்
கை கொடுத்து உதவுவதற்கு
கடல் கடந்த எம்மக்கள்
தாம் வாழுகின்ற தேசத்தின்
தரவுகளை முன் காட்டி
தாம் எமக்கு துணையென்று
துல்லியமாய் புரியவைக்கும்
இனிதான காட்சியிது
எரிகின்ற எம்நிலத்தின் தீயை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைத்துக் குளிர வைத்து
உதவுகின்ற எழிலான காட்சியிது
பனிபடர்ந்த மலைகளோடு
பசுமையின் வெளிப்பாடும்
பக்கமெனத் துணையிருந்து
பகைமையை வென்று
புதுப்பொலிவு காண எமக்கு
புலர்ந்திடும் விடிகாலை

**அனுரா யசிதரன்**

**நாவாந்துறை**

23. 09. 2003





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலைதாங்கி - எழில்ராணி சிந்தாத்துரை -

கதிரவன் தன் வேலையை ஆரம்பிப்பதற்காக கிழக்கிலிருந்து மெதுவாக வந்துகொண்டிருந்தான். பறவைகள் காலை இசைக்க பூக்கள் தன் கதிர்களை விரிக்க எங்கும் ஒளிமயம் பரவத்தொடங்கியது. குணா நித்திரை விட்டெழுந்து காலைக்கடனை முடித்துவிட்டு அம்மா பரீட்சைக்கட்டணம் 50ரூபா கட்டவேணும் தருவீங்களா? என்றான். பொறுமகனே அப்பா தொழிலுக்குப் போயிற்றார் வந்தவுடன் கேழு என்றாள் தாயார். தந்தை வந்ததும் மகன் தயங்கித் தயங்கி அப்பா காசு கட்டவேணும் என்றான். ஏன் தயங்கித் தயங்கிக் கேட்கிறாய். படிப்புக்கென்றால் தரத்தானே வேணும். நாம் இன்றைக்கு ஒரு குறையுமில்லாமல் சாப்பிடுகிறோமென்றால் இந்த கடல் வளத்தினால்த்தான். பணம் கொடுத்து வாங்கமுடியாத செல்வம். ஒருநாள் வாழ்க்கைக்குத் தேவையானதை அன்றே தரும் கொடைவள்ளல். மகனே நான் உழைக்கிறது உனக்காகத்தான் நீ படித்து நல்ல நிலைக்கு வர வேணும். அதுதான் எனது விருப்பம் என்றார் தந்தை. சரியப்பா நான் நன்றாகப் படிக்கிறேன் என்ற மகன் தொடர்ந்தான். அப்பா நாம் தொழில் செய்யத் தடையாக முள்ளு வேலி அடைத்திருக்கிறாங்க. அதேன்மகனே கேட்கிறாய் ஆரம்ப காலத்தில் எந்தவித தடையுமில்லாமல் தொழில் செய்தோம் இப்போ இராணுவத்தின் கட்டுப்பாட்டினால் குறிப்பிட்டதூரம்தான் தொழில் செய்ய வேண்டும். கரையோரங்களில் முட்கம்பிகளை அடைத்து சிறு பாதையியூடாக செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை. இதிலிருந்து எப்போ விடுதலை கிடைக்கப் போகிறதோ தெரியவில்லை. அப்பா இதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையா? பல அறிவித்தல்கள் கொடுத்தும் பயனில்லை அவர்கள் பக்கம் ஆயுத பலம், அரசாங்க பலம், பணபலம் இருப்பதால் எதையும் துணிந்து செய்வார்கள்.

ஏன்னங்க சாப்பிட வாங்க மரகதம் ஒன்று கேட்பேன் கோபிக்க மாட்டாயா? என்ன செல்லுங்க வலை கயிறு எல்லாம் அறுந்து பழசாகப் போயிற்று புதுவலை புதைஞ்சால் நல்ல உழைப்புக் கிடைக்கும். அதுதான் உன்ர செயினைத் தந்தால் அடைவுவைத்துவிட்டு வலை எடுக்கலாம். அதுக்கென்ன தொழில்தானே முக்கியம் இந்தாங்க செயின். அந்தோனி தனது மனைவியின் செயினை அடைவுவைக்க மனமில்லாதவனாக தனது நண்பனிடம் கடன் வாங்கி வலை வாங்கினான். செயினை தன் அன்புத் துனைவியின் கழுத்தில் போட்டுவிட்டான். புதுவலை பாய அந்த வீடே பரபரப்பானது. நாளைக்குக் கூடுதலான மீன்கள் இறால்கள் கிடைக்கும் என்ற எண்ணத்தில் மரகதம் மகிழ்ச்சியிலிருந்தாள். குணா அப்பாவிடம் அப்பா எனக்கு இறால் பொரியலென்றால் விருப்பம் நாளைக்கு எனக்கு இறால் கொண்டு வாங்க. சரி கொண்டு வாறேன். நாளைய இறால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொரியலை நினைத்து குணாவின் வாயில் உமிழ்நீர் சுரந்தது மறுநாள் குணா அம்மா அப்பாவை இன்னும் காணவில்லை பசிக்குது. பொறு குணா கொஞ்ச நேரத்தால வந்திருவார். பள்ளிக்கூடத்துக்கும் நேரம் போகிது நான் போயிற்று இடைவேளைக்கு வந்து சாப்பிடுகிறேன். இறால் பொரித்து வைக்க வேணும். குணா சாப்பிட்டிட்டுப் போ. வேண்டாம் அம்மா வந்து சாப்பிடுகிறேன்.

மரகதம் தன் கணவனை எதிர்பார்த்து நேரம் செல்லச் செல்ல மனம் சஞ்சலம் அடைந்தவராக ஒருநாளும் இப்படி பிந்தியதில்லையே ஏன் இன்னும் வரவில்லையென யோசித்து கடற்கரைக்கு அவளை அறியாமலே அவளது கால்கள் சென்றன. தன்கணவன் வருகிறாரா என்று நாற்றிசையும் ஏக்கத்துடன் அவள் கண்கள் அவனைத் தேடின. சிறிது நேரத்தின் பின் வள்ளம் வருவதைக் கண்டு தன் கணவன்தான் என்று எண்ணியவளுக்கு பேரதிர்ச்சி உள்ளதென்று எங்கே தெரியப் போகிறது. படகில் வந்தவர் அக்கா உங்கள் கணவரை இராணுவத்தினர் சுட்டுப் போட்டார்கள். இந்த வார்த்தையைக் கேட்ட மரகதத்தால் தாங்க முடியவில்லை உடனே ஓலமிட்டுக் கதறினாள். இல்லை என் கணவர் உயிரோடு வருவார் என்ற நம்பிக்கையை கொஞ்சம் கொஞ்சமாக இழந்தவளாக அந்தப்பிரிவுத்துயரை தாங்க முடியாமல் மயக்கமுற்று விழுந்தாள் மகனே போய்வருகிறேனென்று சொல்லிவிட்டுப் போன தந்தை இனி வரமுடியாமல் கடலிலே போனதை நினைக்க அந்தப் பிஞ்சுஉள்ளத்திலே அம்பு பாய்ந்ததுபோல் பெருந் துயரம் கொண்டான். அவன் தன் தாயின் நிலையைப் பார்க்கச் சகிக்காதவனாக தன் சோகத்தை மறைத்து அம்மா கவலைப் படாதீங்க நானிருக்கிறேன் நான் உங்களைப் பார்ப்பேன். என்று கூறிய மகனின் ஆறுதல் வார்த்தை மரகதத்துக்கு அரைத்த சந்தனத்தை உடம்பில் பூசியது போலிருந்தது. அம்மா நான் உழைத்து உங்களைக் காப்பாற்றுகிறேன்குணா உன்னுடைய அப்பா ஆசைப்பட்டபடி நீ நன்றாகப் படித்து முன்னுக்கு வர வேணும் நான் எவ்வளவு கஸ்ரப் பட்டாலும் உன்னைப்படிக்க வைக்கிறேன் நீங்கள் கஸ்ரப்படுவதை என்னால் பார்த்துக்கொண்டிருக்க முடியாதம்மா உங்கள் விருப்பப்படி படிக்கிறேன் அத்தோடு தொழில் செய்து உங்களைக் காப்பாற்றுகிறேன். சரிமகனே உன் எண்ணப்படியேசெய். கவலைப்படாதீங்க அம்மா எனக்கு நம்பிக்கை இருக்கு நான் படிப்பேன் என்னால் படிக்க முடியும்.

குணா தொழிலுக்குப் போய் தன் கஸ்ரத்தை உணர்ந்து படித்தான். அவனது விடாமுயற்சியின் பயனாக சாதாரண தரப் பரீட்சையில் திறமைச்சித்தியடைந்ததை அறிந்த மரகதம் மகனை அணைத்து ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். மேலும் படிக்க வைத்ததன் பயனாக உயர்தரம் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்ல அனுமதியும் கிடைத்தது. குணா தன் தந்தையின் விருப்பத்தை நிறைவேறிவிட்ட மகிழ்சியிலிருந்தாலும் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயை தனியே விட்டுப் போக மனமில்லாதவனாக சோகத்துடனிருந்த தன் மகனின் நிலையை அறிந்த மரகதம் என்னைப்பற்றி நீ கவலைப்படாதே உங்கள் அப்பா இந்தக் கடலில் உழைத்துத்தான் எம்மைக் காப்பாற்றினார். நீ படித்ததும் இது தந்த செல்வத்தினால் தான் இனிமேலாவது நான் உன்னைப் படிக்க வைக்கிறேன். நான் தனியாள் அல்ல என்னைச்சுற்றி உறவினர்கள் அயலவர்கள் இருக்கிறார்கள்நீ கவலைப்படாமல் சந்தோசமாகப் படித்தாலே அதுவே எனக்குப் போதும்.

தாயின் கனிவான வார்த்தையால் மன அமைதிகொண்டவனாக பல்கலைக்கழகம் சென்று படிக்கிறான். நாட்கள், வாரங்களாக வாரங்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகி பல வருடங்கள் உருண்டோடியது. குணா படித்து வைத்தியனானான். தன்மகன் படித்து முடித்து பட்டம் பெற்றதை நினைத்து மரகதம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்டதாய்: மரகதம் இக்குறளில் கூறியது போன்று குணாவின் விடாமுயற்சியையும் கல்விஊக்கத்தையும் கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். இந்த இன்பமான நிகழ்வைக் காணத்தன் கணவர் இல்லையே என்ற கவலையும் அவளுக்கு இருக்கத்தான் செய்தது.

குணா தான் படித்தவன் பட்டம் பெற்றவன் என்ற பெருமையோ ஆணவமோ இல்லாமல் தான் முன்பு இருந்த நிலையை மறக்காதவனாக தன் ஊரில் கால்பதித்தான். ஊர்மக்கள் அனைவரும் அவனை வரவேற்றனர். அனைவர் வாயிலிருந்தும் புகழ் வாழ்த்துக்கள் முழங்கின. அவ்வேளையில் மரகதத்துக்கு பூரித்த பெருமையும் வந்திருக்கக்கூடும். குணாவின் படிப்புக்கும் தகுதிக்கும் ஏற்றவாறு வேலைவாய்ப்புகள் வெளிநாட்டில் வந்தபோதும் தான்பிறந்த நெய்தல் நில ஊரில் உள்ள மக்களுக்கு சேவை செய்வதே எனது விருப்பம். தன் கையான அலையின் மேல் என்னைத்தாங்கி பசுமையான இடத்தில் கரைசேர்த்த இந்த கடலன்னைக்கு நான் செய்யும் நன்றியாகும்என்று தன் ஊரில் உள்ளவர்களுக்கு மனநிறைவோடு சேவைபுரிந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோர்வே
12.12.2003

# நாவாய் சர்வதேச ஒன்றுகூடல் அறிக்கை

புலம் பெயர் நாவாந்துறை சென் மேரிஸ் சர்வதேச அபிவிருத்தி சங்க கிளைகளின் ஒன்றுகூடல் நோர்வே கிளையின் நீண்ட கால முயற்சியின் பயனாக 13,14 புரட்டாசி .2003 இல் பிரான்ஸ் நாட்டில் கனடா, பிரான்ஸ், நோர்வே நாவாந்துறை சமூக அபிவிருத்தி கிளை உறுப்பினர்கள் ஒன்றுகூடி கடவுள் வணக்கத்துடன் ஆரம்பமானது.

13.09.03 சனிக்கிழமை அன்று பிரான்ஸ் கிளையின் தலைவர் திரு ம. அன்ரன் தலைமையில் ஆரம்பமாகியது. இதில் கனடா கிளையின. சார்பாக திரு. ஆ. அன்ரனிப்பிள்ளையும் ,நோர்வே கிளையின் சார்பாக திரு. ச.பாக்கியராசா, திரு. எ. ஜெயராஜ், திரு. வே. ஜேசுநாயகமும் பிரான்ஸ் கிளையின் சார்பாக திரு. ம. அன்ரன், திரு. அ. பிறின்ஷன், திரு. செ. எட்வேட் மற்றும் அங்கத்தவர் பலரும் சமூகமளித்திருந்தனர். தலைவர் தமது உரையில் கனடா, நோர்வே கிளையின் உறுப்பினர்களை வரவேற்று நன்றிகூறி இக்கூட்டம் இவ்வளவு விரைவில் நடைபெற எல்லோருடைய விட்டுக்கொடுப்பும் ஒற்றுமையுமே காரணம் எனக்கூறி இங்கு எடுக்கும் தீர்மானங்கள் பயனுள்ளதாகவும் செயற்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இதன்பின்பு பிரான்ஸ் கிளையின் தோற்றமும் வரலாறும் திரு. அ. பிறின்ஷன் அவர்களாலும் அதைத் தொடர்ந்து கனடா கிளையின் செயற்பாடுகள் திரு. ஆ. அன்ரனிப்பிள்ளை அவர்களாலும் நோர்வே கிளையின் செயற்பாடுகள் திரு. எ. ஜெயராஜ் அவர்களாலும் வாசித்துக் காட்டப்பட்டது. அதன் பின்பு புலம் பெயர் நாவாந்துறை மக்களின் முக்கியத்துவம் பற்றி திரு. அ. அமிர்தநாதர், திரு. ச. அலோசியஸ் ( பாக்கியராசா ) திரு. ஆ. அன்ரனிப்பிள்ளை ( ஆசீர்தாசன் ) ஆகியோர் உரையாற்றினர். இதனைத் தொடர்ந்து திரு செ. எட்வேட் அவர்கள் திட்டங்களும் வரவு செலவும் என்ற ஓர் ஆய்வினை வளங்கினார் .

புத்தக வெளியீடு பற்றிய விதிகள் அறிவிக்கப்பட்டு அதுபற்றி ஆலோசிக்கப்பட்டது. நாவாந்துறை எதிர்காலத் திட்டங்கள் என்ற கோர்வை நோர்வேக் கிளையால் பிரான்ஸ், கனடாக் கிளைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதன்பின்பு கலந்துரையாடல்களுடனும் கேள்வி பதில்களுடனும் கூட்டம் இனிது முடிவுற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாய் செண்மேரிஸ் சர்வதேச அபிவிருத்திச்சங்க கிளைகளின் இரண்டாம் நாள் கூட்டம் 14.09.03 ஞாயிற்றுக்கிழமை அன்று பிரான்ஸ் கிளையின் தலைவர் திரு. ம. அன்ரன் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது . சமூகமளித்திருந்த கனடா, பிரான்ஸ், நோர்வே கிளைகளின் உறுப்பினர்கள் ஒளி ஏற்றி செபத்துடன் நாவாய் செண்மேரிஸ் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்கள் . தலைவர் அவர்களின் உரையின் பின்பு திரு. ச. பாக்கியராசாவினால் அன்றைய நிகழ்ச்சிநிரல் வாசித்து விளக்கமளிக்கப்பட்டது. இக்குழுவில் கனடா சார்பாக திரு. ஆ . ஆசீர்தாசனும், நோர்வே சார்பாக திரு. ச. பாக்கியராசாவும், திரு. வே. ஜேசுநாயகமும், திரு. எ. ஜெயராயும், பிரான்ஸ் சார்பாக திரு. ம. அன்ரனும், திரு. அ. பிறின்சன், திரு. செ. எட்வேட், திருமதி சோ. மைனா, திரு. சூ .தாசன், திரு. அ.அருளப்பு, திரு. ஆ. அமிர்தநாதர் ஆகியோர் பங்கு பற்றினர். பிரான்ஸ் கிளையின் அங்கத்தவர்கள் பார்வையாளர்களாக கலந்து கொண்டனர்.

செயற்குழுவுக்குரிய உபவிதிகள் பற்றி ஆராயப்பட்டு உபவிதி தயாரிக்கப்பட்டது. நாவாந்துறை செயற்குழுவுக்குரிய விதிகளும் செயற்திட்டங்கள் பற்றிய முடிவும் எடுக்கப்பட்டது. செயற்திட்டங்கள் முக்கியமாக கல்வி, சுகாதாரம், விளையாட்டு, தொழில்வசதிகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதென முடிவு எடுக்கப்பட்டது. இதன்பின்பு அங்கீகாரம் பெற்ற ஒன்பது ( 9 ) பேர் கொண்ட பொதுச்சபையும், மூன்று (3) பேர் கொண்ட செயற்குழுவும், ஒரு சர்வதேச தொடர்பாளரும் தெரிவு செய்யப்பட்டனர். பொதுச்சபைக்காக பிரான்ஸ் சார்பாக திரு. ம. அன்ரன், திரு. அ. பிறின்சன், திருமதி சோ. மைனா அவர்களும், நோர்வே சார்பாக திரு. ச. பாக்கியராசா, திரு. வே. ஜேசுநாயகம் திரு. எ. ஜெயராஜ் அவர்களும் கனடா சார்பாக திரு. ஆ. ஆசீர்தாசன் தெரிவு செய்யப்பட்டனர். கனடா சார்பாக இருவரின் பெயர்கள் பின்பு அறிவிப்பதாக திரு. ஆ. ஆசீர்தாசன் கூறினார். செயற்குழுவுக்கென திரு. அ. பிறின்சன், திரு. ஆ. ஆசீர்தாசன், திரு. ச. பாக்கியராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அடுத்த கூட்டம் கனடா நாட்டில் நடாத்துவதாக முடிவு எடுக்கப்பட்டது.

நன்றி உரைகளை கனடா சார்பாக திரு ஆ.ஆசீர்தாசனும் , பிரான்ஸ் சார்பாகதிரு அ.பிறின்ஷனும் நோர்வே சார்பாக திரு ச. பாக்கியராசாவும் வழங்கினார்கள் .

இத்துடன் கூட்டம் இனிது நிறைவுற்றது .

சர்வதேச செயற்குழு சார்பாக
சந்தியாப்பிள்ளை பாக்கியராசா
( சர்வதேச தொடர்பாளர் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விமர்சனம் "நெய்தல்"

**க. ரவீந்திரநாதன்**

ஈழத்தின் கடலோர மலரொன்று நோர்வேயில் பூத்திருக்கிறது. மலரின் பெயர் "நெய்தல்". யாழ்ப்பாணத்து நகர எல்லையில் அமைந்திருக்கும் ஒரு கரையோர நகரப் பகுதிதான் நாவாந்துறை.

இந்த நூலை வெளியிடும் நோக்கம உண்மையில் உயர்வானது. தங்கள் ஊரைப்பற்றி, அதன் வரலாறு பற்றி, அதன் முன்னோர்களைப் பற்றி, அதன் தேவைகளைப்பற்றி, தங்களைச் சார்ந்தவர்களின் திறமைகளைப்பற்றி பதிவுகளாக்க எடுக்கப்படும் முயற்சிதான இந்த நூல வடிவம் என்பது உன்னதமான முயற்சி. பிற்காலச் சந்ததிக்கு இந்த நூல் ஒரு ஆவணமாக அமையும் என்ற எதிர்பார்ப்பும் இதில் தெரிகிறது.

கடல்கடந்து நாங்கள் அகதிகளாய் வாழ்ந்தாலும் எங்களில் பலர் உயர்வான வாழ்க்கைதான் வாழ்கிறோம். அதில் ஒரு சிறிய தொகையையாவது நலிந்து கிடக்கும் எங்கள் ஊர்களுக்கு உதவிட வேண்டியது எங்கள் கடமை. அந்தந்த ஊர் சாந்தவர்கள் ஒருங்கிணைந்து இயங்கினால்தான் அது செயல் வடிவம் பெறும். அந்த வகையில் பல நாடுகளிலும் பரவியிருக்கும் நாவாந்துறை மக்கள், தங்கள் ஊருக்குப் பல சேவைகளையும் உதவிகளையும் செய்து வருகிறார்கள் என்பது இந்த நூலின் மூலம் அறியக் கூடியதாக இருக்கிறது. தங்கள் அமைப்புக்களின் சேவைபற்றிய விபரம் நூல் வடிவில் வெளியாகும்போது அதில் சம்பந்தப்பட்டவர்கள் மேலும் மேலும் ஊக்கம் பெறுகிறார்கள்.

வருடா வருடம் வெளிவா இருக்கும் இந்த மலருக்கு ஆசியுரைகள் பலராலும் வளங்கப்பட்டுள்ளன. நாவந்துறை ஊரானது கிறீஸ்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ளதால் நூலினுள்ளே ஊர்சார்ந்த அந்த மதத்தினுடைய தோற்றம், ஏற்றம், சிறப்பு, ஆசீர்வாதங்கள் என்பன வெளிக் கொணரப்பட்டுள்ளன.

மறுபக்கம் பார்க்க . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் தொழிலை பிரதானமாகக் கொண்டுள்ள ஊரென்பதால் ஆபத்துக்களை நிறையவே சந்திக்கும் வாய்ப்புகள் இந்த ஊர் மக்களுக்கு இருக்கிறது. அந்த வகையில் இறை நம்பிக்கையின் அவசியம் இந்த நூலின் மூலம் உணரப்படுகிறது.

கடலும் கடல் சார்ந்த இடமும் "நெய்தல்" என்று சொல்லப்படும். கடல் அன்னையின் அரவணைப்பில் நாவாந்துறை ஊர் இருப்பதால் இந்த நூலுக்கு "நெய்தல்" என்று தலைப்பிட்டது சாலப் பொருந்தும். போரினால் ஏற்பட்ட கொடுமைகளும் 'சூரியக் கதிர்' போன்ற இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளின் பாதிப்புக்களும் சிலரது வாக்கு மூலங்களாக இந்த நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஊர் சென்று திரும்பியவர்களின் நேர்காணல்களைப் புகுத்தியிருப்பதன் மூலம் ஊரின் நிலமைகளையும் அதன் தேவைகளையும் ஊர் சார்ந்தவர்களுக்கு தெரியப்படுத்தி உள்ளார்கள்.

இந்த நூலில் இரண்டு சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. "உதவும் கரங்கள்" என்ற சிறு கதையை எடுத்துக் கொண்டால் எழுத்தோட்டம் நன்றாக அமைந்திருக்கிறது. ஒரு குடும்பத்தில் ஏற்பட்ட துன்பச் சுமைகளை நன்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் 'சமுர்த்தி' திட்டத்துக்கு விளம்பரம்போல் முடிவு அமைந்திருப்பதால் கதையில் புதுமை இல்லாமல் போய்விட்டது.

மறுபக்கம் பார்க்க . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய கதை "பருந்துகள் பறந்து கொண்டிருக்கின்றன". ஒரு தரமான சிறுகதை. இனவாதம், அடக்குமுறை என்ற எமது இனத்தின் உரிமைக்காகப் போராடும் நாங்கள் ஒரு காலகட்டத்தில் ஏன் இப்போதும் கூட தொழிலாள வர்க்கத்தையும் தாழ்த்தப் பட்டதாகச் சொல்லப்படும் மக்களையும் அடிமைகள்போல் நடாத்தும் நிலை இருக்கத் தான் செய்கிறது. முதலாளித்துவத்தின் ஆதிக்கப்போக்கையும் அதன் குள்ளநரித் தனத்தையும் அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் கதாசிரியர். வெள்ளையரினால் வசியப்படுத்தப்பட்டு இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட தென்னிந்தியத் தமிழர்கள் சிலர் அன்னியனிடம் அடிமைப்பட விரும்பாமல் தமிழீழ மண்ணுக்குத் தொழில் தேடிவந்தபோது அவர்களை அடிமை கொள்ள நினைத்த நம் இனத்தவர்கள் நம்மிடையே இருக்கத்தான் செய்தார்கள். அதன் ஒரு வெளிப்பாடுதான் இந்தச் சிறுகதை என நான் நினைக்கிறேன். கதாசிரியரின் கருத்துருவம், ஒரு நிஜத்தின் வடிவமாக வெளிவந்திருக்கிறது. வாழ்த்துக்கள்,

மறுபக்கம் பார்க்க . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகள் சிலவும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன. ஊரின் பெருமையை வெளிப்படுத்தும் கவிதைகளை வாழ்த்தும் அதேநேரம் வித்தியாசமாக அமைந்த கவிதை ஒன்றை விமர்சிக்கின்றேன். டானியல் ஜீவா அவர்கள் எழுதிய "நானும் என் கவிதையும்" என்ற கவிதை பற்றி என்மனதில் பதிந்த ஒரு சிறு குறிப்பு:

**"பொய்யான முகங்களுடன் வாழ்வதும் - வாழ்வதற்காய் சிலுவை சுமப்பதும் - விரக்தியை கவிதைக்குள் புதைப்பதும் - கொண்ட கொள்கையை உரமாக்குவதும்- மடியும்வரை வாழ்க்கையை நேசிப்பதும்** - வாழ்க்கை வாழ்வதற்கே என்ற எண்ணத்தை தூண்டுகிறது. இந்த நூலில் இடம் பெற்றுள்ள ஓவியங்கள் சிலவற்றின் பின்னணியில் கவிதைத்துணுக்குகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் என் மனதுக்குப் பிடித்த ஒன்று.

**"திறந்த கதவினூடே ஒளி வரும் என்றிருந்தோம். ஆனாலும் எட்டியது இருட்டு மட்டும்தான். இருப்பினும் காத்துக் கிடக்கிறோம் ஒளியின் கீறல் ஒருநாள் வருமென்று!**

இவ்வாறாகப் பல சுவைகளோடு வெளிவந்திருக்கும் இந்த நூல் ஒரு அற்புதமான முயற்சி. ஆரம்ப இதழென்பதால் ஊரோடு ஒன்றி வெளிவந்திருப்பது தெரிகிறது. இனி வரவிருக்கும் இதழ்களின் இலக்கியப் பக்கங்கள் ஊர் எல்லையைக் கடந்து வெளிவரவேண்டும் என்பது என் அபிப்பிராயம். ஒரு இதழில் வெளிவரும் ஆக்கங்கள் சிறு வட்டத்துள் அடங்கி விட்டால் அது சென்றடையும் தூரம் குறுகியதாகிவிடும். ஒருவகையில் பார்த்தால் அது ஒரு கல்லூரியின் ஆண்டு மலர்போல் ஆகிவிடும். ஆகவே ஒரு நூல் வெளியீட்டின் பக்கங்களில் பாதி ஊர் சார்ந்ததென்றால் மீதி நல்ல தமிழ் படைப்புகளாக இருக்க வேண்டும். அப்படியென்றால்தான் அந்த நூல் பலதரப்பட்டவர்களின் வரவேற்பைப் பெறும் வாய்ப்பு இருக்கிறது. இறுதியாக ஒன்று. இந்த நூல் நோர்வேயிலிருந்து வெளிவருகிறது என்ற பெருமையைப் பெற்றுள்ளது. அப்படியிருந்தும் அந்த நாடு எங்கள் இனப் பிரச்சனையில் காட்டும் அக்கறையைப் பற்றியோ அனுசரணையைப்பற்றியோ உன்னதமான பங்களிப்பைப் பற்றியோ குறிப்பிடாமல் விட்டிருப்பது மனதை நெருடுவதாக உள்ளது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரும்புலிகள் நினைவு

# உதைபந்தாட்டப் போட்டியில் சென் மேரிஸ் அணி வெற்றி!



றூபின்குமார்



வின்சிங்

கரும்புலிகள் நினைவாக வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகம் நடாத்திய உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணிக்கு மின்னொளியில், தீருவில் மைதானத்தில் இப்போட்டி இடம்பெற்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடிய நாவாந்துறை சென்.மேரிஸ் சனசமூக விளையாட்டுக்கழக அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிவாகை சூடியது.

மிகவும் விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் - இறுதிநேரத்தில் தடுப்புக்களை எல்லாம் உடைத்துக்கொண்டு சென்.மேரிஸ் அணி வீரர் அ.பிரபு முதலாவது கோலை அடித்தார்.

இதனால், நிலை குலைந்த றோயல் அணியை மீண்டும் ஊடுருவிய வின்சிங் அனைத்துத் தடுப்புக்களையும் தகர்த்தெறிந்து கோல் கம்பத்திற்கு மிக அண்மையில் சென்று லாவகமாக இரண்டாவது கோலைப் போட்டார்.

இந்த ஆட்டத்தின் நாயகனாக வின்சிங் தெரிவுசெய்யப்பட்டார். சிறந்த கோல் காப்பாளராக சென்.மேரிஸ் அணியின் வீரர் றூபின்குமார் பரிசளித்துக் கௌரவிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Lay & Printed - Judeson. Jaffna, Sri Lanka. 077 7241885

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org